கோகுலம்

GOKULAM

பிப்ரவரி '89 ரூ. 3/-





சரோஜினி தேவி

தோற்றம்: 13.2.1879 மறைவு: 2.3.1950



உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் — பாரதியார்.



புகைப்படம்: எம். நடராஜன்.

கோகுலம்

1989 பிப்ரவரி மாத இதழ்
மலர் : 7 இதழ் : 1
தனிப் பிரதி ரூ. 3/—
ஆண்டுச் சந்தா ரூ. 36/—

கௌரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா.

அருமைச் சிறுவர் சிறுமியரே,

மிகுந்த அன்புடன் புத்தாண்டு வாழ்த்து, பொங்கல் வாழ்த்து அனுப்பிய அனைவருக்கும் மனம் கனிந்த நன்றி.

ஒரு நல்ல செய்தி.

இதுவரை, பெரும்பாலான தொடக்கப் பள்ளிகளில் நூலகங்கள் இல்லை. ஆண்டு முழுவதும், சில பாடப் புத்தகங்களையே பார்த்துப் பார்த்து, படித்துப் படித்து அலுத்துப் போன குழந்தைகளுக்குப் புதிய புதிய புத்தகங்களைப் படிக்க வேண்டுமென்ற ஆசையிருந்தாலும், அந்த ஆசை நிறைவேற வழியில்லாமலே இருந்தது.

இப்போது, 6 வயது முதல் 11 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ஏற்ற புத்தகங்களை, தொடக்கப் பள்ளிகள் பெறுவதற்கான ஏற்பாட்டைக் கல்வித் துறை தொடங்கியிருக்கிறது.


உங்களில் 11 வயதுக்கு மேற்பட்டவர்களில் பெரும்பாலானவர்களுக்குக் கிடைக்காத வசதி, லட்சக்கணக்கான குழந்தைகளுக்குக் கிடைக்கப் போகிறது.

தமிழில் இதுவரை 3000 சிறுவர் புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. ஆயினும், வண்ணப் படங்களையோ, கறுப்பு — வெள்ளைப் படங்களையோ சில நூறு புத்தகங்களில்தான் காண முடிகிறது. அந்தப் புத்தகங்களிலும், 11 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கான புத்தகங்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. தொடக்கப் பள்ளிக் குழந்தைகளுக்கான புத்தகம் என்றால் அது மிகவும் எளிய நடையில் புரியும்படியாக எழுதப்பட்டிருக்க வேண்டும். நிறையப் படங்களுடன் இருக்க வேண்டும். படங்களுடன் கூடிய புத்தகங்களை உயர்ந்த தாளிலே அச்சிட்டால்தான் நன்றாயிருக்கும். 1000 அல்லது 2000 பிரதிகள் அச்சிட்டால் உற்பத்திச் செலவு அதிகமாகும். உற்பத்திச் செலவு அதிகமானால், விலையும் அதிகமாகும். 5000 அல்லது அதற்கு மேற்பட்ட பிரதிகளை அச்சிட்டால்தான் உற்பத்திச் செலவு குறையும்; விலையும் மலிவாக இருக்கும்.


இப்போது, தொடக்கப் பள்ளிகளுக்கு, கல்வித் துறையினர் புத்தகங்கள் வாங்கத் தொடங்கியிருப்பதால், நாளடைவில், நிறையப் புத்தகங்கள் மிகவும் எளிய நடையில், நல்ல படங்களுடனும், நேர்த்தியான அச்சு — அமைப்புடனும் வெளிவருமென எதிர்பார்க்கலாம்.

— அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்கள்




திருப்பத்தூர் திருத்தளியான்



பி. ஆர். பார்த்தசாரதி

பிருந்தாவனக் கதாசிரியர்கள்



எம். சக்திவேல்



கே. புவனேஸ்வரி




எஸ். தாமோதரன்

பிருந்தாவனக் கவிஞர்கள்



பா. சாந்தபாபு



எம். பீர்முகமது



எஸ். சிவக்குமார்




த. ர. இரமணன்

வண்ண அட்டைப்படம் : காசிவிஸ்வநாதன்

மின்மினிக் கதைகள்

கஞ்சனும் அவன் மனைவியும்



ஓர் ஊரில் நஞ்சப்பன் என்னும் கஞ்சன் ஒருவன் இருந்தான். அவன் மனைவி நஞ்சம்மாள் அவனைவிடக் கஞ்சம். ஒரு நாள் இரவு நஞ்சப்பன் வேலையாக வெளியே புறப்பட்டான். கொஞ்ச தூரம் சென்றதும், தன் மனைவி வீட்டுக் கதவைத் தாளிட்டுக் கொண்டாளா, இல்லையா என்ற சந்தேகம் எழுந்தது நஞ்சப்பனுக்கு. உடனே அவன் வீட்டுக்குத் திரும்பி வந்து கதவைத் தள்ளிப் பார்க்க, கதவு உள்ளே தாளிடப்பட்டிருந்ததைக் கண்டான். அவன் கதவைத் தள்ளிய ஓசையைக் கேட்ட நஞ்சம்மாள் வாசற்படிக்கு வந்து, யாரென்று விசாரித்தாள்.

"நான்தான்!" என்ற நஞ்சப்பனின் குரலைக் கேட்ட நஞ்சம்மாள், "எதற்காக வந்தீர்கள்?" என்று வினவினாள். "கதவைத் தாளிட்டுக் கொண்டாயா, இல்லையா என்று பார்க்கத்தான்" என்று கூறிய நஞ்சப்பன், "கதவைத் திறக்காமலேயே பேசுகிறாயே, ஏன்?" என்று கேட்டான்.

அதற்கு நஞ்சம்மாள், "வந்திருப்பது நீங்கள்தானென்று தெரிந்துவிட்டதே. பிறகேன் தாழ்ப்பாளைத் தள்ளிக் கதவைத் திறந்து தாழ்ப்பாளையும், கீலையும் தேய வைக்க வேண்டும்?" என்றவள், "அதுசரி, கதவைத் தாழிட்டேனா இல்லையா என்று பார்க்கவா கால் செருப்புத் தேயத் திரும்பி வந்தீர்கள்?" என்றாள்.

உடனே நஞ்சப்பன், "நான் ஏன் கால் செருப்புத் தேய நடந்து வருகிறேன்? அதைக் கழற்றிக் கையில் பிடித்துக் கொண்டல்லவா வந்திருக்கிறேன்!" என்றான் மிடுக்காக.

தங்கத்தின் மதிப்பு



ஒரு பணக்காரனும் ஓர் ஏழையும் பக்கத்துப் பக்கத்து விடுகளில் வசித்து வந்தனர். ஒருநாள் பணக்காரன் ஏழையிடம், ''என்னிடம் நூறு கட்டித் தங்கம் இருக்கிறது. உனக்குப் பத்துக் கட்டிகள் கொடுக்கிறேன். என்னைப் புகழ்ந்து பேசுவாயா?'' என்று கேட்டான்.

''இதற்காக உங்களைப் புக்ழ வேண்டுமா?'' என்று பதிலளித்தான் ஏழை. ''அப்படியானால் ஐம்பது தங்கக் கட்டிகளைத் தந்தால் என்னைப் புகழ்வாயா?'' என்றான் பணக்காரன்,

''என்னிடம் ஐம்பது த்ங்கக் கட்டிகளைக் கொடுத்தால், உங்களிடம் இருப்பதும் ஐம்பது தங்கக் கட்டிக்ள்தானே! அப்பொழுது நாம் இருவரும் சம அந்தஸ்துள்ளவர்களாக ஆகிவிடுவோம். அதனால் நான் உங்களைப் புகழ மாட்டேன்!'' என்றான் ஏழை. ''சரி, என்னிடம் இருக்கும் எல்லாத் தங்கக் கட்டிகளையும் உனக்குக் கொடுத்தால் அப்பொழுதாவது என்னைப் புகழ்வாயா?'' என்று கேட்டான் பணக்காரன்.

''அவ்வளவு தங்கம் என்னிடம் இருந்தால்,எதற்காக நான் உங்களைப் புகழ வேண்டும்? தங்கம் இருக்கும் என்னைத்தான் நீங்கள் புகழ வேண்டியிருக்கும்!'' என்றான் ஏழை புன்சிரிப்புடன்.

பகவானுக்காகப் பாட்டு




அக்பருக்குத் தம் ஆஸ்தான வித்துவான் தான்ஸேனிடமும், அவரது இசைப் புலமையிலும் மிகுந்த பற்று. ஒருநாள் அவர் தான்ஸேனிடம், ''உமது குரு பாவா ஹரிதாஸை இங்கே வந்து ஒருதரம் பாடச் சொல்ல முடியுமா?'' என்று கேட்டபோது, ''அவர் இங்கே வரமாட்டார். நாம்தான் அங்கே போக வேண்டும்'' என்று தான்ஸேன் கூறினார்.

உடனே அக்பர், சக்கரவர்த்தி என்ற முறையில் இல்லாமல் எளிய உடுப்பு அணிந்து, தான்ஸேனுடன் பாவா ஹரிதாஸின் வீட்டிற்குப் போய் அவரது இசையைக் கேட்டு மெய்மறந்தார்.

சில நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் தான்ஸேன் பாடிய பாடல்களைக் கேட்ட அக்பர், ''என்ன, தான்ஸேன்? உம்முடைய குரு எவ்வளவு அற்புதமாகப் பாடுகிறார்! அவருடைய பாட்டுடன் ஒப்பிட்டால் உம்முடைய பாட்டு சப்பென்றிருக்கிறது!'' என்றார்.

அதற்குத் தான்ஸேன், ''பிரபு, நான் உங்களுக்காகப் பாடுகிறேன். அவர் பகவானுக்காகப் பாடுகிறார். இதுதான் காரணம்!'' என்றார் சிரித்துக் கொண்டே.

சுயநலவாதி



ஒரு தந்தை தன் பிள்ளைகளிடம், ''உங்கள் அம்மா லட்டு செய்திருக்கிறாள். யார் அதைச் சாப்பிடுகிறீர்கள்?'' என்று கேட்டார். ''நான் சாப்பிடுவேன்'' என்றான் மூத்த பையன்.

''சரி, தேன்குழல் செய்திருக்கிறாள். அதை யார் சாப்பிடப் போகிறீர்கள்?'' என்றார் தந்தை மீண்டும். ''நான் சாப்பிடுவேன்'' என்றான் அதே பையன். ''நெய் முறுக்கு செய்திருக்கிறாள். அதை யார் சாப்பிடுவது?'' என்றார் தந்தை. ''அதையும் நானேதான்!'' என்றான் அதே பையன். ''பாயசம் வைத்திருக்கிறாள், அதை?'' என்றார் தந்தை மறுபடியும். ''நானேதான் குடிப்பேன்'' என்றான் அதே பையன் உற்சாகமாக.

''நான் காசு கொடுத்தால் அதை முதலில் வாங்கிக் கொள்வது யார்?'' என்று கேட்டார் தந்தை. ''நான்தான்!'' என்றான் அதே மூத்த பையன்.

''நல்லது, நாளைக்கு நம் தோட்டத்தைக் கொத்திக் களை எடுக்க வேண்டும். அதை யார் செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்டார் தந்தை புன்சிரிப்புடன்.

''எல்லாத் தடவையும் நான் ஒருவன்தானா? வேறு யாருக்காவது கொடுங்களப்பா இந்தச் சந்தர்ப்பத்தை?'' என்றான் சுயநலவாதியான மூத்த பையன் சட்டென்று.

— எஸ். என். கே. ராஜன் தொகுத்த 'சிறுவர் சிந்தனைக் கதைகள் நூறு' என்ற புத்தகத்திலிருந்து — வெளியிட்டோர்: தமிழரசி பதிப்பகம், சென்னை — 4.

என் குழந்தைப் பருவம்

பாரதநாட்டின் தலைசிறந்த கலைஞர் திருமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள். கர்நாடக சங்கீத இசைக்கே தம் வாழ்நாளை அர்ப்பணித்தவர். உலகப் பிரசித்தி பெற்றவர். பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் இவருடைய இனிய குரலையும், உணர்ச்சி மிகுந்த இசையையும் கேட்டு இன்புறுகிறார்கள். நம் நாட்டிலும் அயல் நாடுகளிலும் பொதுப் பணிகளுக்கு நிதி திரட்டுவதற்காகவென்றே பல்லாண்டுகளாகப் பாடி வந்திருக்கிறார். பட்டங்களும், விருதுகளும், பாராட்டுக்களும் இவரைத் தேடி வந்து அடைந்தன. தெய்வ பக்தி மிகுந்தவரான எம். எஸ்ஸின் குழந்தைப் பருவ நினைவுகளைத் தொகுத்து வெளியிடுகிறோம்.



நான் அருள்மிகு மீனாட்சியம்மன் கோவில் கொண்டுள்ள மதுரையில் பிறந்தேன். மதுரையின் தெருக்களில் ஆண்டு முழுவதும் யாத்ரீகர்களும், பக்தர்களும் நடமாடிக் கொண்டிருப்பார்கள். கோவிலுக்கருகில் உள்ள ஹனுமந்தராயன் தெருவில் ஒரு சிறிய வீட்டில் நாங்கள் வசித்தோம். அந்தக் குறுகலான தெருவில் மாடுகள் நடமாடிக் கொண்டிருக்கும். கார்கள் வர முடியாது. ஆயினும், எத்தனையோ இசைக் கலைஞர்கள் எங்கள் வீட்டுக்கு வருவார்கள். என் தாயார் ஷண்முகவடிவு வீணை வாசிப்பதில் புகழ்பெற்றவர். கலைஞர்களால் மதிக்கப்பட்டவர். மதுரைக்கு எல்லா வித்வான்களும் என் தாயாரைப் பார்க்க வருவார்கள். உற்சவ காலங்களில் ஸ்வாமி ஊர்வலம் வரும் போதெல்லாம் நாதஸ்வர வித்வான்கள் எங்கள் தெரு பிரியும் இடத்தில் நின்று நெடுநேரம் இசை பொழிவார்கள்.

நான் இசையிலேயே பிறந்து வளர்ந்தேன். பேசுவதைவிடப் பாடுவது

எம். எஸ். சுப்புலட்சுமி

எனக்கு இயல்பாக வந்தது. என் தாயார் மிகவும் கண்டிப்பானவர். அனாவசியமாக நானோ என் தங்கையோ வீட்டு வாசற்படி இறங்க அனுமதிக்க மாட்டார். என் அண்ணன் சக்திவேலுவுக்கு மட்டும் சற்று சுதந்திரம் அதிகம். சிக்கனமான எளிய வாழ்க்கை நடத்தி வந்தோம். காலையில் கொத்துமல்லி விதை வறுத்துப் போட்ட காப்பி அருந்துவோம். இரவில் அனேகமாக மோருஞ் சாதம் சாப்பிடுவோம்.

ஒருநாள் அதிகாலையில் வாசற்படியில் நான் நின்று கொண்டிருந்த போது,காவி உடை அணிந்து கையில் கமண்டலம் ஏந்திய சந்நியாசி ஒருவர் வருவதைப் பார்த்தேன். உடல் முழுதும் அவர் விபூதி அணிந்திருந்தார். தினமும் அதே நேரத்தில் எங்கள் தெரு வழியாக நடந்து வருவார். ஒரு நாள் என்னைப் பார்த்து, ''குழந்தே! உனக்கு கிரந்தம் சொல்லித் தருகிறேன். கற்றுக் கொள்கிறாயா?'' என்று கேட்டார். நான் சந்தோஷமாகத் தலையை ஆட்டினேன். உடனே அவர் உட்கார்ந்து கொண்டு



கற்றுத் தரத் தொடங்கினார்.

என் தாயாரும் மற்ற உறவினர்களும் எனக்கு யாரோ ஒருவர் பாடஞ் சொல்லித் தருவதைப் பார்த்துத் திகைத்தார்கள். ''க்ருத குட பாயசம்'' என்று அவர் பாடத் தொடங்கினார். எங்களுக்கு ஒரே வேடிக்கையாக இருந்தது. என் அண்ணா சக்திவேல் அவருக்கு 'க்ருதகுட பாயசம்' என்றே பெயர் சூட்டிவிட்டான். முன் பின் தெரியாத ஒருவரிடம் நான் கிரந்தம் கற்றுக் கொள்வதைப் பார்த்துப் பெரியவர்கள் வியந்தார்கள். அவர் தான் என்னுடைய முதல் குரு. அவரிடமிருந்துதான் கிரந்த எழுத்துக்களைக் கற்றுக் கொண்டேன். காசியிலிருந்து வந்த அவர் , திரும்பிப் போகும் வரையில் தினசரி என் வகுப்புக்கள் நடைபெற்றன.

பிறகு அருகிலிருந்த பள்ளியில் ஐந்தாவது வகுப்புவரை படித்தேன். இன்னும் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பியிருப்பார்கள். ஆனால் ஒருநாள் ஒரு டீச்சர் ரொம்ப அடித்து விட்டார். அன்றிரவே எனக்குக் காய்ச்சலும் சுக்குவான் இருமலும் வந்துவிட்டன. அதன்பிறகு நான் பள்ளிக்கூடம்போக வில்லை.

என்னை ரொம்பக் கட்டுப்பாட்டுடன் வளர்த்தபடியால் எனக்கு விளையாட்டுத்தோழிகள்யாரும்கிடையாது.

நாங்கள் மூவரும் வீட்டுக்குள்ளேயே தான் விளையாடுவோம். நாங்கள் ஒரு நூதனமான 'லாலிபாப்' செய்யக் கற்றுக்கொண்டோம். பிற்பகல் நேரத்தில் பெரியவர்கள் ஓய்வெடுக்கும் போது சமையலறைக்குள் சென்று புளி, உப்பு, மிளகாய் இவற்றை எடுத்து நன்றாக இடிப்போம். பிறகு அந்தத் துவையலைக் குச்சிகளின் நுனியில் உருண்டையாகச் செருகி விட்டு ஆசையாகச் சாப்பிடுவோம். நான் அறிந்த ருசியான 'லாலிபாப்' அதுதான்.

கட்டுப்பாட்டுடன் வளர்ந்த எனக்கு ஃபாஷன் (fashion) என்றால் என்ன வென்று தெரியாது. என் தாயார் எனக்கு எண்ணெய் தேய்ப்பார். கருமையான அடர்த்தியான சுருள் சுருளான நீண்ட கூந்தலைத் துணி தோய்க்கும் கல்லின் மீது பரப்பிச் சிகைக்காய் தேய்த்து அலசி விடுவார். எனக்குத் தெரிந்த அழகு சாதனங்கள் குங்குமம், கண்ணுக்கு இட்டுக் கொள்ளும் மை இரண்டும்தான். ஒரு சமயம் பக்கத்து வீட்டுப் பெண், முகத்தில் பௌடர் பூசிக் கொள்வதைப் பார்த்தேன். அவள் என்ன பூசிக்கொண்டாளென்று எனக்குத் தெரியாது. அவளைப் போலவே நானும் செய்ய வேண்டுமென்ற உந்துதலால் சுவரில் கையைத் தேய்த்துத் தேய்த்து முகத்தில் பூசிக் கொண்டேன். இதைப்



பார்த்த என் தாயார் "அசடு! அசடு" என்று சொல்லி ஓர் அறை கொடுத்தார்.

என் தாயார் வீணையும் கையுமாகவே இருப்பார். எனக்கு பாட்டு முறையாகக்கற்றுக்கொடுக்கவில்லை.

ஆனால், இந்தச் சூழ்நிலையே எனக்குப் பயிற்சி அளித்தது. எனக்கு முறையாகப் பாட்டுக் கற்றுக் கொடுக்க ஸ்ரீநிவாஸ ஐயங்கார் என்பவரை ஏற்பாடு செய்தார் என் தாயார்.

துரதிர்ஷ்டவசமாக அவர் நெடு

நாள் வாழவில்லை. ஆனால் எனக்கு ஸரளி வரிசை அலங்காரங்கள் எல்லாம் கற்றுக் கொடுத்துப் பலமான அஸ்திவாரம் போட்டவர் அவரே. சிறு வயதிலேயே இசை என் உள்ளத்தைக் கவர்ந்தது. நான் அதிகமாகக் கச்சேரிகளுக்குப் போனதில்லை. ஆனால்,அரியக்குடி ராமானுஜ ஐயங்கார், மழவராய நேந்தல் சுப்பராம பாகவதர், இவர்களுடைய ஸங்கீதத்தைக் கேட்டு அனுபவித்திருக்கிறேன். இந்த இசை மேதைகள் எங்கள் வீட்டுக்கு வருவார்கள். சில சமயம் என்னைப் பாடச் சொல்லுவார்கள். சில சமயம் எனக்கு ஒரு கீர்த்தனம் சொல்லியும் தருவார்கள்.



வீணை வாசிப்பவர்கள், என் தாயார் கேட்டு மகிழ வேண்டும் என்று விரும்பி எங்கள் வீட்டுக்கு வந்து வாசிப்பார்கள். ஒரு சமயம் ஓர் இளம் வித்வான் வீணை வாசிக்க வந்தார். அவரைப் பார்த்த உடனேயே எனக்கும் சக்திவேல் அண்ணாவுக்கும் இவர் நன்றாக வாசிக்க மாட்டார் என்று தோன்றியது. வாசிக்கத் தொடங்கியதும் எங்கள் எண்ணம் உறுதிப்பட்டது. அவர் அழுத்தந்திருத்தமாக ஸஹானா ராகக் கிருதியை வாசிக்கும் போது 'ராக்ஷஸ பீமா' என்ற இடத்தில் தந்தியை இழுத்து இழுத்து வாசித்தார். நான் என் வாயைக் கையால் மூடிக் கொண்டு சிரித்தேன். என் தாயார் என்னைக் கோபத்துடன் பார்த்தும்கூட என்னால்சிரிப்பை அடக்கமுடியவில்லை. ஏனென்றால் 'ராக்ஷஸ பீமா... டிங் டிங் டிங் டிங்...'' என்ற போது எதிர்பாராமல் தந்தி படாரென்று அறுந்து போயிற்று.

என் தகப்பனார் சுப்பிரமணிய ஐயர் ஒரு வக்கீல். அவர் என்னிடம் ரொம்பப் பிரியம் காட்டுவார். அடிக்கடி குதிரை பூட்டிய சாரட்டில்

அழைத்துக் கொண்டு போவார்.

'நீ நன்றாகப் பாட வேண்டும்!' என்று அடிக்கடி சொல்லி ஊக்கமளித்தார்.

நான் ரேடியோவில் பாட்டுக் கேட்பேன். எங்கள் வீட்டில் ரேடியோ கிடையாது. ஆனால்மாடியில் இருந்த ஜன்னலோரத்தில் நின்றால் அடுத்த வீட்டு ரேடியோ நன்றாகக் கேட்கும். இரவு நேரங்களில் ஹிந்துஸ்தானி இசையைக் கேட்டு மெய்மறந்து நின்றது இன்னும் ஞாபகமிருக்கிறது.

பண்டிட் நாராயண்ராவ் வியாஸ் என்பவரிடம் நான் சில காலம் ஹிந்துஸ்தானி இசையைப்பயின்றேன். அவர் 'ச்யாம சுந்தர மதன மோஹன' என்ற பாடலைக் கற்றுக் கொடுத்தார். பல ஆண்டுகளுக்குப் பின்னர் நான் 'ஸேவா ஸதனம்' என்ற படத்தில் நடித்த போது இந்தப் பாடலைப் பாடியிருக்கிறேன்.

நான் பல மணி நேரங்கள் சாதகம் செய்வேன். நானாகவே ஒரு பயிற்சி செய்யப் பழகிக் கொண்டேன். தம்பூராவைச் சுத்தமாகச் சுருதி சேர்த்து வைப்பேன். தந்திகளை மீட்டும் போது என் உள்ளம் அப்படியே அதில் லயித்துப் போகும். மீட்டுவதை நிறுத்தி விட்டுப் பாடுவேன். சற்று நேரம் பாடிய பிறகு தம்பூராவை எடுத்துத் தந்திகளை மீட்டிப் பார்ப்பேன். சுருதி விலகாமல் பாடியிருக்கிறேனா என்று பார்ப்பேன். இவ்வாறே பாடுவதும்



சுருதி விலகாமல் இருக்கிறதா என்று தம்பூராவை மீட்டிப் பார்ப்பதுமாக ஒரு நாளில் பல தடவைகள் சோதித்துக் கொள்வேன். எந்தக் காரியம் செய்து கொண்டிருந்தாலும் என் உள்ளம் சுருதியிலேயே நின்று பாடிக் கொண்டிருக்கும்.

எப்போது கச்சேரி செய்யத் தொடங்கினேன்? அது மிக இயல்பாக நடைபெற்றது. எனக்கு நினைவுள்ள மேடைக் கச்சேரி அனுபவம் ரொம்ப வேடிக்கையானது. என் தாயார் அருகிலிருந்த ஸேதுபதி பள்ளியில் கச்சேரி செய்யவிருந்தார். வீட்டின் அருகில் நான் மண்ணைப் பிசைந்து விளையாடிக் கொண்டிருந்தேன். திடீரென்று யாரோ என்னைத் தூக்கி நிறுத்திக் கையைத் துடைத்துப் பாவாடையிலிருந்த மண்ணையெல்லாம் உதறிவிட்டுத் தூக்கிக் கொண்டு போய் மேடையில் உட்கார வைத்தார். என் தாயார் என்னைப் பாடச் சொன்னார். தயக்கமில்லாமல் ஏதோ இரண்டு பாட்டுக்கள் பாடினேன் என்று ஞாபகம். சபையோரின் மகிழ்ச்சி ஆரவாரம் என்னை அப்போது பாதிக்கவில்லை.

சிறுமியாக இருந்த போது கிராமபோன் இசைத் தட்டுக்களைக் கேட்பதில் எனக்கு மிகவும் பிரியம். அடிக்கடி போட்டுக் கேட்பேன். நானே இசைத் தட்டுக்களில் பாடுவதாகக் கற்பனை செய்து கொள்வேன். அந்தக் காலத்து எச். எம். வி. நிறுவனத்தின் அடையாளச் சின்னம் எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஒரு நாய் தன் எஜமானனின் குரலைக் கேட்டு அதிசயிப்பதாகப் போட்டிருந்த படத்தைப் பார்த்துவிட்டு, ஒலிபெருக்கியைப் போன்ற வடிவமுடைய எது கிடைத்தாலும் அதை வைத்துக் கொண்டு மணிக்கணக்காகப் பாடுவேன். விரைவில் இந்தக் கனவு நனவாயிற்று. என் தாயாருடன் சென்னைக்குப் போன போது எச்.எம்.வி. நிறுவனம் என் இசையைப் பதிவு செய்தது. எனக்கு அப்போது பத்து வயது.

நாதஸ்வர இசைக் கலைஞரான

பொன்னுஸ்வாமி பிள்ளையவர்கள் என் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும் என்று கூறியது நன்றாக ஞாபகமிருக்கிறது. ரசிகர்கள் என் சாரீரத்தையும், மூன்று ஸ்தாயிகளிலும் சுலபமாக ராக சஞ்சாரம் செய்வதையும் பாராட்டினார்கள். மிருதங்க வித்வான் தக்ஷிணாமூர்த்திப் பிள்ளையவர்கள் தாளத்திலும் எனக்குச் சமமான திறமை இருக்க வேண்டுமென்று விரும்பினார். ஒரு சமயம் பல கடினமான தாளங்களைப் போட்டுக் கொண்டு பாடச் சொல்லிக் கேட்டார். நான் பாடியதும் ரொம்ப சந்தோஷப்பட்டுப் பாராட்டுதலைத் தெரிவித்தார்.

சிறுமியாக இருந்த காலத்திலேயே நம்முடைய தெய்வ வடிவங்களில் எனக்கு ஈடுபாடு உண்டு. பெரியவர்களிடம் பணிவும் மரியாதையும் உண்டு. நல்லது எது நடந்தாலும் அது பெரியோர்களுடைய ஆசீர்வாதம் என்று நினைக்கிற மனப்பக்குவத்தை நான் அடைந்தேன்.

முதன் முதலில் சென்னை மாநகர் சங்கீத வித்வத் சபையில் பாடிய போது (Music Academy) நான் ரொம்ப பயந்தேன். தலைசிறந்த சங்கீத வித்வான்களும் ரசிகர்களும் கூடியுள்ள இடத்தில் பாடுவது லேசான விஷயமா? கச்சேரி நடைபெற்றுக் கொண்டிருந்த போது ரசிகர்கள் ஊக்கம் அளித்தார்கள். பயம் தெளிந்து சந்தோஷமாகப் பாடத் தொடங்கினேன். செம்பை வைத்தியநாத பாகவதர் ஆரம்பம் முதல் முடியும் வரையில் தம் மகிழ்ச்சியைப் பகிரங்கமாகத் தெரிவித்துக் கொண்டே இருந்தார். மற்றவர்களும் 'பேஷ்' என்றும் 'ஸபாஷ்' என்றும் பாராட்டினார்கள்.

வீணை சாம்பசிவ ஐயர் கூறிய வார்த்தைகளை நான் அப்படியே என் நினைவுப் பெட்டகத்தில் வைத்துப் போற்றி வருகிறேன். "சுப்புலக்ஷ்மியா! அவள் சாரீரத்திலேயே வீணையை வைத்துக் கொண்டிருக்கிறாளே" என்று சொன்னார்.

சங்கீத வித்வத் சபையில் நடந்த இந்தக் கச்சேரியே என்னுடைய இசை வாழ்க்கையின் முதல் படியாகும்.



குழந்தைக் கவிஞருக்கு 'தமிழன்னை பரிசு'

தஞ்சையிலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஏழாம் ஆண்டு நிறைவு விழா மிகச் சிறப்பாக, தஞ்சை அரண்மனை வளாகத்தில் 3.1.89—இல் நடந்தது.

அவ் விழாவில், குழந்தை இலக்கியத்திற்குச் சிறப்பாகப் பணியாற்றி வரும் 'கோகுலம்' கௌரவ ஆசிரியரும் குழந்தைக் கவிஞருமாகிய அழ. வள்ளியப்பாவுக்கும், தமிழில் சிறுகதை, நாவல், கவிதை என்று பல துறைகளிலும், சிறப்பாகத் தொண்டாற்றிய 13 எழுத்தாளர்களுக்கும் தமிழக ஆளுநர் டாக்டர். பி. சி. அலெக்ஸாண்டர் 'தமிழன்னை பரிசு' என ரொக்கமாக ரூ. 5000/— வழங்கியதோடு, பட்டயமும், சான்றிதழும் அளித்துப் பொன்னாடை போர்த்தினார்.

ஏற்கெனவே 1982—ஆம் ஆண்டு, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், குழந்தைக் கவிஞருக்கு ரூ. 5000/— மதிப்புள்ள பொற் பதக்கம் வழங்கி, 'தமிழ்ச் செம்மல்' என்ற சிறப்புப் பட்டத்தையும் அளித்துப் பொன்னாடை போர்த்தியது.



போகாத இடந்தனிலே..போக...
...வேண்டாம்.
படக்கதை:-
ஓவியர்:- எஸ்.கே. ராமானுஜம் (ராஜு:-)
ஒரு காட்டிலுள்ள ஏரியில் முதலையொன்று சந்தோஷமாக வாழ்ந்து வந்தது....
ஒரு நாள் முதலை, தன் நீண்ட நாள் நண்பனைச் சந்தித்தது.
நீ.. எப்படி இருக்கிறாய்?
எனக்கு இந்தக்காடு...... கொஞ்சம் கூடப்பிடிக்கவில்லை.
அப்படியா! நீ.. என்னோடு... எங்கள் ஊருக்கு வருகிறாயா?
அச்சிறுவன் முதலையை அழைத்துக் கொண்டு தன் ஊருக்குச் செல்லுகிறான்.
நடு வழியில்..... ஒரு அணில் முதலையைப் பார்த்து "போகாத... இடங்களுக்கு,போகாதே" என்று அறிவுரை கூறியது.
"இனி, இக்காட்டிற்கே திரும்ப மாட்டேன். நான் ஆறு அறிவு படைத்த மனிதர்களுடன் சேர்ந்து வாழப்போகிறேன்.. அற்பப்பயலே! உனக்கும் ஒரு கும்பிடு... இக்காட்டிற்கும் ஒரு கும்பிடு.."


தன் ஊருக்கு அழைத்து வந்த சிறுவன் ஒரு குளத்தைக் காட்டுகிறான். முதலை அதில் மிகவும் சந்தோஷமாக வாழத் தொடங்கியது.
சிறுவன் தினமும், தன் சாப்பாட்டில் பாதியை முதலைக்குக் கொடுப்பான்
முதலை... மனிதர்களுடன் அன்பாகப் பழக எண்ணியது.
அப்பொழுது குளக்கரையில் ஒரு குழந்தை அழுவதைக்கண்ட முதலை அன்பாக அக்குழந்தையின் கன்னத்தை, தன்... நீண்ட நாக்கினால் இதமாகத் தடவியது.
அதனைக்கண்ட குழந்தையின் தாய், ஓ..வென்று அலறினாள்...
முதலை! முதலை!!
முதலை தண்ணீரில் மூழ்கி மறைந்து கொண்டது
நாளைக்குள் இந்த முதலையை எப்படியாவது பிடித்தே.. ஆக வேண்டும்...
முதலை இரவோடு, இரவாக காட்டிற்குத் தப்பிச் சென்று விட்டது.
காட்டில் முதலை, அணிலைச் சந்தித்தது.
“போகாத இடங்களுக்கு, போகாதே’ என்று கூறினாயே, அந்த அறிவுரை எனக்கு இப்பொழுதுதான் புரிந்தது!”



பிருந்தாவனக் கவியரங்கம்



காற்றாடி

பறக்குது வானில் காற்றாடி.
பாராய் நீயும் காற்றாடி.
சீறிச் செல்லுது காற்றாடி.
சிறகு இல்லாத காற்றாடி.

பச்சை நிறத்துக் காற்றாடி.
பாராய் நீயும் காற்றாடி.
போட்டி போடுது காற்றாடி.
போகுது அதுவோ சுழன்றாடி.

வானைத் தொடுது காற்றாடி.
வாண்டுகள் விரும்பும் காற்றாடி
வண்ண வண்ணக் காற்றாடி
வாலைக் கொண்ட காற்றாடி.

வந்து பாராய் கண்ணா நீ
வண்ண வண்ணக் காற்றாடி.

— பா. சாந்தபாபு (20,143), பம்மல்.

உறங்கிய விதை

உறங்கிக் கிடந்த விதையொன்றை
உழுத மண்ணுள் இட்டுவைத்தேன்.

"உறங்குதல் சோம்பல் ஆகுமன்றோ?
உடனே முளைத்து வா" என்றேன்.

"உடனே முளைக்க வேண்டுமெனில்
ஒளியும் வெப்பமும் போதாது.



காற்றுடன் நீரும் மிகத்தேவை
கவனமாய்ப் பார்ப்பாய்" என்றதுவே.

"ஓஹோ! உன் கதை அப்படியா? — என
ஒருநாள் விட்டு மறுநாளாய்த்

தண்ணீர் விட்டேன் தவறாமல்.
கண்போல் பார்த்தேன் கவனமுடன்.

என்னே அற்புதம், பாருங்கள்!
எழுந்தது முளையும் மெதுவாக.

முளையும் விரைவில் செடியாகும்.
மேலும் வளர்ந்து மரமாகும்.

மரத்தில் பூ,காய் கனிகளெலாம்
மகிழ்வுடன் நானும் காண்பேனே!

— வெ. விஜயபாரதி (20,757),
கோ. பூவனூர்.



பட்டாம்பூச்சி

பட்டாம்பூச்சி! பட்டாம்பூச்சி!
எங்கே போகிறாய்?
பறக்கும் போது என்னைநீயும்
கூட்டிச் செல்வாயா?

என்ன என்ன மலர்களில்நீ
தேனை எடுக்கிறாய்?
எங்கே சென்று அவற்றை யெல்லாம்
சேர்த்து வைக்கிறாய்?

காணு கின்ற அதிச யங்கள்
கோடி இருக்குமே?
கதை கதையாய் எனக்குச் சொல்ல
நேரம் கிடைக்குமா?

அந்தி வானச் சிவப்பை யெல்லாம்
பூசிக் கொண்டாயோ?
அழகு மலர் வண்ண மெல்லாம்
சேர்த்துக் கொண்டாயோ?

கலர் கலராய்ச் சட்டை தைத்துப்
போட்டுக் கொண்டாயோ?
காண்பவரின் கருத்தை யெல்லாம்
கவர்ந்து சென்றாயோ?

உன்னைப் போலப் பறந்து திரிய
எனக்கும் ஆசைதான்!
உலக மெல்லாம் சுற்றிப் பார்க்க
எண்ணம் அதிகம்தான்!

பாட மெல்லாம் நன்கு நானும்
படித்து வைக்கிறேன்.
பரீட்சை முடிந்து வந்தி டுவேன்
கூட்டிச் செல்வாயா?

— எம். பீர்முகமது (15,689),
சென்னை — 56.

நூலகம்

நூலகத்தில் சேர்ந்திடுவோம்
நுண்ணறிவைப் பெற்றிடுவோம்.

ஆசான் போலக் கதைகளெலாம்
அள்ளி அள்ளித் தந்திடுமே.

நானும் நீயும் சென்றிடுவோம்
நன்மை பலவும் பெற்றிடலாம்.

நண்பர் கூடிப் படித்திடலாம்.
நல்ல பொழுதாய்க் கழித்திடலாம்.

மாத வார இதழ்களையே
மகிழ்ச்சி யோடு படித்திடுவோம்.

தேசமுள்ள தலைவர்களின்
நேர்மை வழியை அறிந்திடுவோம்.

பழைமை யான நூல்களும்தான்
படிக்க இங்கு கிடைத்திடுமே!

வாங்கிப் படிக்கும் நூல்களையே
மலர்போலக் கருதிக் கையாள்வோம்.

— எஸ். சிவக்குமார் (3318), காயல்
பட்டினம்.





கிளியக்காள்

பச்சைப் பச்சைக் கிளியக்காள் — அவள்
கொச்சைத் தமிழில் பேசுவாள்.

இச்சை கொண்டே அவளை நானும்
இன்ப மாகப் பார்க்கிறேன்.

கீகீ என்றே கத்துவாள் — அவள்
கிடைத்த பழத்தைத் தின்னுவாள்.


அழகுப் பச்சை யானவள் — அவள்
அலகோ சிவப்பு வண்ணமாம்!

அன்பு கொண்டு அவளுமே — நம்மை
ஆனந்தமாய் அழைக்கிறாள்!

அழைப்பைக் கேட்டு நாமுமே — உடன்
அருகில் சென்றால் பறக்கிறாள்.

சிறக டித்துப் பறந்திடும் — அவள்
திரும்பி இன்று வருவளோ!

— ந. ர. இரமணன் (21,319),
அம்பத்தூர்.



வெற்றிலை

பச்சை நிறத்து வெற்றிலை!
பாட்டி போடும் வெற்றிலை!
பாக்கு வெள்ளைச் சுண்ணாம்பும்,
சேர்த்துப் போடும் வெற்றிலை!

கொடியில் பறிக்கும் வெற்றிலை!
கடையில் விற்கும் வெற்றிலை!
வீடு வந்த விருந்தினர்க்கு
விரும்பிக் கொடுக்கும் வெற்றிலை!

— துரை. கரிகாலன் (17,456), வடலூர்.

தமிழ்நாடு அரசு சிறு சேமிப்புத் துறை

சஞ்சாயிகா



பள்ளிக்கூடத்தில்...
கல்வி கற்கவும்,
எதிர்கால நலனுக்காகச்
சேமிக்கவும்

மேல் வகுப்பிற்குத் தகுந்தவளாக அவள் தேர்ச்சி பெற்று விட்டாள். புதிய பள்ளிக்கூடம் ஒன்றில் சேர்ந்து விட்டாள். புதிய புத்தகங்கள் வாங்குவாள். எனினும், மூன்றாம் வகுப்பு முதலே ஒரு புத்தகம் அவளது அபிமானப் புத்தகமாக இருந்து வந்தது. ஆம், அதுதான் அவளது சஞ்சாயிகா பாஸ் புத்தகம்.

இன்றையச் சிறுவர்கள் விவேகத்தில் முதிர்ச்சி அடைந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கெனச் சில இலட்சியங்கள் உள்ளன. சமாளிக்க வேண்டிய போட்டிகள் உள்ளன. எனவே, எதிர்காலத்திற்குத் திட்டமிட வேண்டியது என்பது மிகவும் முக்கியமானதாக ஆகிறது. சிறந்த முறையில் திட்டமிட அவர்களுக்குச் சஞ்சாயிகா உதவுகிறது.

பள்ளிச் சிறுவர்களுக்கென ஒரு சிறு சேமிப்புத் திட்டம் மட்டுமல்ல சஞ்சாயிகா. நிதி நிர்வாகத்திற்கு ஒரு பயிற்சியும் கூட.

இப்பொழுது, எதிர்கால நலனுக்காகப் படிக்கப் பள்ளி செல்லும் சிறுவர்கள் அவர்களது எதிர்கால நலனுக்காகச் சேமிக்கவும் முடியும்.

**அவர்கள் சேமிக்கக்
கற்றுக் கொள்ளட்டும்**

**கற்றுக் கொள்வதற்காக
அவர்கள் சேமிக்கட்டும்**

மேலும் விபரங்களுக்கு பள்ளி ஆசிரியர்களை அணுகவும்

இயக்குநர்
சிறு சேமிப்புத்துறை
143, அண்ணா சாலை,
சென்னை-600 002.
தொலைபேசி: 840223|840003

DIPR/18/MS/89 Efficient

வண்ணத் தோட்டத்தின் வானம்பாடிகள்

6

— பூதலூர் முத்து

முன் கதைச் சுருக்கம்

பாரதி மேல்நிலைப் பள்ளி அன்பும் ஆர்வமும் துள்ளும் ஓர் அழகிய கல்விக்கூடம். பஞ்சாப்பிலிருந்து புதுவைக்கு மாற்றலாகி வரும் துணை கலெக்டர் பல்பீர் சிங், தம் மகன் பகத்சிங்கை அங்கு சேர்க்கிறார். அரவிந்தன், ராமு, பீட்டர், முகம்மது அலி ஆகியோருடைய இனிய நட்பு பகத்துக்குக் கிடைக்கிறது.

ஒரு நாள் அரவிந்தன், பகத் வீட்டில் நண்பர்களோடு விளையாடிக் கொண்டிருக்கிறான். பள்ளி ஆய்வுக்கூடத்தில் காமிரா, பைனாகுலர், டெலஸ்கோப், திருட்டுப் போன செய்தியை அறிந்து பள்ளிக்கு ஓடுகிறான். 'அரவிந்தனும் அவனுடைய நண்பர்களும்தான் இந்தத் திருட்டுக்குக் காரணம்' என்று வந்த மொட்டைக் கடிதத்தைத் தலைமை ஆசிரியர் தமிழன்பன் அவனிடம் காட்டுகிறார். அதைக் கண்டு அவன் திகைப்படைகிறான். குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க அவனும் நண்பர்களும் தீவிரமாகச் செயல்படுகிறார்கள்.

பகத் வைத்திருக்கும் அழகிய 'அட்லஸ்' சைக்கிளை 'ஓட்டிப் பார்க்கிறேன்' என்று வேலப்பன் என்ற மாணவன் கேட்கிறான். அவனுடைய பருத்த உடம்பைக் கண்டு பகத் மறுக்கிறான். மறுநாள் பள்ளிக்கூடத்தில் அந்த சைக்கிள் காணாமற் போகிறது.

ராமு, வேலப்பனுடைய தந்தை நடத்தும் 'கோமதி நியூஸ் ஏஜன்சி'யில் பள்ளிக்கூடம் இல்லாத நேரத்தில் வேலை பார்த்து வருகிறான். 'அரவிந்தனுடன் சேராதே' என்று அவனை வேலப்பன் கண்டிக்கிறான். ராமு மறுக்கிறான். ராமுவின் பிறந்த நாள் அன்று பலரும் பரிசு வழங்குகிறார்கள். வேலப்பன் தன் தந்தையிடம் அவனைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் சொல்கிறான். அவர் எரிச்சலடைந்து அவனை வேலையை விட்டு நீக்குகிறார். சோர்ந்து போயிருந்த அவனுக்கு அரவிந்தனின் தந்தை தியாகராஜன் அன்புக்கரம் நீட்டுகிறார். தம்முடைய ஆலையில் இருக்கும் சிறுவர் நூலகத்தில் மாலை நேரத்தில் வேலை பார்க்கும்படி சொல்கிறார். நூலகம் புதுப் பொலிவு பெறுகிறது.

பள்ளியில் மாணவர்களுடைய சைக்கிள் டைனமோ, விளக்கு, மணி திருட்டுப் போகின்றன. பகத் ஆசையோடு வைத்த பூந்தொட்டிகள் நாசம் செய்யப்படுகின்றன. 'எங்கேயோ ஒரு களை வளர்ந்து வருகிறது. அதைக் கண்டுபிடித்துக் களைய வேண்டும்' என்று தமிழன்பன் முனைப்புடன் சிந்திக்கிறார். பள்ளியின் முன்னேற்றம் தொடர்பாக ஆசிரியர்களுடன் அவர் ஆலோசித்துக் கொண்டிருக்கும் போது முகம்மது அலி பதற்றத்தோடு வந்து அவர் முன்னால் நிற்கிறான்.

இனி, கதையைத் தொடர்ந்து படியுங்கள்.

'முகம்மது அலி, என்ன விஷயம்? ஏன் இப்படிப் பதற்றத்தோடு ஓடி வந்திருக்கிறாய்?'' என்றார் தமிழன்பன்.

அவன் ஒரு பொட்டலத்தைப் பையிலிருந்து எடுத்து அவரிடம் கொடுத்தான்.

''சார்! இந்த டைனமோவை யாரோ என் புத்தகப் பையில் வைத்திருக்கிறார்கள்''

அச்சத்தில் குரல் நடுங்கியது.

''நடந்ததை நிதானமாகச் சொல்''

''நான் இடைவேளை நேரத்தில் வெளியே வந்துவிட்டு மணி அடித்த பின்னால் வகுப்புக்குச் சென்றேன். மூன்றாம் பிரிவேளைக்குரிய புத்தகத்தை எடுக்கும்போது கையில் இது தட்டுப்படவே எடுத்துக் கொண்டு வந்தேன். இடை வேளை நேரத்தில் யாரோ இதை வைத்திருக்கிறார்கள்''

அவர் டைனமோவை எடுத்து மேசையின் உள்ளறையில் வைத்துக்



கொண்டார்.

''அலி! பதற்றப்படதே! நாம் எல்லாரும் விழிப்பாக, குற்றவாளியைக் கண்டுபிடித்து விடலாம். இடைவேளை நேரத்தில் யாராவது ஒருவர் வகுப்பில் காவலுக்கு இருங்கள்'' என்று கூறி அனுப்பி வைத்தார்.

அறையை விட்டு வெளியே வந்தார். வகுப்பறைகளையும்சுற்றுப்புறங்களையும் பார்த்துவிட்டு வரும் நோக்கில் புறப்பட்டார்.

அவர் வருவதை அறியாத ஆசைத்தம்பி, தண்ணீர் குடித்து விட்டு வருவதாக அனுமதி வாங்கிக் கொண்டு வகுப்பை விட்டு வெளியே வந்திருந்தான். குழாயை நோக்கிப் போவது போல் போக்குக் காட்டிவிட்டு பகத்தின் வகுப்புக்கு முன்னால் இருந்த பாத்தி இப்போது எப்படி இருக்கிறது என்று கவனித்துக் கொண்டிருந்தான். தமிழன்பன் அதைக் கவனிக்கத் தவறவில்லை.

''ஆசைத்தம்பி!''

கம்பீரமான அந்தக்குரலைக்கேட்டு ஒரு கணம் அதிர்ந்து போய்விட்டான்.

''வகுப்பில் பாடம் நடக்கிறது. நீ ஏன் இங்கே நின்று கொண்டிருக்கிறாய்?''

தாகத்துக்குத் தண்ணீர் குடிக்கவந்த 'செய்தி'யைச் சொன்னான்.


''குழாய் அங்கே அல்லவா இருக்கிறது, இங்கேஏன் நின்றுகொண்டிருக்கிறாய்?''

அந்தக் கேள்வி அவனைத் திகைப்பில் ஆழ்த்தியது.

''வந்துசார்..'' என்று இழுத்தான். அவன் எதையோ மறைக்கிறான் என்பதை அவர் உறுதிப் படுத்திக் கொண்டார். அவனைத் தம்முடைய அறைக்கு அழைத்துச் சென்றார். அவனுடைய இதயம் வேகமாகத் துடிக்க ஆரம்பித்தது.

''ஆசைத்தம்பி! பரவாயில்லையே.. இன்று சீருடையில் வந்திருக்கிறாயே. பாராட்ட வேண்டிய செய்தியாயிற்றே இது!'' என்றார்.

வசதியைக்காட்டப்பல்வேறு உடைகளை அணிந்து வரவேண்டும் என்பது அவனுடைய ஆசை. பல தடவை பல பொய்களைக் கூறி சீருடையைத்



தவிர்த்து வந்தான் அவன். அதற்காகத் தண்டத்தொகையும் கட்டியிருக்கிறான்.

அவனுடைய சீருடையைப் பார்த்தவர், அவனுடைய முழங்கால் மூட்டுப் பகுதியைக் கவனிக்கத் தவறவில்லை. அங்கே கால் சட்டை சிறிது கிழிந்து இரத்தம் உறைந்திருப்பதைக் கண்டார். உடனே முகத்தையும் கவனித்தார். அந்தக் கறுத்த முகம் கவலையிலும் குழப்பத்திலும் ஆழ்ந்திருப்பதைக் கண்டு கொண்டார்.

"இந்தக் காயம் எப்படி ஏற்பட்டது?"

அவருடைய அந்த வினாவைக் கேட்டு ஒரு நொடி திகைத்துப் போய் விட்டான்.

உடனே சமாளித்துக் கொண்டு,

"எங்கள் வகுப்புக்கு முன்னால் பூந்தொட்டிகள் வைத்தோம். ஒரு தொட்டி தவறி விழுந்து விட்டது. அப்போது காயம் ஏற்பட்டது" என்றான்.

"அப்போது உன்னோடு யார் இருந்தார்கள்?"

ஒரு நொடி யோசித்தான்.

"நந்த கோபால் இருந்தான் சார்!" என்றான்.

'இனிமேல் நந்தகோபாலைப் பார்த்துச் செய்தியைச் சொல்ல வேண்டும்' என்று நினைத்துக் கொண்டான்.

"சரி, நீ இங்கேயே நில், இதோ வருகிறேன்" என்றவர், விளையாட்டுத் திடலுக்கு அருகில் அமைந்திருந்த பத்தாம் வகுப்பு 'ஏ' பிரிவை நோக்கிச் சென்றார்.


ஆசைத்தம்பிக்கு நெஞ்சு 'திக்திக்' என்று அடித்துக் கொண்டது.

ஆசைத்தம்பி சொன்னதைப் போலவே அங்கு புதிதாகச் சில பூந்தொட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. புதிய மண் வெட்டப்பட்டுப் பரப்பப்பட்டிருந்ததையும் பார்த்தார். அப்படியே அருகிலிருந்த வகுப்பறைகளையும் பார்வையிட்டு விட்டுத் திரும்பினார்.

"ஆசைத்தம்பி... நீ போகலாம்" என்றார்.

அவன் அறையை விட்டு வெளியே வந்தான். அவனிடமிருந்து நிம்மதிப் பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது.

பீட்டரை உடனே சந்திக்க வேண்டும் என்று எண்ணிய அரவிந்தனுக்கு ஏமாற்றமாகப் போய் விட்டது. அவன் அன்று பள்ளிக்கு வரவில்லை. தலைமை ஆசிரியர் அவனுடைய பேனாவைக் காட்டியதற்கும் அவன் வராததற்கும் தொடர்பு இருக்குமோ?



அவன் ஏன் இதைச் செய்ய வேண்டும்?

அவனுக்குக் குழப்பமாக இருந்தது.

முகம்மது அலி. அவனிடம் வந்தான். டைனமோ விஷயத்தைச் சொன்னான். 'நம் நண்பர்கள் ஒவ்வொருவர் மீதும் இப்படிப் பழி வருகிறதே!' என்று வருந்தினான் அவன்.

பீட்டரைப் பற்றி அலியிடம் சொன்னான். அதைக் கேட்க அலிக்குத் துன்பமாக இருந்தது.

''அரவிந்தா! உயிர் போனாலும் பீட்டர் இப்படியெல்லாம் செய்ய மாட்டான். அவன் எனக்கு எத்தனை பூச்செடிகள் கொடுத்தான் தெரியுமா? அது மட்டுமல்ல; அவனே எங்கள் வீட்டுத் தோட்டத்துக்கும் வந்து அவற்றை வைத்து விட்டுப் போனான்.''

''அது இருக்கட்டும். பகத் ஆசையாக வைத்து வளர்த்த பூச் செடிகளைப் பிடுங்கி முறித்துப் போட்டு விட்டுப் போயிருக்கிறார்களே!''

''பீட்டர் நம் பள்ளியில் போட்டிருக்கிற பாத்திகள் எத்தனை என்று தெரியுமா உனக்கு? அவன் ஒரு போதும் இதுபோன்ற மோசமான செயலைச் செய்ய மாட்டான். இது உறுதி! இன்று பள்ளிக்கு வரவில்லை என்பதற்காகவே அவனை மோசமானவன் என்று சொல்லுவதா? பேனாவைப் பற்றிச் சொன்னாய். பள்ளி விட்டதும் அவனைப் போய்ப் பார்ப்போம். ஏதாவது செய்திகள் கிடைக்கும்.''

அலியின் பதில் அரவிந்தனுக்கு அமைதி தந்தது.

பீட்டர் நல்லவன். அப்படியானால் இதைச் செய்தவர்கள் யார்?

தலைமையாசிரியரின் அனுமதியோடு ராமுவை அழைத்துக் கொண்டு அமைதியாகப் பள்ளிக்கு வெளியே வந்தான்.

பள்ளிக்குத் தெற்கே சற்றுத் தூரத்தில் இருந்த மாந்தோப்பை நோக்கி அவர்கள் வேகமாக நடந்தார்கள்.

''அரவிந்தா! இந்த நேரத்தில் நான்குகணக்குப்போட்டாலும்போடலாம். இதில் ஏதாவது பயனுண்டு என்று நினைக்கிறாயா?'' என்று கேட்டான் ராமு.

''ராமு, நிச்சயம் பயன் உண்டு! யாருக்கும் தெரியாமல் காவல்காரரின் பையனைச் சந்தித்து நிதானமாகக் கேட்டேன்.''

''அவன் என்ன சொன்னான்?''

''வந்தவர்கள் அவனை மிரட்டியதற்காகப் பயந்து ஓடினாலும் ஒரி

டத்தில் ஒளிந்து கொண்டு அவர்கள் போன திசையை — இடத்தைக் கவனித்திருக்கிறான்.''

அரவிந்தனுடைய கூர்மையான சிந்தனை செயல்கள் ராமுவுக்கு வியப்பளித்தன. காவல்காரரின் பையனுடைய செயலையும் அவன் பாராட்டினான்.

அரவிந்தன் ராமுவிடம் இரகசிய மாகச் சொன்னான்: ''அலிக்கு வேறு வேலை கொடுத்திருக்கிறேன். பள்ளி யில் இப்போது அவன் விழிப்பாக இருந்து சிலரைக் கண்காணித்துக் கொண்டிருப்பான்.''

''பீட்டர் வந்திருந்தால் அவனுக் கும் ஒரு வேலை கொடுத்திருப்பாய்!'' என்று சிரித்துக் கொண்டே சொன் னான் ராமு.

மாந்தோப்பை அடைந்து விட்டார் கள்.

கிழக்குப் பக்கமாகத் திரும்பி- தோப்பின் உள்ளே சென்றார்கள்.

சண்டை போட்டுக் கொண்ட பிள் ளைகளைப் போல் மரங்கள் அங்கு மிங்குமாகச் சிதறி நின்று காட்சி யளித்தன. காற்றில் கிளைகள் ஆடிக் கொண்டிருந்தன. இலைகள் சலசலத் துக் கொண்டிருந்தன.

தோப்பின் கடைசிப் பகுதிக்கு வந்து விட்டார்கள்.

அடி வேரையும் உச்சிக் கிளையை யும் மரப் பொந்துகளையும் பார்த்துக் கொண்டே வந்தார்கள்.

கீழே குவிந்து கிடந்த சருகுக் குவி யல்களையும் அவர்கள் விட்டு வைக்க வில்லை.

ராமு அவசரமாக அரவிந்தனைக் கையசைத்து அழைத்தான்.

''அரவிந்தா! உன் திட்டம் வெற்றி! இந்தப் பொந்தைப் பார்!''

ஒரு துணிப் பந்து அங்கே தென் பட்டது. எடுத்துப் பார்த்தார்கள். இரண்டு சட்டைகள்! தலைமை ஆசிரியரிடம் காவல்காரர் தெரிவித்த சிவப்புக் கோடு போட்ட சட்டையும் மஞ்சள் நிறச் சட்டையும்!

''சீருடைக்குரிய நீலநிறக் கால் சட்டையைப் போட்டுக் கொண்டு மேல் சட்டையை மட்டும் மாற்றிக் குழப்பம் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.



யாரும் கண்டுபிடிக்க முடியாதவாறு சீருடைக்குரிய வெளிர் நீலச் சட்டையை உடனே போட்டுக் கொண்டு இவற்றைப் பொந்தில் மறைத்து வைத்திருக்கிறார்கள். உணவு இடைவேளையின் போதோ மாலை பள்ளி விட்டதுமோ அவர்கள் இங்கு வரக் கூடும்'' என்ற அரவிந்தன், அந்த இரண்டு சட்டைகளையும் தான் கொண்டு வந்திருந்த சிறு பையில் சுருட்டி வைத்துக் கொண்டான்.

''தலைமை ஆசிரியரிடம் நாம் கொண்டு போய்க் கொடுக்கும் இந்தத் தடயம் நாம் எடுத்துக் கொண்டு வருகிற முயற்சிகளில் ஒரு திருப்பு முனையாக இருக்கும்'' அரவிந்தன் நம்பிக்கையோடு சொன்னான்.


சுற்று முற்றும் பார்த்தவாறு அவர்கள் பள்ளியை நோக்கி விரைந்தார்கள்.

(தொடரும்)




சித்திரப் புதிர்! 33

ஆழி




1 மேலே உள்ள படத்தில் விடுபட்டிருக்கும் இடத்திற்கு எந்தப் பகுதி பொருத்தமாக இருக்கும்?




2 இந்த வைரத்தில் எத்தனை முக்கோணப் பட்டைகளைக் கண்டு பிடிக்கலாம்?



3 இது எந்த கண்டம்? சரியான திசையில் திருப்பிப் பாருங்கள்.




4 சிலை வடிவில் இருப்பது யார் என்று தெரிகிறதா?



5 இது எந்த நாட்டு நடனம்?

விடை வேறுபக்கம்

பிஞ்சுவனக் கதையரங்கம்



செய்யும் தொழிலே தெய்வம்

கே.புவனேஸ்வரி(4633)

அந்து கடிகாரத்தைப் பார்த்தான். இரவு நேரம். மணி ஏழு அடித்தது. "இன்று வரட்டும் அம்மா, ஒரு கை பார்த்து விடலாம்" மனத்திற்குள் கருவினான் அந்து.

எட்டு மணி ஆனது. வாசல் கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது. கையில் இருந்த புத்தகத்தை கீழே வைத்து விட்டுக் கதவைத் திறந்தான். அம்மா தான் வந்திருந்தாள். அந்து முகத்தை 'உர்' என வைத்துக் கொண்டு அறை மூலையில் போய் உட்கார்ந்தான். அம்மா முகம் கழுவி விட்டு உடை மாற்றிக் கொண்டு இரவு சமையலைக் கவனிக்க சமையலறைக்குள் நுழைந்தாள். அந்துவைப் பார்த்துக் கொண்டே சமையலை முடித்தாள். அன்புடன் சாப்பிட அழைத்தாள்.

"அந்து! அந்துக் கண்ணா....!"

"சே! சே! என்ன அம்மா! என் மனத்தை புரிந்து கொள்ளவே மாட்டேங்கிறாளே!" — மனத்திற்குள் வருந்தினான் அந்து.

"அந்து! வாப்பா! சாப்பிடலாம். என்ன கோபம் என் சின்னக் கண்ணனுக்கு?" — ஆதரவுடன் கேட்டாள் அந்துவின் அம்மா.

"போம்மா! நீ இனிமேல் வேலைக்குப் போகக் கூடாது" — வழக்கமான பல்லவியைப் பாடினான் அந்து.

"அந்துவிற்கு எப்படிப் புரிய வைப்பது?" புரியாமல் தவித்தாள் அந்துவின் அம்மா.

"அந்து! ஏம்பா தினம் தினம் இப்படிச் சொல்லி என்னை வருத்தப்பட வைக்கிறாய்?"

"அம்மா! தினமும் என் கூடப் படிக்கும் சுரேஷ் பள்ளியில் இருந்து வந்ததும், அவனுடைய அம்மா தயாரா பலகாரமும், காப்பியும் தருகிறாளாம். அன்பா அவனோட பேசுவாளாம். அவனுக்கு அப்பா கூட இருக்கார். எனக்கு அப்பாவும் இல்லே. எனக்கு நீ இந்த நர்ஸ் வேலைக்குப் போறதே பிடிக்கலை" பொரிந்து தள்ளி விட்டான் அந்து.

"அந்து, இங்கே பார். உனக்கு அப்பா இல்லை. இந்த நிலையில் நான்தானே வேலைக்குப் போய்ச் சம்பாதிக்கணும்? இதையெல்லாம் யோசித்துப் பாருடா கண்ணா" —

பிஞ்சு உள்ளத்திற்குப் புரிய வைக்க முயன்றாள் அந்துவின் அம்மா.

''சரி, நீ வேலைக்குப் போ. வேண்டாம்னு சொல்லலை. ஆனால் இந்த நர்ஸ் வேலைக்குப் போகாதே. அந்த டெட்டால் நாற்றமும், சே.. சே!'' அருவருப்புடன் பேசினான் அந்து.

அந்துவின் அம்மா ஒரு முடிவோடு, 'சரி' என்று சொல்லி விட்டு அந்துவுடன் உட்கார்ந்து சாப்பிட ஆயத்தமானாள். இரவு படுக்கும் முன் அந்துவிற்கு மறுநாள் விடுமுறை தானா என்று உறுதிப்படுத்திக்கொண்டாள்.

மறுநாள், அந்துவின் அம்மா அந்துவைத் தன்னோடு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றாள். பம்பரமாகச் சுழன்றாள், அந்துவின் அம்மா. அந்து பாவமாக அம்மாவையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்.

''ஆ! அம்மா....! வலிக்கிறதே'' — உடம்பு முழுதும் புண்ணாகி இருந்த ஒரு வயதான நோயாளி முனகினார். அந்துவின் அம்மா அன்பும் ஆதரவும் கலந்த இனிமையான குரலில் அவருக்குப் பதிலளித்தபடி பஞ்சினால் சீழைத் துடைத்தாள். மருந்து தடவி விட்டாள். அந்த நோயாளி அவளை நன்றியோடு பார்த்தார். ''நல்லா இரும்மா'' — வாய்விட்டு வாழ்த்தினார் அந்த வயதான நோயாளி.


மாலைப் பொழுதானது. அந்துவிற்காக, சீக்கிரமாகவே மருத்துவமனையிலிருந்து புறப்பட்டாள் அந்துவின் அம்மா. அந்துவை அழைத்துக் கொண்டு கடற்கரைக்கு வந்தாள். அவனுக்குப் பிடித்த பட்டாணி சுண்டல் வாங்கிக் கொடுத்தாள். மெதுவாக அவனுடன் பேச ஆரம்பித்தாள்.

''அந்து! இன்னிக்கு மருத்துவமனையிலே என்னைப் பார்த்தியா? நோயாளிகளுக்கு நான் உதவி செய்யும் போது அவர்கள் எனக்கு நன்றி சொல்கிறார்கள். சிலர் வாழ்த்துகிறார்கள். நமக்கு 'செய்யும் தொழில் தானப்பா தெய்வம்' எல்லோருமே நோயாளியின் உடம்பைக் கண்டு அருவருத்து ஒதுங்கினால் யார்தான் நோயாளியைக் கவனிப்பது?'' — சொல்லி விட்டுச் சிறிது நேரம் அந்துவையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் அவன் அம்மா.

அந்துவிற்கு ஏதோ புரிவது போல் இருந்தது. ஆனால், முழுமையாகப் புரியவில்லை.

''அந்து! உனக்கு இன்னும் புரிய வைக்கணும்னா நான் ஒண்ணு சொல்றேன். கேளுப்பா. இப்ப எனக்கே உடம்புக்கு வருது. கீழே விழுந்து அடி பட்டு விட்டதா வச்சுக்கோ. அதிலே வரும் இரத்தத்தையும், சீழையும் பார்த்து டாக்டர் அருவருத்து ஒதுங்கிட்டா யார் கவனிப்பா? எனக்கு எப்படி இருக்கும்? அப்போ உன் மனசு எப்படி வருந்தும்?'' — சொல்லி விட்டு மீண்டும் அந்துவின் முகத்தை ஆராய்ந்தாள் அவன் அம்மா. அவனுடைய முகம் தெளிந்திருந்தது. அவனுடைய அம்மாவிற்குத் திருப்தியாக இருந்தது. இருவரும் வீடு வந்தடைந்தனர்.

இப்போதெல்லாம் அந்து, அம்மா வரும் போது சிரித்த முகத்துடன் வரவேற்கிறான். 'செய்யும் தொழிலே தெய்வம்' என்பதைப் புரிந்து கொண்டான் அந்து.



மதுரபுரி என்ற நாட்டை ஆண்டு வந்த மன்னர் தனசேகரன் மிகவும் விசித்திரமானவர். தம்மு

டைய ஆட்சியின்கீழ் வசிப்பவர்களில் மிகவும் சாமர்த்தியமாகப் பொய் சொல்லுவதில் வல்லவர் யார் என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்பட்டார். அமைச்சரை அழைத்து நமது நாட்டில் யார் சாமர்த்தியமாகப் பொய் சொல்லுகிறார்களோ அவர்களுக்கு ஒரு குடம் நிறையத் தங்க நாணயங்கள் தருவதாகத் தண்டோரா போட்டு அறிவிக்குமாறு ஆணையிட்டார்.

இவ்விஷயம் ஊர் மக்கள் அனைவருக்கும் தெரிந்தது. ஒவ்வொருவரும் தங்களுடைய புளுகுத் திறமையை மன்னரிடம் நிரூபித்துக் காட்ட வந்த வண்ணமிருந்தனர். ஒருவரும் மன்னர் விரும்பியபடி புளுகவில்லை. அதனால் பரிசுப் பொருள் யாருக்கும் கிடைக்கவில்லை.

கடைசியாக ஓர் இளைஞன் அரண்மனைக்கு வந்தான். அவன் சாதாரண உடை அணிந்து பைத்தியக்காரன் போல் காணப்பட்டான்.

அவனை நோக்கி மன்னர், "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார். அதற்கு அவன், "மன்னர் பெருமானே, என்னைத் தெரியவில்லையா? ஒரு சமயம் தங்களிடம் ஒரு குடம் நிறையத் தங்க நாணயங்கள் கொடுத்திருந்தேனே, அதை வாங்கிச் செல்லவே வந்தேன்" என்றான்.

மன்னர், "என்ன உளறுகிறாய்! உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா? நான் உன்னை முன் பின் பார்த்ததுமில்லை. உன்னிடம் எதுவும் வாங்கவுமில்லை" என்று மிகுந்த கோபத்துடன் கூறினார்.

"மன்னர் பெருமானே, இந்த ஏழையிடம் கை நீட்டி வாங்கிய பொருளைத் தர மறுக்கலாமா? இது நியாயமா?" என்று கேட்டான் இளைஞன். மன்னருக்குக் கடுங்கோபம் வந்துவிட்டது.

"மடையனே, யாரைப் பார்த்து நீ கேட்கிறாய் என்பது தெரியவில்லையா? இந்தப் பொய்க்கு உனக்கு மரண தண்டனைதான் கிடைக்கும்" என கூச்சலிட்டார்.

"மகாராஜா அவர்களே, கோபப்படாமல் நன்றாக யோசனை செய்யுங்கள். நான் கூறுவது பொய்யென்று தாங்கள் நினைக்கிறீர்களா?" எனக் கேட்டான்.

"சந்தேகமென்ன? உன்னைப் போல் கடைந்தெடுத்த பொய்யன் உலகில் இல்லை" என்றார் அரசர்.

இளைஞன் சிரித்துக் கொண்டே, "மன்னர் பிரான் அவர்களே, அப்படியானால் தாங்கள் வாக்களித்தபடி, சிறந்த பொய்யனான எனக்கு ஒரு குடம் தங்கக் காசை அன்பளிப்பாகத் தாருங்கள்" என்று கேட்டான்.

மன்னன் திகைப்படைந்தான். தன் வாயாலே சொல்ல வைத்து விட்டானே என எண்ணி, "இளைஞனே, நான் வாய் தவறி ஏதோ சொல்லி விட்டேன். நீ பொய் சொல்லவில்லை. உண்மைதான் சொல்லுகிறாய் என நினைக்கின்றேன்" என்றார்.


உடனே இளைஞன் மீண்டும் உரத்த குரலில் அட்டகாசமாகச் சிரித்தான். "மன்னர் அவர்களே, நான் பேசுவது உண்மை என்று தாங்கள் ஒப்புக் கொண்டதற்கு மிக்க மகிழ்ச்சி. அதாவது நான் தங்களுக்கு ஒரு குடம் நிறைய தங்க நாணயங்களைத் தந்ததாக ஒப்புக் கொண்டீர். ஆகவே, தங்க நாணயங்கள் நிரம்பிய குடத்தைத் திருப்பிக் கொடுங்கள்" என பணிவுடன் வேண்டினான்.

மன்னர் இளைஞனிடம் மீண்டும் வசமாகச் சிக்கிக் கொண்டதை உணர்ந்து அவன் சாமர்த்தியத்தை மெச்சி அவ்விளைஞனுக்கு ஒரு குடம் நிறையத் தங்க காசுகளை அன்பளிப்பாக வழங்கினார். நாட்டிலே கவனிக்க வேண்டிய எத்தனையோ நல்ல காரியங்கள் இருக்க, அவற்றையெல்லாம் கவனிக்காமல், அண்டப் புளுகனுக்குப் பரிசளிக்க வந்த அந்த முட்டாள் அரசரை நினைத்து நாடே சிரித்தது! அவனுக்குப் புத்தி கற்பித்த இளைஞனைப் பாராட்டியது!

சித்திரப் புதிர் — 33 — விடை:

1. உ.
2. 61 முக்கோணங்கள்.
3. ஆப்பிரிக்கா.
4. ஆண்டாள்.
5. இந்தோனேஷியா (பாலி).

துடுக்குத்தனம்



எஸ்.தாமோதரன் (17959)

குமார் பள்ளிக்கூடம் விட்டுப் போய்க் கொண்டிருந்தான். அதற்குள் அவனைப் பற்றிச் சில கூறி விடலாம். அவன் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவன். வகுப்பிலேயே 'துடுக்குத்தன மன்னன்' என்ற பட்டம் பெற்றவன். வகுப்பில் மட்டுமல்ல; வீட்டிலும்தான்! ஒரே பிள்ளை; செல்லப் பிள்ளை என்ற போர்வையால், அவன் செய்யும் துடுக்குத்தனங்கள் அனைத்தும் வெற்றி முரசு கொட்டின. அவனது துடுக்குத்தனத்தை அடக்க, பள்ளித் தலைமையாசிரியர், வகுப்பாசிரியர், பெற்றோர் ஆகியோரின் அடக்குமுறைகள் தோல்வியையே தழுவின. இன்னமும் அதே இறுமாப்பில்தான், இதோ... வீட்டுக்குச் சென்று கொண்டிருக்கின்றான்.

ஏதோ நினைத்தபடி சென்று கொண்டிருந்தவன் யாரோ ஒருவரின் அழைப்பில் நின்றான். திரும்பிப் பார்த்தான். வழியும் வியர்வையைத் துடைத்தபடியே பரபரப்புடன் காணப்பட்டார், அந்த நடுத்தர வயது மனிதர்.

''என்னங்க?'' என்று கேட்டான்.

''தம்பி, இந்த ஊரிலே மாணிக்க முதலியார் தெரு எங்கே இருக்கிறது?'' என்றார் அந்த மனிதர்.

''ஊருக்குப் புதுசா?''

''ஆமா''

''ஏன் கேட்கிறீர்கள்?''

இந்தக் கேள்வியால் அவர் சங்கடப்பட்டாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு ''ஒரு அவசர வேலை'' என்றார்.

''அது என்ன வேலை'' மீண்டும் கேள்வி.

''என்னடா இது இந்தப் பையன் இப்படி அடாவடித்தனமாகக் கேள்வி கேட்கிறானே'' என நினைத்தவர், ''அவசரமாக ஒரு செய்தி சொல்லணும்'' என்றார். 'அது என்ன செய்தி?' என்று கேட்க நினைத்தவன், ''சரி, சரி, இதோ இந்தப் பக்கம் தான்'' என்றான். அவரும் சொன்னவுடனேயே சென்று விட்டார். அவர் சென்றதும் இவன் சிரித்தான்.

காரணம் இல்லாமல் இல்லை. அவன் காட்டியது ரங்கசாமித் தெரு! ''என்னை நம்பி விட்டாரே? நல்லா ஏமாந்தார்'' என்று நினைத்துத்தான் சிரித்தான். 'அலையட்டும். கேட்ட கேள்விக்குப் பதிலை ஒழுங்காகச் சொன்னாரா அந்த ஆள்?' என்று கருவிக் கொண்டே மாணிக்க முதலியார் தெருவிலே உள்ள தனது வீட்டிற்கு சென்றான்.

வீட்டிற்குச் சென்றதும் சிறிது நேரம் அம்மாவிடம் ரகளை செய்து விட்டு, சோறு சாப்பிட்டுக் கை கழுவி, கை ஈரம் காய்வதற்குள் கிரிக்கெட் பேட்டைத் தூக்கிய போது தான் —

வாசலில் அவர் — அதே மனிதர்— அவனிடம் வழி கேட்ட மனிதர் — அலைந்து திரிந்து மாணிக்க முதலியார் தெருவிலுள்ள அவனது வீட்டிற்கு வந்து நின்றார். அவரைப் பார்த்ததும், ''என்னடா இது! இவர் நம்ம வீட்டிற்கு வருவதற்குத்தான் வழி கேட்டாரா? அய்யய்யோ... அவர் கண்ணில் பட்டால்?'' என்று எண்ணி அறைக்குள் போய் மறைந்து கொண்டான்.

''என்னங்க! ஏகாம்பரம் இருக்கிறாரா?'' என்று அவர் கேட்டதும், அம்மா ஓடி வந்து, ''நீங்க யாரு?'' எனக் கேட்டாள்.

''அம்மா, ஒரு அவசரச் செய்தி. நீங்க ஏகாம்பரம் மனைவிதானே?'' என்று கேட்க, அம்மா தலை அசைத்தாள்.

''அவரோட அம்மா செத்துட்டாங்க. அதான் அவசர அவசரமா வந்தேன். எங்கே அவர்?'' என்றார்.

குமாருக்கு 'பக்'கென்றது. ''என்னது! என் அருமைப் பாட்டி இறந்ததையா சொல்ல வந்தார்! அய்யோ... என்ன காரியம் செய்து விட்டேன். இப்படிப்பட்ட ஒரு அவசர செய்தியைத் தாமதப்படுத்தி விட்டேனே! இவர் எவ்வளவு அலைந்திருப்பார்?'' அவன் கண்கள் கலங்கின.

''டேய் குமார், நீ அப்பா ஆபீஸுக்கு ஓடிப் போய் அப்பாவைக் கையோடு கூட்டி வாடா. உம், போ போ'' என்று அவசரப்படுத்தினாள் அம்மா.


''நான் முன்னாடியே வந்து இருப்பேங்க. அதற்குள் ஒரு துடுக்குப் பையனால்...'' என்று அவர் பேச்சை முடிப்பதற்குள் அம்மாவுக்குப் பின்புறம் நின்றபடி அவரைக் கையெடுத்துக் கும்பிட்டான், ''மன்னித்து விடுங்கள்'' என்பது போல. அவர் உடனே அவன்தான் அந்தத் துடுக்குப் பையன் என்பதை அறிந்து கொண்டு, ''மன்னித்து விட்டேன்'' என்பது போல் தலை அசைத்தார். உடனே குமார் தன் அப்பாவை அழைத்து வர விரைவாகப் புறப்பட்டான். அப்போது அவன் மனத்தில் இருந்த துடுக்குத்தனம் மறைந்து விட்டது!



மூக்குக் கண்ணாடி — அப்படீன்னா இது மூக்குக்கா, இல்லே கண்ணுக்கா?

புகைப்படம்: கோவை சீதாராம்.

பிருந்தாவனம்



எழுதியவர் யார்?

கீழ்க்கண்ட பாடல் வரிகளை எழுதியவர் யார்? கண்டுபிடிக்க முடிகிறதா, பாருங்கள்:

1. வீறு பெற்று நில்லடா;
   விதியை மீறிச் செல்லடா.

2. சித்திரமும் கைப்பழக்கம்;
   செந்தமிழும் நாப்பழக்கம்.

3. ஊருக்கு நல்லது சொல்வேன் — எனக்கு
   உண்மை தெரிந்தது சொல்வேன்.

4. மங்கையராகப் பிறப்பதற்கே
   நல்லமாதவம் செய்திட வேண்டும்மா.

விடை: 1. சுத்தானந்த பாரதியார்; 2. ஔவையார்; 3. பாரதியார்; 4. கவிமணி.

— எம். சொக்கலிங்கம் (20,678), கோயில்பட்டி.


மருந்தின் பலன்

"ஏண்டா சோமு, உன் அப்பா உனக்காக ஒரு பெரிய மருந்துப் புட்டி வாங்கி வந்தாரே, அந்த மருந்தைச் சாப்பிட்ட பிறகு ஏதாவது பலன் தெரிந்ததா?"



"நல்லாத் தெரிஞ்சுதே, அந்த மருந்துப் புட்டியை என் அப்பா வாங்கி வந்த போது, அதை என்னால் தூக்கவே முடியவில்லை. ஆனால், பூரா மருந்தும் குடிச்ச பிறகு, அந்த மருந்துப் புட்டியை என்னாலே சுலபமாத் தூக்க முடியுதே!"

— வி. அரவிந்த், சென்னை — 40.



கையுறை

ஒருவர், கையுறை விற்கும் இரண்டு மூன்று கடைகளில் ஏறி இறங்கியும் அவருக்கு ஏற்ற கையுறை கிடைக்கவில்லை. அவரது கையைப் பார்த்த கடைக்காரர்கள், "ஐயா, உங்களுக்கு ஏற்ற கையுறை உடனே கிடைக்காது. ஆர்டர் கொடுத்தால் செய்து தருகிறோம்" என்றார்கள். இதற்கு என்ன காரணம்?

அவருக்கு ஆறு விரல்கள்!

— என். ரவிக்குமார் (9258), அம்பத்தூர்.



தெலுங்கு தெரியுமா?

பாலுடு — பையன்,
பில்லா — பெண்,
கப்புரம்பு — கற்பூரம்,
டப்பு — பணம்,
காவாலா? — வேண்டுமா?
இல்லு — வீடு,
சூடு — பார்
மஞ்சிதி — நல்லது

— மா. தா. சந்திரகுமார் (21,303),
சென்னை — 106.

துரோகி

சீனச் சக்கரவர்த்தி யங்லோ (1360—1424) என்பவரைத் துரோகி என்று துணிச்சலாகக் கூறினான் லிங்வென் என்ற தேசபக்தன். "துரோகி என்று என்னைச் சொன்ன நீ, உடனே மன்னிப்புக் கேட்க வேண்டும். இல்லையேல் சிரச்சேதம் செய்யப்படுவாய்" என்றார் சக்கரவர்த்தி.

"மன்னிப்புக் கேட்க முடியாது. செத்த பிறகும் கூட உம்மை 'துரோகி' என்றே சொல்வேன்" என்றான் அந்த தேச பக்தன்.

உடனே சக்கரவர்த்தி அவன் தலையைச் சீவுமாறு உத்தரவிட்டார். தலை வெட்டப்பட்டு, இரத்தம் தரையிலே கொட்டியது. அந்த இரத்தத்தைக் கண்டு எல்லோரும் அதிர்ச்சி அடைந்தார்கள். காரணம், சீனமொழியில் 'துரோகி' என்று எப்படி எழுதப்படுமோ, அப்படி அந்த இரத்தத்தில் படிந்திருந்தது.

— ஆதாரம்: அதிசய உண்மைகள்
தகவல்: பி. பிரியா (21,369),
பெரிய காஞ்சிபுரம்.




'டை' பிறந்த கதை

இங்கிலாந்து மன்னர் ஒருவர் வேட்டையாடச் சென்றார். அப்போது அவரின் துப்பாக்கிக் குறி தவறி, அவருடைய கழுத்து எலும்பு சிறிது முறிந்து விட்டது. மறுநாள், மந்திரி சபையில் முக்கியமாகப் பேச வேண்டி இருந்த



தால், அவர் கழுத்தில் கட்டுப் போட்டுக் கொண்டால் விகாரமாக இருக்கும் என்று நினைத்து, எலும்பு முறிந்த இடத்தை மறைக்க நீண்ட பட்டுத் துணியைக் கட்டித் தொங்க விட்டுக் கொண்டு சபைக்குச் சென்றார். அதைக் கண்ட மற்றவர்களும் அழகுக்காக அதுபோலக் கட்டத் தொடங்கினர். அதுவே பிறகு 'டை' கட்டும் பழக்கமாக மாறியது.

— இ. கணேஷ் (21,034),
சென்னை — 81.



எல்லாம் தலை கீழ்!

ஒரு மாணவன் கடையிலே ஒரு சிறுவர் பத்திரிகையை வாங்கிப் பிரித்துப் பார்த்தான். "இது என்ன, பக்கங்கள் தலைகீழாக உள்ளன!" என்றான். பிறகு ஒவ்வொரு பக்கமாகப் புரட்டிப் பார்த்தான். எல்லாப் பக்கங்களும் தலைகீழாகவே

இருந்தன. கடைசியில் பத்திரிகையை மூடி, அட்டையைப் பார்த்தான். உடனே, ''இது என்ன கூத்து. அட்டையும் தலைகீழாக உள்ளதே!'' என்றான்.

கடைக்காரர், 'கொல்'லென்று சிரித்தார். ஏன் சிரித்தார் என்பது தான் உங்களுக்குத் தெரியுமல்லவா?

— போ. பாலரிஷி (13,015), எட்டயாபுரம்.



லட்டு மார்க்!

''அப்பா, நான் அரைப் பரீட்சை எழுதினேனே, ஒவ்வொரு பாடத்திலும் லட்டு மாதிரி மார்க் போட்டிருக்காங்க.''

''அப்படியா! ஒவ்வொரு பாடத்திலும் எவ்வளவு மார்க் போட்டிருக்கிறாங்க?''

''இதோ நீங்களே பாருங்கப்பா.''

''அட மக்கு, லட்டு வடிவத்திலே சைபர் மார்க் அல்லவா போட்டிருக்கிறாங்க?''

— சு. ஸ்வர்ணலட்சுமி (21,588), பெண்ணாகரம்.


மலையாள மொழி

வெகு காலம் வரை கேரளாவில் மக்கள் தமிழ் மொழியையே பேசி வந்தனர். தட்பவெப்ப நிலைகளுக்கு ஏற்பச் சிறிது மாறுபட்டு வழங்கியதால், இதற்கு 'கொடுந்தமிழ்' என்று பெயர். இதிகாச, புராணக் கதைகள் இங்குள்ள மக்களைக் கவரவே, அவர்கள் வடமொழியைக் கற்கத் தொடங்கினர். பதினேழாம் நூற்றாண்டில், துஞ்சத்து எழுத்தச்சன்



என்ற ஓர் அறிஞர் வடமொழிச் சொற்களையும், கொடுந்தமிழ்ச் சொற்களையும் கொண்டு ஒரு புதுமொழியை உருவாக்கினார். அதுவே மலையாளம்.

— 'மதி ஒளி' எழுதிய 'சுவாதித் திருநாள்' என்ற புத்தகத்திலிருந்து — தந்தவர்: ஆர். ராஜா (1006), சென்னை — 17.



நல்ல யோசனை!

''டேய் ரகு, நான் என் மாமாவுக்கு எழுதியிருக்கிற இந்தக் கவரிலே 60 காசு தபால் தலை ஒட்டணுமாம். எங்கிட்டே ஒரு ரூபாய் தபால் தலை இருக்கு; 40 காசு தபால் தலை இருக்கு. என்ன செய்வது?''

''ஏண்டா கவலைப்படுகிறாய்? முதலிலே ஒரு ரூபாய்த் தலையை ஒட்டு. பக்கத்திலே மைனஸ் குறி (—) போட்டு, அதுக்குப் பக்கத்திலே 40 காசு தபால் தலையை ஒட்டிவிடு.''

— கோ. வெங்கடேசன் (22,037), கேடப்பாளையம்.

அரசர் யார்?

கேள்வி: கண்ணகி மதுரையை எரித்த போது அரியாசனத்தில் வீற்றிருந்த மன்னர் யார்? பதில்:

பாண்டியன் நெடுஞ்செழியன் என்று கூறினால், அது தவறு. காரணம், கண்ணகி சிலம்பை உடைத்த பொழுது உண்மை அறிந்த மன்னர்



அந்த நொடியே உயிர் நீத்தார். அதன் பிறகுதானே கண்ணகி, 'மதுரை எரிந்து சாம்பலாகட்டும்' என்றார். ஆகவே, மதுரை எரிந்தபோது, அரியாசனத்தில் எந்த அரசரும் வீற்றிருக்கவில்லை!

— பா. சதீஷ்குமார் (401)

டாக்டர் சொன்னாராம்

டாக்டர்: உங்க பெயர் என்ன?

நோயாளி: சிங்...

டாக்டர்: சிங்கா? நேற்று சிங்காரம் என்று கூறினீர்களே!

நோயாளி: என்ன டாக்டர், நீங்கள் தானே காரம் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று சொன்னீர்கள்?

— ரெ. சீனுவாசராகவன் (20,405), சிதம்பரம்.



சில செய்திகள்


* சோவியத் நாட்டில் 20 ஆண்டுகளுக்கு முன் இருந்த விலைதான் இப்பொழுதும் இருக்கிறது.

* அபாரி ஜின்ஸ் என்ற ஆஸ்திரேலியப் பழங்குடியினர் ஆடையில்லாமல் வாழ்வதற்கு வெட்கப்படுவதில்லை.



* நாய்த்தலை வண்ணத்துப்பூச்சி என்று ஓர் இனம் இருக்கிறது. இது அமெரிக்கப் பிரதேசங்களில் உள்ளது.

— தேனி என். குமரன் (5042), தேனி.



முன்னோடிகள்

கப்பலில் உலகத்தைச் சுற்றிவரப் புறப்பட்ட முதல் மாலுமி போர்ச்சுகலைச் சேர்ந்த மெகல்லன்.

சந்திரனில் முதன் முதலில் காலடி வைத்தவர் அமெரிக்கரான நீல் ஆம்ஸ்ட்ராங். விண்வெளியில் பயணம் செய்த முதல் மனிதர் யூரி ககாரின். முதல் பெண்மணி வாலென்டினா தெரஸ்கோவா.

— சிவ. அய்யப்பன் (12,088), இராஜாக்கமங்கலம்.



எப்படி நனையும்?

அம்மா: டே, ராமு மழை வருது. மாடியில் காயப் போட்ட மிளகாய்களை எடுத்து வாடா.

ராமு: ஏம்மா! அது எப்படி நனையும்? அதுதான் குடை மிளகாய் ஆச்சே!

— ப. கணேஷ் (14,478), சங்ககிரி மேற்கு.

வெண்புறாக்கள் பறக்கட்டும்



டி.ஜானகி

ப்ராகரஸ் கார்டை அம்மாவிடம் நீட்டியபடி கோகுல் சொன்னான்.

"அம்மா! அப்பா கேம்ப் போயிருக்கறதாலே, நீயே கையெழுத்தைப் போட்டுத்தாம்மா. நாளைக்கே கொண்டு வந்துடணும்னு எங்க ஆசிரியர் கண்டிப்பாய்ச் சொல்லிட்டார்."

தன் மகன் வகுப்பில் 'முதல் ரேங்க்' வாங்கியிருப்பதைப் பார்த்து ஆனந்தப்பட்டாலும், அவன் வரலாறு பாடத்தில் மட்டும் அறுபத்தி ஐந்து வாங்கியிருப்பதைக் கண்டு சற்று வருந்தினாள்.

"கோகுல், எல்லாவற்றிலும் 90—க்கு மேல் வாங்கியிருக்கே. வரலாற்றிலே மட்டும் ஏன் குறைஞ்சு போச்சு?"

"எனக்கு என்னவோ வரலாறு பாடம் மட்டும் வர மாட்டேங்குது"

"உங்கிட்டே வர மாட்டேன்னு அது வாயைத் திறந்து சொல்லுதா? வராத பாடத்தைக் கொஞ்சம் முயற்சி எடுத்துப் படிச்சால் அதுவும் சுலபமாயிடும் தெரியறதா?"

"தெரியுது அம்மா... இனிமேல் இன்னும் கொஞ்சம் முயற்சி எடுக்கறேன்."

"கோகுல், நீ வரலாறு நன்றாகப் படித்து, ஒரு புதிய வரலாற்றையே உருவாக்கணும்னு ஆசைப்படறேண்டா"

"எனக்கு என்னமோ... புதிசா... பயங்கரமா... ஏதாவது கண்டுபிடிச்சு.. பெரிய விஞ்ஞானியாய் வரணும்னு ஆசையா இருக்கும்மா."

"அப்படியா சரி... என்னத்தைக் கண்டு பிடிக்கணும்னு ஆசைப்படறே?"

"பெரிய பெரிய அணுகுண்டு அம்மா. நம்ப கையிலே தயாரா வச்சிருக்கணும். சக்தி வாய்ந்த அந்த அணுகுண்டை பகைவன் நாட்டிலே போட்டால் ஒரே நிமிஷம்; ஒரே நிமிஷத்திலே அந்த நாடே தூள் தூளாய் இருந்த இடம் தெரியாமல் போகணும். நம்ப நாட்டின் பாதுகாப்புக்கு அணுகுண்டு மிகவும் அவசியம்."

மகனின் விபரீதப் போக்கைக் கண்டு திடுக்கிட்டாள் தாய். முட்

செடியை ஆரம்பத்திலேயே அடியோடு களைந்தெறிய உறுதி பூண்டாள்.

"கோகுல், அணுவின் அழிவு சக்தியால் நாட்டில் அமைதியை உண்டாக்க முடியுமா? நம்ப பாரத நாடு பண்பாலே, அன்பாலே, தார்மீக வழியாலே உயர்ந்து நிக்கிறது. அழிவு வேலைக்குப் பயன்படும் பணத்தை, அறிவை ஆக்க வேலைக்குப் பயன்படுத்தினால்தான் நாடு முன்னேறும். அன்பு என்ற அஸ்திவாரத்திலே கட்டப்படும் அமைப்புத்தான் நாட்டை முன்னேற்றும். பகைவனையும் நிரந்தரமாகத் தன் பக்கம் இழுக்கும். அச்சம் விளைவிக்கும் அணுகுண்டால் இல்லை."

"மேடைப் பேச்சுக்குத்தாம்மா லாயக்கு நீ பேசறது. நம்ப நாட்டைப் பார்த்து மத்த நாட்டுக்காரங்க பயப்படணும். இந்தியாகிட்டே யாரும் வாலாட்டக் கூடாது.

'கோகுல், நமக்கு ஆயுதங்களும் வேண்டாம்; அணுகுண்டும் வேண்டாம். அன்புதான் தேவை. பகைவனையும் மன்னிச்சு, அன்பாலே அவனை மாத்தினால்தான் நிரந்தரமான பலன் கிடைக்கும். உலக வானிலே சமாதான வெண்புறாக்கள் பறக்கத்தான் பாரதம் விரும்புது; கழுகுக் கூட்டங்களை அல்ல."

"போம்மா... நீ சொல்றது எல்லாம் நடைமுறைக்கு ஒத்து வராது. அணுவைப் பத்தி ஆராய்ச்சி பண்ணி... புதுசா ஏதாவது குண்டு தயாரிக்கப் போறேன். சரி.. சரி இந்தா பேனா. சீக்கிரம் கையெழுத்துப் போடம்மா."

கவலை ததும்பும் விழிகளோடு மகனைப் பார்த்தபடியே கையெழுத்தைப் போடலானாள்.

2

தீபாவளிக்கு இன்னும் நான்கு நாட்கள் கூட இல்லை. தெருவெல்லாம் விழாக் கோலம் பூண்டது போன்று மக்கள் நடமாட்டம். மாலை நேரங்களில் ஜவுளிக் கடை, பட்டாசு மத்தாப்புக் கடைகள் நிரம்பி வழிந்தன.



அன்று மாலை பள்ளி விட்டு வீடு திரும்பிய கோகுல், கையில் தூக்க முடியாத பெரிய காகித அட்டைப் பெட்டியோடு வீட்டிற்குள் நுழைந்தான். அவன் முகம் மகிழ்ச்சியினால் பூரித்திருந்தது.

''அம்மா... அம்மா....'' என்று சந்தோஷத்தால் போட்ட சத்தத்தில் அவன் அம்மா சமையல் அறையிலிருந்து அப்படியே ஓடி வந்தாள்,கை வேலைகளை விட்டு விட்டு.

''என்னடா... கோகுல், இவ்வளவு பெரிய பார்சல்?''

இத்தனையும், தீபாவளிக்கு வெடிக்கிறதுக்கு வாங்கியிருக்கேன். அப்பா வந்து உன் இஷ்டம் போல வாங்கிக்கோன்னு சொல்லி, கடைக்காரர்கிட்டேயும் 'இவன் கேட்கிற பட்டாசுகளைக் கொடு. நான் வந்து பணம் தர்றேன்'னு சொன்னாரு. பெட்டிக்குள்ளே இருக்கிறதைப் பார்த்ததும், அப்படியே மலைச்சுப் போயிடுவே'' என்று கூறியபடி அட்டைப் பெட்டியைச் சுற்றியுள்ள செய்தித்தாள் உறையைக் கழற்றி ஒவ்வொன்றாக எடுத்து வெளியே வைத்தான்.

''காசைக் கரியாக்காமல் வாண வெடியை வாங்கிக் கொளுத்துன்னு எங்க பாட்டி சொல்லுவாங்க. அதே போல உங்கப்பா கொடுக்கிற செல்லத்திலே இஷ்டம் போல வாங்கிக் கொண்டிருக்கே. அட... இது என்ன கோகுல்! மத்தாப்பு, கம்பி மத்தாப்பு, பென்சில், குதிரை வால் சக்கரம் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமா இருக்கு. ஆனால் புதிசு.. புதிசாக வெடி வகைகள் எல்லாம் நிறைய வ ா ங் கி யிருக்கே?'' என்றாள் அவன் அம்மா ஆச்சரியத்தோடு.

''ஆமாம் அம்மா... இது யானை வெடி, இதோ இதெல்லாம் இந்த வருஷம் தீபாவளிக்குன்னு ஸ்பெஷலா போட்ட அணுகுண்டு வெடிகள். எப்படி வெடிக்கும் தெரியுமா? ஊரே கேட்கும் இதோட ஒலியை. டமால் டமால்ன்னு நான் வெடிக்கப் போறேன்'' என்றான் முகமெல்லாம் குதூகலம் கொப்புளிக்க.

''உங்கப்பா உனக்கு ரொம்பத்தான் இடம் கொடுத்திருக்காரு. ராத்திரி வரட்டும்'' என்றாள் சற்று எரிச்சல் கலந்த கோபத்தோடு.

''என்னம்மா செய்வே? என்ன கேட்கப் போற அவரை?''

''இவ்வளவு வெடிகளை ஏன் வாங்கிக்க அனுமதி கொடுத்தீங்க? அதுக்குப் பதிலா கம்பி மத்தாப்பு, மத்தாப்புப் பெட்டிகள் இன்னும் நிறைய வாங்கிக் கொடுத்திருக்கலாமேன்னு சண்டை பிடிக்கப் போறேன்.''

''போம்மா, வருஷத்துக்கு ஒரு முறை தீபாவளி வருது. அந்தச் சமயத்திலே வெடிச்சா குறைஞ்சா போயிடும்? தினமுமா நான் கேட்கிறேன்?''

''ஆண்டவனே, என் மகனுக்கு நல்ல புத்தியைக் கொடு'' என்று முணுமுணுத்தவாறே சமையல் அறையை நோக்கிச் சென்றாள் கோகுலுக்கு ஹார்லிக்ஸ் கரைத்துக் கொண்டு வர.

3

அன்று ஆனந்தம் கொடுக்கும் தீபாவளிப் பண்டிகை தினம். விடியற் காலையில் நீராடி, புது ஆடை அணிந்து கொண்டு, இருள் அரக்கனை விரட்டி, கதிரவனை வா... வா... என்று அழைக்க மத்தாப்பு, பட்டாசுகளைக் கொளுத்திக் கொண்டிருந்தனர், அந்தத் தெருக் குழந்தைகள்.

இதோ கோகுலும் புதிய பாலியஸ்டர் உடையுடன் பூரிப்போடு வெடிகளை வெடிக்க ஆரம்பித்தான்.

கோலம்போடுவதற்காக வெளியே வந்த அவன் அம்மா,

''டேய் கோகுல், வெடிகளையெல்லாம் ஜாக்கிரதையா பார்த்து வெடி, புதுச் சட்டை ஜாக்கிரதை...'' என்று எச்சரித்தாள்.

''போம்மா... நீ சுத்த பயந்தாங் கொள்ளியா இருக்கே. வருங்காலத்திலே அணுகுண்டு தயாரிக்கப் போகிற இந்த விஞ்ஞானிக்கு இந்த வெடிகள் எல்லாம் தூசுக்குச் சமம்'' என்றான் கர்வத்தோடு.

''தெருவிலே போறவங்களுக்கு இடைஞ்சல் இல்லாமே வெடிக்கணும், தெரியுதா?''



"தெருவிலே போறவங்க ஜாக்கிரதையாய்ப் போகட்டுமே, இன்னிக்கு ஒரு நாளைக்கு... என் இஷ்டம்போலத்தான் வெடிப்பேன்... இதோ... இந்த அணுகுண்டை வெடிக்கப் போறேன்... உனக்குப் பயமா இருந்தால் உள்ளே போம்மா..."

போட்ட கோலத்திற்குச் செம்மண் கொண்டுவருவதற்காக கோகுலின் அம்மா உள்ளே சென்றாள். கோகுலின் அப்பா தீபாவளி மலர் ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

புதிய அணுகுண்டு ஒன்றின் மீது தீக்குச்சியை வைத்தான் கோகுல். அந்த அணுகுண்டுவின் வெளிப்பக்கம் நீட்டிக் கொண்டிருந்த திரி கருகியது. ஆனால், குண்டு வெடிக்கவில்லை... சில வினாடிகள் கோகுல் அமைதியாக அதையே பார்த்துக் கொண்டிருந்தான், மெதுவாக வெடிக்குமா என்று.

அப்பொழுதும் அது வெடிக்கவில்லை. பத்து ரூபாய் கொடுத்து வாங்கிய அந்த அணுகுண்டு வெடி வெடிக்காததைக் கண்டதும், பட்டாசுக்கடைக்காரர் ஏமாற்றிப் பணம் வாங்கிக் கொண்டு விட்டார் என்ற கோபத்தில் கோகுல் அதைக் காலால் எட்டி உதைத்தான்.

ஆனால்... ஆனால்... உள்ளுக்குள்ளேயே கனன்று கொண்டிருந்த அந்த வெடி, கோகுலின் கால் பட்டதும்... 'டமர்!' என்று பயங்கரமாக அவன் காலின் மீதே வெடிக்க... — "அம்மா... அம்மா..." என்ற அலறலுடன் கோகுல் தூக்கியெறியப்பட்டுத் தெருவின் குறுக்கே விழுந்தான். மறு விநாடி அவன் நினைவு அவனுக்கு இல்லை.

மகனின் அலறல் சத்தத்தைக் கேட்டுப் பதறியபடி வெளியே வந்தனர் அவனது அம்மாவும், அப்பாவும். இதற்குள், அக்கம் பக்கத்துச் சிறுவர்கள், பெரியவர்கள் எல்லாம் கோகுல் விழுந்த இடத்தை நோக்கி ஓடி வந்தார்கள்.

மகனின் அலங்கோல நிலையைக் கண்டு அவன் தாய் பதறினாள்...

"கோ...குல்... இப்பத்தாண்டா... உன்கிட்டே பேசிவிட்டு உள்ளே

போனேன்... அதுக்குள்ளே இப்படி விழுந்து கிடக்கிறாயே... பார்த்து வெடிடான்னு சொன்னேனே... கேட்டியா...? என் மகனைக் காப்பாத்துங்க... என் கோகுலைக் காப்பாத்துங்க... இந்தாங்க... நம்ப கோகுலைக் காப்பாத்த டாக்டரைக் கூட்டிக் கொண்டு வாங்க.''

மறுவிநாடி பக்கத்து வீட்டுப் பரமேஸ்வரன் அடுத்த தெருவில் உள்ள டாக்டர் வீட்டை நோக்கி பைக்கில் பறந்தார். சில நிமிடங்களில் டாக்டருடன் திரும்பி வந்தார்.

கோகுலைப் பார்த்த டாக்டர், உடனேயே அவனைத் தன் மருத்துவ மனைக்குத் தன் காரிலேயே அள்ளிப் போட்டுக் கொண்டு சென்றார்.

4

கண் விழித்த கோகுலுக்கு, தான் எங்கிருக்கிறோம் என்ற உணர்வே இல்லை... உடம்பெல்லாம் வலி... எரிச்சல்... வேதனை... கால்... காலில்... ஐந்து யானைகள் உட்கார்ந்து கொண்டிருப்பது போன்ற கனம்...!

''அம்மா... அம்...மா... உடம்பெல்லாம் எரியுதே! வலிக்குதே! நான் எங்கே இருக்கேன்... ஆ...!'' என்று வேதனை தாளாமல் கோகுல் முனகினான்; அலறினான்.

அவன் அருகிலேயே அமர்ந்து அவன் முகத்தையே பார்த்தபடி இருந்த அவன் அம்மாவும் அப்பாவும் மகனுக்கு நினைவு திரும்பியதை அறிந்து வேதனை கவ்விய உள்ளத்தில் ஒரு மகிழ்ச்சிக் கோடு பரவ... ஆதரவோடு அவன் தலையைத் தடவினர்.

''கோகுல்,கவலைப்படாதே...நம்ப டாக்டர் ஆஸ்பத்திரியில்தான் இருக்கோம். கூடிய சீக்கிரம் குணமாகி விடும்'' என்றனர்.

மதியம் நினைவு திரும்பினாலும் எரிச்சல் தாளாமல் துடித்தான் கோகுல்.

5

ஆயிற்று. அன்றோடு ஒரு வாரம் ஆகிவிட்டது, தீபாவளி முடிந்து.

காலில் கட்டோடு தன் வீட்டு ஹாலில் உள்ள கட்டிலில் அமர்ந்திருந்தான் கோகுல். அவன் உடம்பில் ஆறிக் கொண்டிருக்கும் தீக்காயங்களுக்கு மருந்து தடவிக் கொண்டிருந்தாள் அவன் அம்மா.

பணத்தைப்பணம்என்றுபாராமல் செலவழித்து, இரவு பகலாகக் கண் விழித்துத் தனக்கு வைத்தியம் பார்த்த பெற்றோரைப் பார்த்ததும் அவன் இதயம் உருகியது. சமயத்தில் தன்னைக் காப்பாற்றிய டாக்டருக்கு அவன் உள்ளம் நன்றி சொல்லியது. அன்றுதான் ஒரு மாத விடுப்பு முடிந்து வேலைக்குச் சென்ற தந்தையின் அன்பை எண்ணி வியந்தான். எல்லாவற்றிற்கும் மேலாக, தன்னைக் கவனித்துக் கொள்ளாமல், அல்லும் பகலும் மகனையே கவனித்துக் கொண்டிருந்த தன் அன்னையின் பாசத்தை எண்ணிய போது அவனையும் அறியாமல் அவன் விழிகளில் நீர் கசிந்தது.

''ஏனப்பா கோகுல் அழறே! இன்னும் உடம்பெல்லாம் எரிகிறதா...? இன்னும் பதினைந்து நாட்களிலே கால் கட்டைப் பிரிச்சுடலாம்னு டாக்டர்சொன்னார்.அப்புறம்பழையபடி நடக்கலாம்... நான் இருக்கும் போது... நீ... நீ... கவலைப்பட்டு... அழாதே...!''

''இது என் அன்புக் கண்ணீர் அம்மா... எனக்கே தெரிகிறது — என் உடம்பு — குணமடைந்து வருவது. இன்னும் ஒரு மாதத்திலே நான் பழைய கோகுலாக இருப்பேன்னு எனக்கே நம்பிக்கை இருக்கு...!''


''ரொம்ப நல்லது. இந்த நம்பிக்கைதான் வாழ்க்கைக்கு முக்கியம்'' என்று கூறிக் கொண்டே அவன் முழங்கால் புண்ணின் மீது களிம்பு தடவினாள்.

''அம்மா...''

''என்னடா... கண்ணா?''

''ஒரு சின்ன விளையாட்டு வெடிகுண்டு எனக்கும் உங்களுக்கும் எவ்வளவு கஷ்டத்தைக் கொடுத்துடுத்து, பார்த்தியா?''

''ஆமாம் கோகுல்! இந்தச் சின்ன




அணுகுண்டு உன் காலை நோக்கி வெடிச்சதுக்கு எப்படிக் கஷ்டப்பட்டே. துடிச்சே... வலியாலே அலறினே...? வருங்காலத்திலே... அழிவு வேலைக்குப் பயன்படும் அணுகுண்டு தயாரிச்சு வெடிக்கப் போறேன்னு சொன்னியே... அப்போ... எத்தனை ஆயிரக்கணக்கான உயிர்கள், குற்றமற்ற அப்பாவியான, லட்சக்கணக்கான உயிரினங்கள், எப்படித் துடிதுடித்துக் கருகிச் சாம்பலாகிப் போகும்னு ஒரு விநாடி சிந்திச்சுப் பார்த்தியா? நாம அத்தனை பேரும் ஆண்டவனுடைய குழந்தைகள். ஆண்டவன் கொடுத்த உயிரை... நமது உடன்பிறவாத சகோதர சகோதரிகளை அழிக்க நமக்கு என்ன உரிமை இருக்கு, சொல், கோகுல்?''

கேள்விகள் சம்மட்டியாகத் தாக்க அவன் அறிவுக் கண்கள் திறந்தன. தன்னுடைய விஞ்ஞான வேட்கை அழிவுச் சக்திக்குச் செல்வதால் ஏற்படும் அபாயங்களை நினைத்த அவன் மேனி நடுங்கியது!

''அம்மா... என்னை மன்னிச்சுடு அம்மா. இப்பத்தான் எனக்குப் புத்தி வந்தது. ஒரு விளையாட்டுக் குண்டு பட்டதற்கே இத்தனை பாடுபட்டேன். உண்மையான பெரிய அணுகுண்டு வெடிச்சா... உயிரினங்கள்... எப்படித் துடிதுடிக்கும்னு உணர்ந்துட்டேம்மா. அன்னிக்கு உன்னை நான் கேலி செஞ்சேன். ஆனால் இன்னிக்குச் சத்தியமாச் சொல்றேன்... நமக்குப் பகைமை தேவையில்லை; அன்புதான் தேவை. சண்டை தேவை இல்லை; சமாதானம்தான் தேவை. அழிவுச் சாதனம் தேவை இல்லை; ஆக்கப்பணிதான் தேவை; உலக வானிலே வெண் புறாக்கள் பறக்க வேண்டும். அந்தச் சமாதான நிலையை உண்டாக்க விஞ்ஞானத்தை... அணு சக்தியை... ஆக்க வேலைக்குத்தான் பயன்படுத்திப் புதிய விஞ்ஞானியாக மாறி... புதிய வரலாறு கட்டாயம் படைப்பேன்.''

மகனின் மனம் மாறியதைக் கண்டதும் அன்னையின் விழிகளில் ஆனந்தக் கண்ணீர் பிரகாசித்தது.



செஞ்சுரி நாட் அவுட்!

வெள்ளைக்காரர்கள் நம்மை அந்தக் காலத்தில் அடிமைப்படுத்தியதோடு, தங்களுக்கென்று ஜிம்கானா, எம். சி. சி. என்று தனி விளையாட்டு கிளப்புகளை நிறுவி, அவற்றில் இந்தியர்களை அண்ட 'விடாமல் பார்த்துக் கொண்டார்கள்! இந்த நிலையினைக் கண்டு நெஞ்சு பொறுக்காமல் 1888 — ஆம் ஆண்டு இந்தியர்களும் விளையாட்டுக் கலைகளில் ஈடுபடுவதற்காக ஏற்படுத்தப்பட்டது மெட்ராஸ் யுனைடெட் கிளப். ஒரு விளையாட்டுக் கழகம் நூறாண்டு கொண்டாடி, விளையாட்டுக் கலைகளுக்குத் தொண்டு செய்து வருகிறதென்றால் அது போற்றுதற்குரிய அம்சம்!

ஸியோல் ஒலிம்பிக்கில் ஒரு தங்கப் பதக்கம் கூடப் பெறவில்லையே என்ற ஏக்கம் பலருக்கு! இளமையைத் தேடி அவர்களுக்கு விளையாட்டுக் கலைகளில் ஊக்கமும் உற்சாகமும் அளிப்பதற்காக ஐம்பது லட்சம் ரூபாய் அறக்கட்டளையாகச் சேகரித்து எம். யூ. சி. இந்த நூற்றாண்டு விழாச் சமயத்தில் விளையாட்டுக் கலைஞர்களுக்குப் புத்துயிர் ஊட்ட முன் வந்திருப்பது பாராட்டுக்குரியது!

எம். யூ. சி. கிளப்பின் நூற்றாண்டு விழாத் தருணத்தில் சென்னை நகரத்திலுள்ள குருநானக், பச்சையப்பன், ஐ. ஐ. டி., நியூ காலேஜ், லயோலா, அண்ணா பல்கலைக் கழகம், ஜெயின் கல்லூரிகளுக்கான கிரிக்கெட் போட்டி விறுவிறுப்பாக அமைந்தது! இறுதிப் போட்டியில் விவேகானந்தா கல்லூரி லயோலா கல்லூரியை வெற்றி பெற்றுப் பரிசைப் பெற்றது. இந்தக் கிரிக்கெட் பந்தயத்தில் 'ஹாட்ரிக்' பௌலராகப் பரிமளித்த பாஸ்கருக்குத் தலைசிறந்த பந்து வீச்சாளருக்கான பரிசு வழங்கப்பட்டது!

இந்தக் கல்லூரிகளுக்கான பந்தயங்களில் சில அபூர்வ நிகழ்ச்சிகள்! குருநானக் கல்லூரி பச்சையப்பன் கல்லூரியைக் கடைசிப் பந்து வீச்சில் தான் வென்றது! லயோலா கல்லூரியின் கடைசி ஆறு பந்துகளில்தான் அண்ணா பல்கலைக் கழகம் ஐந்து விக்கெட்டுகளை இழந்தது! கல்லூரிப் பந்தயம் ஒன்றில் ஒரு ஸிக்ஸர் எழுப்பப்பட்டு, அதில் பந்தும் தொலைந்து விட்டது!

எம். யூ. சி. கிளப்பின் புகழை உலக அரங்கில் பரப்பியவர்களில்

குண்டுமணி

முக்கியமானவர்கள் ஹாக்கி, கிரிக்கெட், டபுள் இண்டர்நேஷனல் எம். ஜே. கோபாலன், ஸி. ராமசாமி, டெஸ்ட் பௌலர் ஸி. ஆர். ரங்காச்சாரி, டெஸ்ட் பௌலர் தினன், ஆஸ்திரேலியாவில் மெல்போர்னில் நடைபெற்ற ஸ்நூக்கர் போட்டியில் கலந்து கொண்ட எஸ். ஏ. சலீம், அவரது புதல்வர் எஸ். ஏ. சலீம், 'பிரிட்ஜ்' சீட்டு ஆட்டத்தில் நாகப்பன். 'பிரிட்ஜ்' சீட்டு ஆட்டத்தில் பணிக்கர் 'பாயிண்ட் ஸிஸ்டம்' என்ற புது முறையைக் கண்டுபிடித்து உலக பிரிட்ஜ் சாம்பியன் குல்பர்ஸ்டனிடம் பாராட்டு மொழிகளைப் பெற்றிருக்கிறார்!

எம். யூ. சி. யில் ஒரு நூலகம் மூவாயிரம் புத்தகங்களுக்கு மேல் வைத்து இயங்கி வருகிறது; தினப் பத்திரிகைகள், வாராந்திர, மாதாந்திரப் பத்திரிகைகள், குழந்தைப் பத்திரிகை, நூல்களுக்கும் விசேஷ இடம் ஒதுக்கியிருப்பது மெச்சத்தக்கது!


நூறாண்டு கண்ட எம். யூ. சி. யின் கொண்டாட்ட வைபவங்களை டாக்டர் எஸ். ஏ. எஸ். ராமசாமி தொடங்கிவைத்தார்! தமிழக ஆலோசகர் ஜி. வி. ராமகிருஷ்ணா இறுதி நாள் விழாவில் பங்கேற்றுச் சிறப்புரை ஆற்றினார்!

"நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தையொட்டி உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு கால்பந்து, ஹாக்கி பந்தயங்களும், கல்லூரிகளுக்காகக் கிரிக்கெட் பந்தயமும், நகர கிளப்புகளுக்கான டென்னிஸ் பந்தயமும், பில்லியர்ட்ஸ், பிரிட்ஜ் பந்தயங்களும் நடத்தினோம்! இளமைக்கு முதலிடம் தருவதற்காகவே உயர்நிலைப் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் போட்டி வைத்தோம்! கால் பந்து மற்ற விளையாட்டுக்களில் இளஞ் சிறுவர்களை ஊக்கப்படுத்த ஒவ்வொரு வருஷமும் போட்டிகளை நடத்தவிருக்கிறோம்" என்றார் எம். யூ. சி. யின் கௌரவக் காரியதரிசி செல்லையா செட்டியார்.


'செஞ்சுரி நாட் அவுட்' எம். யூ. சி. யின் மகத்தான சாதனை! செஞ்சுரி ஆண்டில் இளமைக்கு விளையாட்டுக் கலைகளில் முன்னேற வழி வகுத்திருப்பது இந்த பழைமையான கிளப்பின் இணையற்ற குறிக்கோள்!



தமிழக ஆளுநரின் ஆலோசகர் ஜி. வி. இராமகிருஷ்ணாவுக்கு சி. ஆர். பட்டாபிராமன் மாலை அணிவிக்கிறார்.





மஹாராஷ்டிரத்தில் தேவ நகரம் என்ற ஊர்...
பக்த துகாராம்
கதை: ஆனந்தி
படம்: விநு
இங்கு மாதவராவ் என்ற வணிகர் வசித்தார்.
நூறு மூட்டை நெல்லும் ஏறியாச்சா? சரி, அங்காடியில் இறக்கி விட்டு வா...
மாதவராவுக்கு ஒரே பிள்ளை துகாராம்...
செல்லப் பிள்ளை என்ன பண்ணறான்?
கிருஷ்ணருக்குப் பூஜை செய்யறேன் அப்பா!
மாதவராவ் மகிழ்ந்து, மகனுக்குக் கண்ணன் கதைகள் கூறினார்...
கிருஷ்ணர் மடுவில் குதித்தார்... காளிங்கன் சீறி வந்து கிருஷ்ணரைச் சுற்றி இறுக்கி...
"ஆனால் கிருஷ்ணரையா ஜெயிக்க முடியும்? அவர் காளிங்கன் மேல் நர்த்தனமாடினார்!"




துகாராம், மாதவராவின் பூஜைக்கும் உதவினான். கிருஷ்ண பக்தனாக வளர்ந்தான்...
சுவாமிக்குச் சந்தனம் தயார்!
தந்தையும் மகனும் பண்டரிபுரம் சென்றனர்.
ரங்கா! ரங்கா!
பாண்டு ரங்கா!
மாதவராவும் மனைவியும் பண்டரிபுரம் செல்லும் பக்தர்களுக்குத் தங்கள் வீட்டில் இடைவழி உபசாரம் செய்வார்கள்.
அட, சிறுவன் துகாராம் கூட பரிமாறுகிறானே, என்ன அன்பு!
இசையில் ஆர்வம் காட்டிய துகாராமுக்குச் சங்கீதப் பயிற்சி....
ரீ....ஈ ஈ ...கா...
ரீ....ஈ ஈ....கா...



துகாராம் தனிமையை நாடி பக்திப்பாடல்களைப் பாடினான். பக்திக் கதைகளைப் படித்தான். ..பக்தியில் திளைத்தான். ...
துகாராம் வியாபாரத்தில் நாட்டமில்லாமல் வளர்கிறானே... கவலையாயிருக்கு...
ஒரு கல்யாணத்தைப் பண்ணிவைத்தால் சரியாகிவிடும்!
ஆனால் துகாராமுக்குச் சம்மதமில்லை.
நான் பண்டரிநாதனுடைய பக்தன். எனக்குச் சம்சாரத்தில் ஆசை இல்லை...
துகாராம் சொன்னதைப் பெற்றோர் கேட்கவில்லை...
என் நண்பர் சிறந்த பக்தர். அவர் பெண்ணைத்தான் பார்த்திருக்கிறேன்.
திருமணம் முடிந்து கமலாபாய் அந்த வீட்டுக்கு மருமகளாக வந்து சேர்ந்தாள்.


காலம் சென்றது... துகாராமின் தாய், தந்தை இருவரும் இறந்து போனார்கள்.
வியாபாரம் முழுவதையும் என் பொறுப்பில் விட்டு விட்டுப் போய் விட்டீர்களே, அப்பா.
ஆனால் துகாராமுக்கு வியாபாரத்தில் நாட்டமில்லை.
தேவநகர், கிருஷ்ணன் கோவிலைப் புதுப்பிக்க வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்யுங்கள்.
கோயில் புதுப்பிக்கப் பட்டது...
துகாராமின் பக்தியைப் பார்த்தீர்களா?
உம்... அப்பா சம்பாதித்த பணம்... தண்ணீராய் ஓட விடுகிறான்.
கோயில் கட்ட நீங்களே எல்லாப் பணமும் செலவிட வேண்டுமா? ஊராரும் பங்கேற்கட்டுமே?
அபசாரமாகப் பேசாதே, கம்லா!
துகாராமின் மனம் கிருஷ்ணனைத் தவிர வேறு எதையும் நாட வில்லை...
பாரே பாண்டு ரங்கா கிம்மாபேட தேசி...





சாதுக்களை உபசரிப்பது துகாராமுக்கு மகிழ்ச்சி அளித்தது.
பண்டரீபுரம் போகிறோம். இரவு தங்க இடம் கிடைக்குமா?
என் வீட்டில் தங்கலாம். பெருமைப் படுவேன்.
கமலாபாய்க்குப் பொறுக்கவில்லை.
இப்படி தினம் ஒரு பைராகி கூட்டத்தை அழைத்து வந்தால் குடித்தனம் எப்படி உருப்படும்?
கமலா! ஒவ்வொரு பக்தனுக்கும் உணவிடும்போது பாண்டுரங்கனே சாப்பிடுகிறான்!
நாட்டில் கடுமையான வறட்சி; பஞ்சம்...
பாண்டுரங்கா! சாப்பிடு!
நீங்க நல்லா இருக்கணும்!
அன்னதானத்துக்காக வீட்டிலிருந்த எல்லாப் பொருள்களையும் விற்று விட்டார் துகாராம்.
விதை நெல்லைக்கூடத் தானம் கொடுத்தாச்சு!


நில புலன்களை விற்றுக் கடைசியாக மனைவியின் ஆபரணங்களையும் அடகு வைத்தார்.
துகாராம்ஜீ! இந்தப் பணத்தையும் தானம் செய்து விடாதீர்! முதலீடு செய்து வியாபாரம் நடத்தும்!
செலவு செய்து கொண்டே போனால் உம்மால் வட்டி கூடக் கட்ட முடியாது!
பாண்டுரங்கனுக்கு உணவளிக்கிறேன். அவன் கவனித்துக் கொள்வான்.
ஊரார் ஏளனம் செய்தனர்.
இவன் தகப்பனார் பெரிய செல்வந்தர். பிள்ளை சொத்தையெல்லாம் அழித்து விட்டான்! பெண்டாட்டி நகைகளை அடமானம் வைக்கும் காலம் வந்து விட்டது!
துகாராம் வீட்டிலோ, பண்டரிபுரம் யாத்ரீகர்கள் பஜனை!
விட்டல்! விட்டல்
ஜே ஜே! விட்டல்!
நாட்கள் சென்றன. ஒரு நாள்....
எப்படி இருந்த குடும்பம் இது? வியாபாரத்தைக் கவனியாமல் இந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டீர்களே!




என்ன செய்ய வேண்டும், கமலா?
என் மாமனாரைப் போல் நன்கு வியாபாரத்தையும் கவனித்து, அளவாக தானமும் செய்ய வேண்டும்.
முதல் போட ஒன்றுமில்லையே!
இந்தாருங்கள்!
ஏது பணம்?
என் மாமியாரின் ஒரே ஒரு சங்கிலி மிச்சமிருந்தது. அதை அடகு வைத்து வாங்கி வந்தேன்.
பொருளீட்டி வரக் கிளம்பினார் துகாராம்.
லாபத்தோடு வருகிறேன் பார்!
வழியில் திடீரென்று மழை கொட்ட... புயல் வீச...
மாடுகளுக்கு ஆபத்து; அவிழ்த்து விட்டு விடுகிறேன்...



ஒரு மரத்தடியில் தியானத்தில் அமர்ந்து விட்டார் துகாராம்.
மறு நாள் காலை...
நெல் மூட்டைகள் புயலில் சிதறி, வெள்ளத்தில் கரைந்து, தானியமெல்லாம் அடித்துப் போகப்பட்டு விட்டன. நான் வியாபாரம் செய்வதில் பாண்டுரங்கனுக்கே விருப்ப மில்லை போலும்!
ஊரை நோக்கித் திரும்பி வந்த துகாராம்...
ஊருக்குள் நுழையவே மனம் வரவில்லை. இந்தக் குன்றின் மேல் அமரலாம்.
அதே நேரத்தில் துகாராம் வீட்டு வாசலில்...
அம்மா! அம்மா! அப்பா வந்துட்டார்!
கமலா! இந்தா, நூற்று நாற்பது வராகன். பத்திரமாக வை. நான் குளித்து விட்டு வருகிறேன்.



முதல் காரியமாக, மாமியாரின் சங்கிலியை மீட்கத் தீர்மானித்தாள் கமலாபாய்....
ஏற்கெனவே துகாராம்ஜீ வந்து பணத்தைச் செலுத்திவிட்டாரே; நீங்கள் வந்தால் நகையைக் கொடுக்கச் சொன்னார், இந்தாருங்கள்!
வியப்பில் ஆழ்ந்தாள் கமலாபாய்.
அட! முதல் வியாபாரத்திலேயே இவ்வளவு லாபமா!
வீடு திரும்பி ருசியாகச் சமைத்து...
குழந்தைகளா! நன்றாகச் சாப்பிடுங்கள். அப்பாவும் வந்துடுவார்....
ஆனால் துகாராம் வரவேயில்லை.
அவரை ஏசினேன் என்று கோபமோ...? அதனால் வராமல் இருக்கிறாரோ!
மறுநாள்... தேடிவர மகனை அனுப்பினாள். அவன் திரும்பி வந்து...
கோயில், குளம், பஜனைக்கூடம் எங்குமே அப்பாவைக் காணோமே!




கமலாபாய் கலங்கிப் போய்க் கணவனைத் தேடி வரத் தானே புறப்பட்டாள்...
குன்றின் மீது தியானத்திலிருந்த துகாராமைக் கண்டு பிடித்தாள்.
சுவாமி! என்னை மன்னித்து விடுங்கள். குழந்தைகளுக்காக-வாவது வீட்டுக்கு வர வேண்டும்....
கமலா! உன்னை மன்னிக்க என்ன இருக்கிறது? எல்லாப் பொருளையும் தொலைத்து விட்டு வீட்டுக்கு எப்படித் திரும்புவது?
என்ன சொல்கிறீர்கள்? என்னிடம் நிறையப் பணம் கொடுத்துச் சென்றீர்களே! அடகு வைத்த சங்கிலியையும் மீட்டு விட்டீர்களே!
இதோ உங்கள் அம்மாவின் நகை! இப்படியே வியாபாரம் தொடர்ந்தால் இழந்ததை யெல்லாம் சீக்கிரமே திரும்பப் பெறலாம்!



துகாராம் ஆச்சர்யம் அடைந்து, மனைவியிடம் நடந்ததை யெல்லாம் சொன்னார்...
...நான் இங்கேயேதான் இருந்தேன். பகவான்தான் உன்னிடம் வந்திருக்கிறார். நீ பாக்கியசாலி... எனக்குத்தான் கொடுத்து வைக்கவில்லை.
கமலாபாய் கணவரைத் தேற்றி வீட்டுக்கு அழைத்துப் போனாள்...
அப்பா!
ஆனால் துகாராமுக்கு வியாபாரத்தில் மீண்டும் நாட்டம் குறைந்தது. பாண்டுரங்கனை நேரில் தரிசிக்கும் ஏக்கம் மிகுந்தது...
பாண்டுரங்கா!
ஒருநாள் பஞ்சாயத்துத் தலைவர் மங்கள்ராவ் வந்து...
புன்செய்ப் பயிர்களைக் காக்க ஒரு நம்பிக்கையான மனிதர் தேவை. நீங்கள் சம்மதித்தால்...
துகாராம் சம்மதித்துப் பரண் ஏறினார்.
துகாராம்ஜி! கவண் கற்களை வீசி, பறவைகளை ஓட்டுங்கள்; ஆடு, மாடு மேயாது கவனித்துக் கொள்ளுங்கள். விளைச்சலில் எட்டில் ஒரு பங்கு உங்களுக்கு!..



மாலைநேரச் செக்கர்வானம், கருநீல மேகங்கள், பயிர் பச்சைகள் எல்லாமே பாண்டு ரங்கனாகத் தெரிந்தன துகாராமுக்கு...
ஹரே! பாண்டு ரங்கா!
பக்திப் பரவசமாகி, பாட ஆரம்பித்து விட்டார்...
துக்காமனே மாஜே...
பறவைகளும், விலங்குகளும் பயிரைக் கொத்தின... மேய்ந்தன...
கிளியும் பாண்டு ரங்கன்தான்! ஆடும் பாண்டு ரங்கனே!
மங்கள் ராவ் பயிர்களைப் பார்க்க வந்தார்...
துகாராம்! உம்மை நம்பி மோசம் போனேன்... நீர்தான் நஷ்ட ஈடு தரவேண்டும்!
ஆனால் அறுவடையின் போது...
எசமான்! இந்த வருஷம் முன்னைப் போலதையும் விட மகசூல் அதிகம்!
என்ன ஆச்சர்யம்! துகாராம்ஜி தெய்வ அருள் பெற்றவர்.... மன்னிப்புக் கேட்கிறேன்.


ஒரு நாள் அதிகாலையில் புடவையைத் தோய்த்து உலர்த்தி விட்டுக் கமலாபாய் நீராடி வர நதிக் கரைக்குச் சென்றாள்...
அப்போது ஒரு ஏழைப் பெண் கந்தல் அணிந்து வந்து...
அம்மா... தாயே...
துகாராம் மனமிரங்கி மனைவி உலர்த்தியிருந்த புடவையை அவிழ்த்து...
இந்தா...
கமலாபாய் திரும்பி வந்து....
இங்கே உலர்த்தியிருந்த புடவையைக் காணுமே?
பாண்டுரங்கன் கொண்டு போனான்...
கமலாபாய்க்குப் புரிந்து விட்டது...
எனக்கிருந்த ஒரே ஒரு மாற்றுப் புடவையை தானம் செய்து விட்டீர்களே! ஈரம் சொட்டச் சொட்ட நிற்கிறேனே....



கமலாபாய்க்குக் கோபம் வந்தது...
பாண்டு ரங்கன் பெயரைச் சொல்லிச் சொல்லி எல்லா வற்றையும் தானம் செய்துவிட்டீர்கள்... பாண்டுரங்கனைப் பாடுகிறவர்கள் எப்போதும் தரித் திரத்தில்தான் உழல வேண்டுமா?
கமலாபாய் ஆத்திரத்தில் மதிஇழந்து புறப்பட்டாள்...
இந்தக் குடும்பத்தை இந்தக் கதிக்குக் கொண்டு வந்தபாண்டு ரங்கன் மண்டையை நான் உடைக்கப் போகிறேன்!
அப்போது கிருஷ்ண பகவான்...
ருக்மிணி! ஆபத்து! கமலாபாய் என் மண்டையை உடைக்க வருகிறாள்!
துகாராமையும் கமலாபாயையும் அளவு மீறிச்சோதித்து விட்டீர்கள். சரி, நான் அவளைச் சமாதானப் படுத்துகிறேன்...
கமலா கோயிலுக்குள் நுழைந்ததும் கதவைச் சாத்திய ருக்மிணி...
அம்மா கருணை காட்டு...


பாண்டுரங்கனையே நம்பியுள்ள எங்களுக்கு நீங்கள் கருணை காட்டவில்லையே...
நான் மன்னிப்புக் கேட்கிறேன்...
ருக்மிணி, தன் கையால் கமலாபாயை அலங்கரித்தாள்.
காசிப்பட்டுச்சேலை, வைரநத்து, பொன்னாபரணங்கள், வளையல்கள்... சந்தோஷமாகப் போய்வா, கமலா...
கமலாபாயைத் தேடிக்கொண்டு ஓடி வந்த துகாராம், மனம் பதற, கோவிலின் சாத்திய கதவுகளுக்கு முன் நின்றிருந்தார்... கதவு திறந்ததும்...
நல்லவேளை, விக்கிரகங்களுக்கு எவ்விதச் சேதமும் இல்லை...
பாண்டுரங்கா!
கமலாபாய் துகாராமை வணங்கினாள்...
யார் கமலாவா? தேவி உனக்குக் காட்சி அளித்தாரா? அவரிடம் புடைவையும் நகையுமா கேட்டாய்? 'என் கணவருக்குத் தரிசனம் கொடுங்கள்' என்று கேட்கக் கூடாதா?


ஊர் திரும்பிய துகாராமின் ஏக்கம் அதிகரித்து, படுத்த படுக்கை யானார்...
இருமுறை கமலாவுக்குக் கிடைத்த பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லையே! பாண்டு ரங்கா!...
பண்டரீபுரத்தில் வழக்கம் போல் உற்சவம் நடந்தது...
ரங்கா! ரங்கா! பாண்டு ரங்கா!
ஆனால் பகவானுக்குத் திருப்தியில்லை...
துகாராம் உருகிப் பாடாத உற்சவம் எனக்கு உற்சாக மாகவே யில்லை...
கருடனை அனுப்பலாமே...
கருட பகவான் துகாராமை அழைத்துப்போக வந்தார்...
பகவானைத் தூக்கிச் செல்லும் உம்மீது என் பாதம் படலாகாது... உற்சவம் முடிந்த பிறகு பகவானை இங்கே அழைத்து வாருங்கள்...
அவ்வாறே துகாராமுக்கு காட்சியளித்தார் கிருஷ்ண பரமாத்மா...
துகாராம்! புஷ்பக விமானம் அனுப்பியிருக்கிறேன்... கமலாபாயும் நீயும் வைகுந்தம் வந்து சேருங்கள்!

அவர் ஓர் அசகாய சூரர்!

- திருப்பத்தூர் திருத்தளியான்



* காட்பாதர் பி. டி. பர்னம்.

ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்பு 'தி வேர்ல்ட்ஸ் கிரேட்டஸ்ட் ஷோ மேன்' என்று தன்னைத் தானே அழைத்துக் கொண்டவர் பி.டி. பர்னம். ஆனால், மக்களோ அவரை 'அமெரிக்க ஷோ பிஸினஸின் காட் பாதர்' என்றழைத்தார்கள்.

பர்னம் ஒரு சிறந்த மனிதாபிமானி; கவிஞர்.

அழகற்ற குரூபிகள், குள்ளர்கள், உதவாக்கரைகள், அங்கஹீனர்கள், தீராத விசித்திர நோயாளிகள் போன்றவர்களை மக்கள் அருவருத்து ஒதுக்கித் தள்ளியதால், தாழ்வு மனப்பான்மையோடு வேலையேதும் கிடைக்காமல் வறுமையில் வாடியவர்கள் பலர். அப்படிப்பட்டவர்களில் சிலரை உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் தேடிக் கண்டு பிடித்து அழைத்து வந்து, அதே மக்கள் மத்தியில் அவர்களையும் மனிதர்களாக, புகழ் பெற்ற நட்சத்திரங்களாக, கோடீஸ்வரர்களாக மாற்றியவர் இரக்க சிந்தையுள்ளவர் பர்னம்.

தம் வாழ்க்கையை நாடகமாக எழுதி, டைரக்ட் செய்து நடித்து, பிராட்வே தியேட்டரில் அரங்கேற்றினார் 'பி. டி. பர்னம் பிரசென்ட்ஸ் பி. டி. பர்னம்' என்ற அந்நாடகம் அமெரிக்காவில் பெரும் வரவேற்பையும், பாராட்டையும் பெற்றது.

இன்றும் அமெரிக்காவில் புகழ் பெற்ற பெரிய சர்க்கஸ் கம்பெனி ஒன்று அவர் நினைவாக 'ரிங்லிங் பிரதர்ஸ் அன்ட் பர்னம் அன்ட் பெய்லி சர்க்கஸ்' என்ற பெயரில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

கன்னெக்டிகெட் என்ற இடத்தில் ஓர் ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் பி. டி. பர்னம். (பினியாஸ் டைலர் பர்னம்)

'பான்பர்ரி' என்ற நியூஸ் பேப்பரின் ஆசிரியராகப் பணியாற்றிய போது, அவதூறு வழக்கொன்றில் பர்னத்திற்கு அறுபது நாட்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

விடுதலையாகி வெளியே வந்த பர்னம், சிறை வாசலில் தயாராக நின்ற ஆறு குதிரைகள் பூட்டிய ரதத்தில் அமர்ந்து கொள்ள, நாற்பது குதிரை வீரர்கள் அணி வகுத்துச் செல்ல, பீரங்கிகள் முழங்க, மூன்று மைல்கள் ஊர் வலமாகச் சென்று தம் இருப்பிடத்தை அடைந்தார். தம் சொந்தச் செலவில்தான்!

நியூயார்க்கில் பர்னம் வேலை தேடிக் கொண்டிருந்த போது, பிலடெல்பியாவில் வசித்து வந்த 'ஜாய்ஸ் ஹெத்' என்ற அடிமையைப் பற்றிக் கேள்விப்பட்டார்.

அவள் தனக்கு 161 வயதாவதாகவும், தான் ஜார்ஜ் வாஷிங்டனின் பெற்றோரிடம் நர்ஸாகப் பணியாற்றியதாகவும் கூறிக் கொண்டிருந்தாள்.

நண்பர் ஒருவரிடம், கணிசமான அளவு டாலர் கடன் பெற்றுக் கொண்டு பர்னம் பிலடெல்பியா சென்றார். ஹெத்திற்கு மாத ஊதியம் பேசி, அட்வான்ஸ் கொடுத்து அவளைத் தம்மோடு நியூயார்க் நக



* சாங், எங் சைனீஸ் சயாமீஸ் இரட்டையர்கள்.



* 413 பவுண்ட் எடையுள்ள ராட்சசப் பெண் ஒரு கையில் தாங்கிக் கொண்டிருப்பது லில்லிபுட் (குள்ள) ராஜா.



* பருத்த பெண் அருகே, வாழும் எலும்பு மனிதன்.

ருக்கு அழைத்து வந்தார்.

'உங்கள் கேள்விகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட ஆச்சரியமான பெண்மணி இந்த ஜாய்ஸ் ஹெத். நமது தேசத் தந்தையான வாஷிங்டன் குழந்தையாக இருந்த போது அவருக்கு முதல் ஆடையை உடுத்திய பெண்மணி இவர்தான்' என்று ஹெத்தைப் பற்றித் துண்டுப் பத்திரிகைகள், பிட் நோட்டீஸ், போஸ்டர், பேனர் என்று பெரும் பொருட் செலவில் பரபரப்பாக விளம்பரம் செய்து, ஹெத் தோன்றும் குறிப்பிட்ட நாளை மிகுந்த ஆர்வத்தோடும், ஆவலோடும் நகரம் முழுவதும் எதிர்பார்க்க வைத்தார் பர்னம்!

இதற்கு நேர்மாறாக இன்னொருபுறம், 'ஹெத் உண்மையில் உயிருள்ள பெண் அல்ல'வென்றும், இந்திய ரப்பரால் செய்யப்பட்ட பொம்மை என்றும், தமது ஆட்கள் மூலம் இரகசியமாக நகர் முழுவதும் வதந்தியைப் பரப்பினார்.

இந்த யுக்தி எதிர்பார்த்ததை விட அதிக பலனைத் தந்தது.

கண் காட்சியில் காட்டப்பட இருப்பது பெண்ணா, பதுமையா? என அறியத் துடித்து பெருங் கூட்டம் சேர்ந்தது. டிக்கெட் அமோகமாக விற்பனையானது!

கூட்டத்தின் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையே பார்வையற்ற, பற்களை இழந்த, கூன் விழுந்த, உட்காரக் கூட இயலாத ஹெத்தை ஒரு சோபாவில் கிடத்தி, தூக்கி வரச் செய்து பார்வைக்கு வைத்தார் பர்னம்.

சில மாதங்களில் ஹெத் இறந்து விட்டார். அவளின் உண்மை வயதை அறிந்து கொள்ளும் ஆவலில் உடலை போஸ்ட்மார்ட்டத்திற்கு அனுப்பி வைத்தார் பர்னம்.

சோதனை மூலம் அறியப்பட்ட அவள் உண்மை வயது எண்பது தான்!

பின்னர் பல தொழில் செய்து பிழைப்பு நடத்திக் கொண்டிருந்த பர்னம், ஒருநாள் நியூயார்க் பிராட்வேயில் உள்ள ஐந்து மாடிப் பளிங்குக் கட்டடமான 'கார்டர்ஸ் அமெரிக்கன் மியூஸியம்' சென்றார்.

பன்னாட்டுப் பலவகைப் பறவைகள், பைபிள் லான்டின் மாதிரி வடிவம், இந்திய ஆயுதங்கள், பெயின்டிங்குகள், சிலைகள், ஜெனரல் சான்டா அன்னாவின் மரத்தாலான செயற்கைக் கால், பெரிய விழாக்கள் கண்காட்சிகள் நடத்தப் போதுமான இடம் இருப்பதைக் கண்டார்.

தன்னிடமுள்ள பொருட்களை விற்றும், அடகு வைத்தும் சேர்த்த பணத்தில் மியூஸியத்தைக் குத்தகைக்கு எடுத்தார்.

முதல் வேலையாக ஒளி வெள்ளம் உமிழும் பிரம்மாண்டமான கால்ஸியம் விளக்குகள் பொருத்தப்பட்டன.

பறவைகள், மிருகங்களின் அழகிய பெரிய கட்அவுட்டுகள் சாலையோரங்களில், சாலையில் செல்பவர்

களின் கவனத்தைக் கவரும் வண்ணம் அமைக்கப்பட்டன. தாய்மார்கள் தங்கள் குழந்தைகளோடு வந்து கண்டு களிக்க வேண்டுமென விளம்பரம் செய்தார்.

ஜப்பானியக் கடலோடிகளால் பிடிக்கப்பட்டு, புகழ் பெற்ற பிரிட்டிஷ் விஞ்ஞானி ஒருவரால் இந்த மியூஸியத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட கடற் கன்னி ஒன்று இந்த மியூஸியத்தில் இருந்தது.

குரங்கின் கை கால்களுடன், பாதி மீன் உடலும், பாதி பெண் உடலும் கொண்ட இந்தக் கடல் கன்னியைப் பற்றி நியூயார்க் முழுமையும் இதற்கு முன் இல்லாத அளவுக்குப் பெரும் செலவில் விளம்பரம் செய்தார் பர்னம்.

பத்திரிகையாளர்களைக் கூட்டி, அவர்களே வியக்கும் வண்ணம் கடல் கன்னியைப் பற்றி அளந்தார்.

விளைவு டிக்கெட் விற்பனையில் புதிய அலையும், புதிய சாதனையும் ஏற்பட்டன.

'விளம்பரத்தினால் பெரிய அளவில் லாபம் பெறலாம்' என்ற நம்பிக்கையுடையவர் பர்னம். அவர் நம்பிக்கை வீண் போகவில்லை.

புதுமையான, விசித்திரமான, இயற்கைக்குப் புறம்பான, நம்புதற்கரிய மனிதப் பிறவிகளை எல்லாம் உலகின் பல பாகங்களிலிருந்தும் கொண்டு வந்து சேர்த்தார்.

ராட்சத உருவமுடைய ஆண்கள், பெண்கள், மிகக் குள்ளமானவர்கள், உயிருடன் கூடிய எலும்புக் கூடு மனிதர்கள், ஊசித் தலையர்கள், குரங்கு முக, சிங்க முக, நாய் முகப் பையன்கள். தாடி மீசை வளர்ந்த பெண்கள். மூன்று கால்கள் உடைய மனிதர்கள் என்று அதிசயப் பிறவிகள் பலர் பர்னத்தின் சர்க்கஸ் மேடையில் தோன்றினார்கள்.

இவர்களில் மக்களை அதிகம் கவர்ந்தவன் இருபத்து இரண்டு அங்குல உயரமே இருந்த சார்லி தான்! பர்னம் பிறந்த கன்னெக்டிகெட் என்ற ஊரில் ஒரு தச்சரின் ஐந்து வயது மகன்தான் சார்லி. சுரப்பிகள் (கிளாண்டுகள்) வளர்ச்சியடையாததால் மிகக் குள்ளமாக இருந்தான். இவனுக்கு 'ஜெனரல் டாம் தம்ப்' என்று பெயர் மாற்றம் செய்தார் பர்னம்.

விக்டோரியா மஹாராணியும், அவரது பரிவாரமும் பர்னத்தின் சர்க்கஸ் காட்சியைக் கண்டு மகிழ ஏற்பாடு செய்யும்படி, யு. எஸ். அம்பாஸிடர் மூலம் கேட்டுக் கொள்ளும் அளவுக்கு பர்னம் புகழ் பெற்றிருந்தார்.

1855—இல் பர்னம் தமது வாழ்க்கையில், நிகழ்ந்த சம்பவங்களையும், சாதனைகளையும் எழுதி ஒரு பெரிய நூலாக வெளியிட்டார்.

கேளிக்கை பற்றி வெளிவந்த நூல்களில் இந் நூல் விற்பனையில் உலக சாதனையை ஏற்படுத்தியது. தொடர்ந்து இந் நூல் எட்டுப் பதிப்புகள் வெளி வந்தன.

* குள்ளப் பெண் சீட். அருகே ராட்சச மனிதன் கேப்டன் பேட்ஸ்.



* உடலின் எப்பகுதியின் தோலையும் எட்டு அங்குல நீளத்துக்கு மேல் இழுத்துக் காட்டும் ஜேம்ஸ் மோரீஸ்.



* குள்ளன் டாம்ப் தம்ப் அவன் மனைவி.





* தாடி மீசை முளைத்த பெண்.

சர்க்கஸ் காட்சிகளில் இந் நூல் பாப்கார்ன் மாதிரி எக்கச்சக்கமாக விற்பனையாயிற்று.

குள்ளன் டாம்தம்பிற்கும், அவனைப் போன்ற குள்ளமான பெண்ணான 'லவினியா வாரன்' என்பவளுக்கும் திருமணம் செய்து வைத்த பர்னம், வெள்ளை மாளிகைக்கு அவர்களை அழைத்துச் சென்று, ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கனுக்கு அவர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

'சிவில் வார்' முடிந்தவுடன் நடந்த கொண்டாட்டத்தில் பர்னம், தமது யானைகள், ஒட்டகங்கள், குதிரைகள், பணியாட்களுடன் ஊர்வலத்தில் கலந்து கொண்டு அனைவரையும் மகிழ்வித்தார்.

ஒருநாள் பர்னத்தின் இல்லம், மியூஸியம், காட்சி சாலை ஆகியவை எதிர்பாராத விதமாக தீக்கிரையாகி முற்றிலும் அழிந்து போய் விட்டன.

அனைத்தையும் இழந்து விட்ட போதிலும் பர்னம் மனம் தளரவில்லை.

அச் சமயத்தில்தான் அமெரிக்காவில் புதிதாக முதன் முதலில் ரயில்கள் ஓடத் தொடங்கி இருந்தன. இவ் வசதியைப் பயன்படுத்திக் கொள்ள எண்ணி இரண்டு இளம் சர்க்கஸ் கலைஞர்களைத் தம்மோடு சேர்த்துக் கொண்டு பிரம்மாண்டமான கான்வாஸ் கூடாரத்தின் கீழ் ஊர், ஊராய் ரயிலில் பயணம் செய்து சர்க்கஸ் காட்சிகளை நடத்தத் தொடங்கினார் பர்னம்.

குறைந்த செலவில் உல்லாசப் பயணிகளை ஆயிரக் கணக்கில் கொண்டு வந்து சேர்க்க ரயில்—ரோடு கம்பெனிகளிடையே ஒப்பந்தம் செய்து கொண்டார்.

ஹம்பர்க், ஜெர்மனியில் நெருப்புக் கோழிகளையும், ஒட்டகச் சிவிங்கிகளையும் சர்க்கஸ் கம்பெனிக்கு பர்னம் வாங்கிக் கொண்டிருந்த போது, அவர் மனைவி நியூயார்க்கில் இறந்து விட்டார்.

சரியாகப் பத்து மாதங்கள் கழித்து, தமது அறுபத்து நாலாவது வயதில் பர்னம் இருபத்தி நான்கு வயது நான்ஸி பிஷ் என்ற பெண்ணை இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். இவர்களது இல் வாழ்க்கை பதினேழு ஆண்டுகள் நீடித்தது.

அமெரிக்காவில் பிறந்த முதல் யானைக் குட்டியின் பெயர் 'கொலம்பியா'. இந்த யானைக் குட்டி ஜேம்ஸ் பெய்லி என்ற சர்க்கஸ் கம்பெனி முதலாளியான ஓர் இளைஞருக்குச் சொந்தமானது.

யானையையும், அதன் குட்டியையும் ஒரு லட்சம் டாலருக்கு தமக்கு விலைக்குத் தருமாறு பெய்லிக்கு பர்னம் தந்தி ஒன்று கொடுத்தார்.

யானையை விலைக்குத் தர மறுத்த பெய்லி, பர்னம் அனுப்பிய தந்தியைப் புகைப்படமெடுத்துத் தம்முடைய விளம்பரத்திற்குப் பயன்படுத்

* சிங்க முகப் பையன் லியோனல்





திக் கொண்டார்!

இந்த விளம்பரம் பெய்லியின் சர்க்கஸ் கம்பெனிக்கும், யானைக்கும் மக்களிடையே பெரும் செல்வாக்கை ஏற்படுத்தியது.

தம்மை வைத்து விளம்பரப்படுத்திக் கொண்ட சவடால் பேர் வழி பெய்லியோடு, சில வாரங்களில் தொழில் முறையில் இணைந்து விட்டார் பர்னம்.

'பர்னம் அண்ட் பெய்லி சர்க்கஸ்' ஐரோப்பா முழுவதும் சுற்றுப் பயணம் செய்து பெரும் பணத்தையும், புகழையும் சம்பாதித்தது.

வீடு திரும்பிய பர்னம் சுகவீனமுற்றார். படுக்கையில் இருந்த நிலையில் அவர் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்க, நியூயார்க்கில் வெளிவந்த 'ஈவினிங் சன்' என்ற பத்திரிகை பர்னத்தின் படத்தைப் பெரிதாகப் போட்டு பர்னம் இறந்து விட்டதாகச் செய்தி வெளியிட்டு, தனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்து இருந்தது.

இதைக் கண்ணுற்ற பர்னம், அப் பத்திரிகைக்கு போன் செய்து, தன் இறப்பிற்காக இரங்கல் செய்தி வெளியிட்டமைக்காக நன்றி கூறியதோடு, அச் செய்தியை மிக அழகாக வெளியிட்டிருப்பதாகவும் அப் பத்திரிகையைப் பாராட்டினார்.

மார்க்ட்வைன் இவரை **'A VAST PEANUT STAND'** என்றார். யேல் பல்கலைக் கழகப் பேராசிரியர் வில்லியம் லியான் கூறினார். "இதுவரை வாழ்ந்தவர்களில் சிறந்த மனோதத்துவ நிபுணன் பர்னம். விளம்பரங்களில் இவன் ஒரு ஷேக்ஸ்பியர்."

அது உண்மைதான்!

தள்ளாதவனா?



சமீபத்தில் காலமான 'கலைமகள்' பத்திரிகையின் ஆசிரியர் வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன் அவர்கள் சிலேடை பேசுவதில் வல்லவர்.

ஒரு கூட்டத்திற்குச் சென்றிருந்த நான் அக்கூட்டம் முடிந்ததும், என் நண்பர் ஒருவருடன், கி. வா. ஜ. அவர்களையும், என் காரில் அழைத்துக் கொண்டு வந்து, அவர் வீட்டின் முன்னால் இறக்கி விட்டேன். அவர் எங்களை வற்புறுத்தி வீட்டுக்குள் அழைத்துச் சென்று எங்களுக்கு மோர் கொடுத்தார். மோர் பருகிய பின், அவரிடம் விடைபெற்றுக் கொண்டு நாங்கள் காரை நோக்கி வந்தோம். அவரும் எங்களை வழியனுப்ப, காரின் அருகே வந்தார்.

நாங்கள் காரில் ஏறி உட்கார்ந்தோம். ஆனால், கார் புறப்படவில்லை! உடனே நாங்கள் இறங்கிக் காரைத் தள்ள முயன்றோம். உடனே கி. வா. ஜ. அவர்களும் எங்களுடன் சேர்ந்து காரைத் தள்ளுவதற்கு வந்தார்கள்.

"ஐயா, நீங்கள் தள்ளலாமா? வேண்டாம், வேண்டாம்" என்று கூறி, அவரைத் தடுத்தோம். அவர் கேட்கவில்லை. "என்ன, என்னை நீங்கள் தள்ளாதவன் என்று நினைத்து விட்டீர்களா?" என்று இருபொருள் படக் கூறி, அவரும் சேர்ந்து தள்ள, கார் புறப்படத் தயாராகி விட்டது!

— அழ. வ.



11 வயது விமானி!

சாக்ரமெண்டோ: ஒற்றை எஞ்ஜின் கொண்ட விமானத்தை ஓட்டிச் சென்று அட்லாண்டிக் கடலைத் தாண்டிப் பறந்து சாதனை புரிந்திருக்கிறான் 11 வயது அமெரிக்கச் சிறுவன் ஒருவன். அவனது பெயர் கிறிஸ்டொபர் லீ மார்ஷல்.

''பூமியிலிருந்து வானத்திற்கு பறப்பதென்பதே ஒரு பரவசமூட்டும் அனுபவம்தான். அது எனக்கு மிக மிகப் பிடிக்கிறது'' என்கிறான் மார்ஷல். கலிபோர்னியாவில் ஓசியானோ பகுதியில் வசிக்கும் இச் சிறுவன் 5—ம் வகுப்பு படிக்கிறான்.

1927 ஆம் ஆண்டில் சார்லஸ் லிண்ட்பர்க் என்னும் 25 வயது அமெரிக்க இளைஞர் அமெரிக்காவிலிருந்து பாரிஸ் நகருக்கு ஒற்றை எஞ்ஜின விமானத்தில் தன்னந்தனியே பறந்து உலக சாதனை நிகழ்த்தினார். சாண்டியாகோ நகரிலிருந்து கிளம்பிய அவர் செயிண்ட் லூயிஸ் நகரில் சற்றே இறங்கினார். பின்பு நியூயார்க்கில் இறங்கினார். அதன் பிறகு, நியூயார்க்கிலிருந்து கிளம்பி இடை வழியில் எங்கும் இறங்காமல், முப்பத்து மூன்றரை மணி நேரம் இடைவிடாமல் பறந்து, அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்து சாதனை படைத்திருந்தார் லிண்ட்பர்க்.

அதே பாதையில்தான் இந்தப் பதினோரு வயதுச் சிறுவனும் இப்போது பயணமானான். கலிபோர்னியாவிலுள்ள சாண்டியாகோ நகரிலிருந்து ஜூலை 7—ஆம் தேதியன்று ஓர் ஒற்றை எஞ்ஜின் விமானத்தில் கிறிஸ்டொபர் லீ மார்ஷல் தனது பயணத்தைத் துவக்கினான். இடை வழியில் டெக்சஸ் மாநிலத்தில் கெர்ரிவில் என்னும் இடத்தில் இறங்கி தனது விமானத்தை மாற்றிக் கொண்டான். அங்கிருந்து 'மூனி—252' எனப்படும் இன்னோர் ஒற்றை எஞ்ஜின் விமானத்தில் புறப்பட்டு செயிண்ட் லூயிஸ், நியூயார்க், மாண்ட்ரியால், ரெக்யாவிக், குலுசுக், கிளாஸ்கோ வழியாக ஜூலை 14—ந் தேதியன்று பாரிஸ் விமான நிலையத்தில் வந்து இறங்கினான்.

துணைக்கு வந்தவர்

கிறிஸ்டொபருக்குத் துணையாக ராண்டி கன்னிங்ஹாம் என்னும் விமானி ஒருவரும் அந்த விமானத்தில் இருந்தார். ஆனால் விமானத்தை ஓட்டியது என்னவோ கிறிஸ்டொபர் தான். வழியில் ஓரிடத்தில் வெளிச்சம்

குன்றிப் போய், எதிரிலே என்ன இருக்கிறது என்று தெரியாத நிலை ஏற்பட்ட போது மட்டும் கன்னிங் ஹாம் சிறிது நேரம் ஓட்ட வேண்டி வந்தது. எஞ்ஜின் சூடாகிப் போய், கிரீன்லாந்து அருகிலுள்ள ஒரு மலைப் பாங்கான தீவில் விமானத்தைக் கட்டாயமாக இறக்க வேண்டி வந்தது. அந்தத் தருணத்தில்தான் கன்னிங் ஹாம் அந்த விமானத்தை ஓட்டினார். மற்றபடி, இந்தப் பயணத்தின் 2268 கிலோ மீட்டர் நெடுகிலும் முழுக்க முழுக்க இந்த விமானத்தை ஓட்டியது சுட்டிப்பயல் கிறிஸ்டொபர்தான்.

தனது கரடி பொம்மையைக் கையில் இடுக்கியவாறு பாரிஸ் நகரின் லெ பூர்கே விமான நிலையத்தில் வந்து இறங்கிய போது, பெருமை பிடி படவில்லை கிறிஸ்டொபருக்கு. ''எனக்கு மிகவும் பெருமையாக இருக் கிறது. அதே சமயம், களைப்பாகவும் இருக்கிறது'' என்று நிருபர்களிடம் கூறினான் அவன்.

''நானும் எத்தனையோ பேருடன் விமானத்தில் பறந்திருக்கிறேன். ஆனால் வயதானோர் பலரைக் காட்டிலும் இவன் மிக நன்றாக விமா னம் ஓட்டுகிறான். அபாரமான நெஞ்சுறுதி படைத்தவன் இவன். புலிப் பாய்ச்சல் பாய்கிறான்'' என்று கிறிஸ்டொபரை மனம்திறந்து பாராட் டினார் அவனுடன் அந்த விமானத் தில் பயணம் செய்த ராண்டி கன்னிங் ஹாம். அமெரிக்கக் கடற்படையில் விமானக் கமாண்டராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர், வியட்நாம் போரில் 300 தடவைக்கும் மேல் விமானத்தை ஓட்டிச் சென்று அனு பவம் பெற்றவர்; அந்தப் போரின் போது மற்ற அனைவரைக் காட்டிலும் அதிக முறைகள் வீரப் பதக்கங்கள் பெற்றுப் பாராட்டப்பட்ட அமெரிக்க விமானி இவர்தாம். இப்போது இவர் சாண்டியாகோ நகரிலுள்ள தேசிய விமானப் பயிற்சிப் பள்ளியின் தலை வராக இருக்கிறார்.

தாயின் பெருமை

''இவனைத் தனியே கடைத் தெரு வுக்கு அனுப்புவதென்றால்கூட எனக் குப் பயம்! ஆனால், இவனோ அட் லாண்டிக் கடலை விமானத்தில் கடப் பதற்குத் தயாராகிக் கொண்டிருக்கி றான். என் கண்களை நம்பவே முடிய வில்லை'' என்று கிறிஸ்டொபரின் தாயார் கெய்ல் மார்ஷல், அவன் விமானத்தில் புறப்படுவதற்கு முன் பாகப் பெருமிதத்துடன் குறிப்பிட் டார். ''நினைத்ததைச் சாதிக்க வேண் டும் என்று அடம் பிடிப்பான் இவன். அவற்றுள் இந்த விமானம் ஓட்டுவ தும் ஒன்று'' என்று அவர் கூறினார்.

4 வயதில் பறந்தான்!

கிறிஸ்டொபர் லீ மார்ஷல் 4 வய தாக இருந்த போதே பறக்கத் துவங்கி விட்டானாம். அவனுடைய அப்பா லீ ஒரு விமானக் கம்பெனியில் பைலட் ஆக இருந்தார். தமது குழந் தைக்கு 4 வயதாக இருந்த போதே அவனுக்கு விமானம் ஓட்டுவதற்குக் கற்றுக் கொடுக்கத் தொடங்கினார் அவர். ஏழு வயதான போது கிறிஸ் டொபருக்கு முறைப்படி பயிற்சி அளிக்கப்பட்டது.

கிறிஸ்டொபருக்கு 10 வயதான போது, அவன் அமெரிக்காவின் குறுக்கே விமானம் ஓட்டிய மிகவும் இளம் விமானி என்னும் பெருமை யைப் பெற்றான். ஆனால், கலிபோர் னியாவில் சான் யுவான் பகுதியைச் சேர்ந்த டோனி ஏலியன்ஜினா என் னும் 9 வயதுச் சிறுவன் இதே போல விமானம் ஓட்டி அந்தச் சாதனையை முறியடித்து விட்டான். கிறிஸ்டொ பர் அயர்ந்து விடவில்லை. அதைவிடப் பெரிய சாதனையைச் செய்ய உறுதி எடுத்துக் கொண்டான்.

எனவே, கிறிஸ்டொபர் இப்போது அட்லாண்டிக் கடலின் குறுக்கே பறந்து புதிய சாதனை நிகழ்த்தி இருக் கிறான். 11 வயதுச் சிறுவன் ஒரு வனுக்கு இதுவே மாபெரும் சாதனை என்று மற்றவர்கள் நினைக்கக்கூடும். ஆனால், கிறிஸ்டொபர் அப்படி நினைக்கவில்லை. ''நான் உலகைச் சுற்றிப் பறக்க விரும்புகிறேன். முடிந் தால் சந்திரனுக்கும் போக ஆசை'' என்று கூறுகிறான் இவன்.

— அமெரிக்கத் தகவல் நிலையம்.



பழைய கதை: புதிய பாடல்

அவன் ஏன் சிரித்தான்?

—குழந்தைக் கவிஞர்

அரச ருக்குப் படுக்கை போடும்
அமிர்தம், அந்தப் படுக்கையில்
விரும்பி ஒருநாள் படுத்துப்
பார்த்தான்,
வெகுநாள் ஆசை தீரவே.

மிருது வாக இருந்த படுக்கை
மேலே ஏறிப் படுத்தவன்,
'அருமை, அருமை' என்று கூறி
அயர்ந்து தூங்கி விட்டனன்.

படுப்ப தற்கு வந்த அரசர்
பார்த்தார் இந்தக் காட்சியை.
உடனே அவரும் கோபங் கொண்டே
உரத்த குரலில் கத்தினார்.

சத்தம் கேட்டுக் காவ லர்கள்
தாவி ஓடி வந்தனர்.
மெத்தை மீது கிடந்த அவனை
விரைந்து கீழே தள்ளினர்.

தரையில் விழுந்த அமிர்தம் உடனே
சட்டென் றெழுந்து பார்த்தனன்.
அரச ரோடு காவ லர்கள்
அங்கே நிற்கக் கண்டனன்.

"அரசே, தவறு செய்து விட்டேன்.
ஆன போதும், தயவுடன்
கருணை காட்ட வேண்டும்"
என்றே
காலைப் பிடித்துக் கெஞ்சினன்.

"தவறு செய்த உன்னை நாமும்
தண்டிக் காமல் விடுவதா?
சவுக்கி னாலே பத்து அடிகள்
தருவோம்" என்றார் மன்னவர்.

கொஞ்சங் கூடக் கவலை இன்றிக்
குலுங்கக் குலுங்க அமிர்தமும்
அஞ்சி டாமல் சிரித்தான். அவனை
அரசர் பார்த்து வியந்தனர்.

"என்ன கார ணத்தி னாலே
இதுபோல் நீயும் சிரிக்கிறாய்?"
என்றே அரசர் கேட்க, அமிர்தம்
என்ன சொன்னான், தெரியுமா?

"பத்து நிமிடம் படுத்த தற்கே
பத்து அடிகள் தருகிறீர்.
நித்தம் படுக்கும் உம்மை நானும்
நினைத்துப் பார்த்துச் சிரிக்கி
றேன்"

முதலில் சாப்பிட்டது ஏன்?

— பி. ஆர். பார்த்தசாரதி

வாட்டார் என்ற கிராமத்தில் ராஜகோபாலர் என்ற தனவந்தர் தம் மனைவியுடன் வாழ்ந்து வந்தார்.

அவருடைய மகள் சென்னைக் கல்லூரி ஒன்றில் படித்து வந்தாள்.

சிறு வயதில் காலமான தன் மகள் நினைவாக அன்ன சத்திரம் ஒன்று கட்டி, அதில் தினம் ஐம்பது சிறுவர் சிறுமியருக்கு, காலையும் இரவும் சாப்பாடு போட்டு வந்தார்.

ஆனால் அவரது ஒரு நடத்தை மட்டும் எவருக்கும் புரியாததாக இருந்தது.

காலையில் ஒன்பது மணிக்கு சிறுவர்களுக்குச் சாப்பாடு பரிமாறப்படும்.

இவர் காலை 8.30 மணிக்கே தம் மனைவியுடன் வந்து நேரே சமையலறைக்கு செல்வார்.

சாதம், குழம்பு, ரசம், கறி, மோர் என ஒவ்வொன்றிலும் கொஞ்சம் எடுத்து இவரும் இவர் மனைவியும் இலையில் போட்டுக் கொண்டு சாப்பிடுவார்கள்.

சாப்பிட்டு முடிந்ததும் மனைவியுடன் சென்று விடுவார்.

இரவும் இதே மாதிரிதான்.

7.30 மணிக்கு சிறுவர்களுக்குச் சாப்பாடு போடப்படும்.

7 மணிக்கு ராஜகோபாலரும் அவருடைய மனைவியும் வருவார்



கள்.


காலை மாதிரியே சாப்பிட்டு விட்டுத் திரும்புவார்கள்.

எல்லாருக்கும் இவர்களது செய்கை விந்தையாக இருந்தது:

ஒருநாள் அவரது காரியஸ்தர் அவரிடம் ''அய்யா, சொல்கிறேனே என்று கோபித்துக் கொள்ளக் கூடாது'' என்ற பீடிகையுடன் ஆரம்பித்தார். ''சாப்பாட்டுத் தர்மம் என்பது மற்றவர்கள் சாப்பிட்ட பின் நாம் சாப்பிடுவதுதான் முறை. ஆனால், நீங்கள் செய்வது தர்ம சாஸ்திரத்திற்கு எதிராக உள்ளதே!" என்றார்.

இதைக் கேட்ட ராஜகோபாலர் சிரித்து விட்டுச் சொன்னார்: ''காரியஸ்தரே... சாப்பாடு சிறுவர்களுக்குச் செய்யப்படுகிறது. சிறுவர்கள் தானே என்ற அலட்சியத்தில் சமையற்காரர்கள் சாமான்களைக் குறைத்தும் போட்டுச் சுவையின்றி உணவு சமைப்பார்கள். காய்கறிகளைச் சரியாக வேக வைக்க மாட்டார்கள். இப்போது அவர்களுக்கு முன் சிறுவர்களுக்குச் சமைத்த உணவை நாங்கள் சாப்பிடுவதால், முதலாளியும் இதைத்தான் சாப்பிடுகிறார் என்ற எண்ணத்திலும் பயத்திலும் கவனமாகச் செய்வார்கள். இதனால் மாணவர்களுக்கும் நல்ல சாப்பாடு தொடர்ந்து கிடைக்கும். அதனால் தான் நாங்களே எடுத்து வைத்துக் கொண்டு அவர்களுக்கு முன்பாகவே சாப்பிடுகிறோம்'' என்றார்.

காரியஸ்தரும் மற்றவர்களும் 'அடடே, இவர்களின் செயலுக்குத் தவறான எண்ணம் கொண்டிருந்தோமே!' என்று நினைத்து வெட்கப்பட்டனர்.



வணக்கம் செலுத்தாதது ஏன்?

தலைமையாசிரியர் தங்கக் கண்ணுவுக்குக் குழப்பமான குழப்பம்!

படித்துக் கொண்டிருந்த காலத்தில் பார்த்த சாரதி பண்பும் நல்ல குணமும்உடையவனாகஇருந்தானே? இப்போது மட்டும் ஏன் இந்த மாற்றம்?

மேல்நிலைக் கல்வியை அவன் முடித்து, அதன் பின் மின் பிரிவில் டிப்ளமோ பட்டம் பெற்று இப்போது இதே தேனியில் பொறியியல் வல்லுனராகப் பணிபுரிந்து வருகிறான். கை நிறையச் சம்பளம் அவனுக்கு. இருந்தும், தங்கக் கண்ணுவை அவன் எந்த இடத்தில் சந்தித்தாலும், அது எந்தச் சூழ்நிலையாக இருந்தாலும் தவறாது வணக்கம் செய்து புன்னகையோடு பேசும் பண்புள்ளவனாயிற்றே! சில சமயங்களில் தங்கக் கண்ணு தனது ஸ்கூட்டரில் வேகமாகச் சென்று கொண்டிருக்கும் போது அவன் பார்த்தால் கூட, பேசுவதற்கு முடியா விட்டாலும், குறைந்தபட்சம் புன்னகையுடன் கூடிய வணக்கம் மட்டும் தவறாமல் செலுத்தபவனாயிற்றே!

அவனா இப்படி இன்று ஸ்கூட்டரில் சென்று கொண்டிருக்கும் தங்கக் கண்ணுவைப் பார்த்தும் பார்க்காதது போல் வணக்கம் கூடச் செலுத்தாமல் சென்று விட்டான்? அலட்சியமா?

தன்னை நன்றாகவே அவன் பார்த்ததைத் தங்கக் கண்ணுவும் கவனித்தார். அவன் வணக்கம் செய்தால், பதிலுக்கு வழக்கம் போல் வணக்கம் செய்ய நினைத்து, அவனை இவர் ஸ்கூட்டரை ஓட்டிக் கொண்டிருந்தவாறே பார்க்க —

அப்போதுதான் அவன் அவரைப் பார்த்து விட்டு தன் முகத்தை வேறு ஒரு திசையில் திருப்பிக் கொண்டு, இவரைப் பார்க்காதது போல் சைக்கிளில் விரைந்து விட்டான்!

சே! என்ன உத்தியோகம், இந்த ஆசிரியர் உத்தியோகம்! எல்லோரையும் உயர்ந்த நிலைக்கு ஏற்றி வைத்து விட்டுத் தான் மட்டும் எவ்வித மாறுதலும் அடையாமல் இருக்கின்ற ஜடப் பொருள்! ஏணியும், இந்த ஆசிரியர் உத்தியோகமும் ஒன்றுதான் என்று அந்தக் காலத்துப் பெரியவர்கள் தெரியாமலா சொன்னார்கள்?

ஒருவேளை, தனக்குக் கற்றுத் தந்த ஆசிரியர்களை விட, தான் அதிகச் சம்பளம் பெறுகிறோம் என்ற அகங்காரமாக இருக்குமோ அவனுக்கு?

எதுவும் புரியாமல், பள்ளி வேலைகளில் கவனத்தைக் கஷ்டப் பட்டுத் திருப்பினார் தங்கக்கண்ணு!

மாலை பள்ளி முடிந்ததும், ஸ்கூட்டரில் தன் வீட்டுக்கு விரைந்தார் தங்கக்கண்ணு.


அன்றைய தினம் வகுப்புகளில் பாடங்கள் தொடர்ந்து நடத்தியதாலும், தலைமையாசிரியருக்குரிய மற்ற நிர்வாக வேலைகள் செய்ததாலும் அதிகமாகக் களைத்துப் போயிருந்தார் அவர். ஏதாவது ஒரு ஓட்டலில் காபி சாப்பிட்டால் பரவாயில்லை என்று தோன்றியது.

எதிர்ப்பட்ட ஒரு பெரிய ஓட்டல் முன்பு ஸ்கூட்டரை நிறுத்திப் பூட்டி விட்டு, உள்ளே நுழைந்தார்.

கூட்டம் சற்று அதிகமாகத்தான் இருந்தது.

உட்காருவதற்காக அவர் இடம் தேடிய போது —

அன்பிற்கினியவன்



''வணக்கம் சார்! இங்கே வந்து உட்காருங்கள்!'' என்று ஒரு குரல் அவரருகில் கேட்டது.

திடுக்கிட்டுத் திரும்பினார்.

பக்கத்தில் புன்னகைத்தவாறு நின்றிருந்தான் பார்த்த சாரதி!

குழம்பியவாறே அவனைப் பின் தொடர்ந்தார்.

எதிரெதிரே இருந்த இரண்டு நாற்காலிகளில் ஒன்றை அவன் காட்ட, அதில் அவர் உட்கார்ந்த பின்பு, மற்றொன்றில் அவனும் உட்கார்ந்தான்.

தங்கக் கண்ணுவின் குழப்பம் இன்னும் நீங்கினபாடில்லை.

''இவனை, பாம்பென்றும்தாண்ட முடியவில்லை, பழுதென்றும் மிதிக்க முடியவில்லையே? எப்படி இவனால் இப்படி வேடம் போட முடிகிறது? உண்மையில் இவன் நல்லவனா, இல்லையா? பணிவுள்ளவனா? திமிருடையவனா?'' என்று சரமாரியான எண்ணங்கள் அவருக்குள் ஓடின.

அதை அவன் புரிந்து கொண்டிருப்பான் போலும்!

''சார்! நான் என்றுமே நீங்கள் அன்று பார்த்த அதே பார்த்தசாரதி தான்! மாறவில்லை. அறிவூட்டிய ஆசானுக்கும், பெற்று வளர்த்த பெற்றோருக்கும், பெருமை கொள்ளும் வழியில் என்னை நடக்க வைக்கும் மற்றோருக்கும் மதிப்புத் தருவதிலும், பணிவு காட்டுவதிலும் நான் ஒரு போதும் மாற மாட்டேன். சில நாட்களுக்கு முன்பு... என் அருமை நண்பன் சோமு வழக்கம் போல் ஸ்கூட்டரில் எதிரே வந்து கொண்டிருந்தான். சைக்கிளில் வந்த நான் அவனைப் பார்த்ததும், ஒரு கை தூக்கி வணக்கம் சொன்னேன். பதிலுக்கு அவனும் தன் கையைத் தூக்கி எனக்கு வணக்கம் சொன்ன போது, அந்த ஸ்கூட்டர் சறுக்கி, அவனது பிடியிலிருந்து நழுவி, அவன் தூக்கியெறியப்பட்டான். ஒரே ரத்தக் காடு! அய்யய்யோ! என்னால் அதை விவரிக்க முடியவில்லை. என் நண்பன் பரிதாபமான நிலையில் பிணமாகி விட்டான்! எதனால்? ஓடுகின்ற வாகனத்திலிருந்த போது, போதிய பிடிப்பு இல்லாததால்தானே...? அதற்கு மூல காரணம் யார்? நான்தானே...? அன்று முதல் ஸ்கூட்டரில் செல்லும் எவருக்குமே நான் வணக்கம் செலுத்துவதில்லை சார்....!''

குரல் தழுதழுத்தது பார்த்த சாரதிக்கு.

தங்கக் கண்ணுவுக்கு இப்போது குழப்பங்களெல்லாம் அறவே நீங்கி விட்டன. மனம் தெளிவடைந்தது.

அளவுக்கு மீறினால்...?

_மாலை என். ஆறுமுகம்

சண்டை போட்டுக் கொண்டிருந்த சுந்தர், முத்து இருவரையும் பார்த்த பக்கத்து வீட்டுத் தாத்தா ''டேய்... டேய்... ஏண்டா இப்படி அடிச்சுக்கிறீங்க? விடுங்கடா'' என்று தனது பொக்கை வாயால் சத்தம் போட்டுக் கொண்டே அருகில் சென்றார்.

''டேய் முத்து! நாம அடிச்சுக்கிறோமாம், தாத்தா சொல்றாரு!'' என்று கேலியாகச் சிரித்தவாறு ''தாத்தா... நாங்க உண்மையாகச் சண்டை போடல்லே, சும்மா விளையாண்டோம். அவ்வளவுதான்! எங்களுக்குள் சண்டையாவது... வருவதாவது?'' என்றான் சுந்தர்.

''என்னதான் கூட்டாளியாக இருந்தாலும் இப்படியா ஒருவரோடு ஒருவர் அடிச்சுக்கிறது? எதற்கும் ஓர் அளவு வேண்டும்பா... இது மாதிரியெல்லாம் விளையாடக் கூடாது. ஒரு நேரம் போல் ஒரு நேரம் இருக்காதப்பா... அன்பாகப் பேசி, அமைதியாக — அளவோடு விளையாடி மகிழ்வதுதான் நட்பு. அதுதான் என்றென்றும் நீடிக்கும்...'' என்று தாத்தா சொல்லிக் கொண்டே இருக்கும் போது....

முத்துவின் காதோரமாக, ''டேய், தாத்தா வழக்கம் போல் புத்திமதி சொல்லுறேன்னு 'அறுக்க' ஆரம்பிச்சுட்டாரு... வா ஓடிடுவோம்'' என்று சுந்தர் சொல்ல, இருவரும் ஓட்டம் பிடித்து விட்டனர்.

அவர்கள் தங்கள் நட்பை — பழக்கத்தை நிதானப்படுத்திக் கொள்ளவில்லை. எப்போதும் முரட்டுத்தனமாகவே விளையாடி வந்தார்கள்.

ஒருநாள் — சுந்தர், விளையாட்டாக, கோலிக் குண்டைப் போன்ற ஒரு கல்லை எடுத்து, முத்துவை நோக்கி வீசியெறிந்தான், அவன் பயந்து ஓடுவான் என்று. ஆனால், இதை சற்றும் எதிர்பார்த்திடாத முத்துவின் நெற்றியில் அது பட்டு நன்கு புடைத்து விட்டது!

இதைப் பார்த்து மனக் கலவரம் அடைந்த சுந்தர், அருகில் ஓடி வந்தான்...

அதற்குள் —

வலி தாங்க முடியாமல் முத்துவிற்கு வந்ததே பார்க்கணும் கோபம்.. ஏதோ வெறி பிடித்தவனைப் போல் சுந்தர் மீது 'குபீர்' என்று பாய்ந்து, அவனைக் கீழே தள்ளி, அடி புரட்டி— புரட்டி எடுத்து விட்டான்! பக்கத்தில் நின்ற மாணவர்கள் இவர்களை விலக்கி விடுவதற்குள் 'போதும் போதும்' என்றாகி விட்டது!

இத்தனை காலம் அவர்கள் கட்டி வந்த நட்புக் கோட்டை ஒரு நொடியில் இடிந்து போய் விட்டதே!

இரண்டு நாட்களுக்குப் பின் —

பள்ளி முடிந்து சுந்தரும், முத்துவும் ஒரு பத்தடி தூர வித்தியாசத்தில் ஒருவர் பின் ஒருவராக வந்து கொண்டிருந்தனர்...

அடுத்தடுத்து வீடு. ஒன்றாகப் படித்து, உயிருக்கு உயிராகப் பழகி, இன்று அருகருகே இருந்தும் பேச முடியாமல் இருப்பதை அவர்களால் எப்படித்தான் தாங்கிக் கொள்ள முடியும்? அவர்கள் மனம் பெரும் வேதனைப்பட்டது.

முத்து கடந்த காலத்தை நினைத்துப் பார்த்தான்... 'ஒருவரது சட்டையை ஒருவர் மாற்றி போட்டுக் கொண்டோம். பள்ளிக்குக் கொண்டு வரும் மதியச் சாப்பாட்டை மாற்றிச் சாப்பிட்டோம். பேனா, பென்சிலைக் கூட எது யாருடையது என்று சொல்ல முடியாத அளவுக்கு இருந்தோமே....! ஆனால் இன்று...? நினைக்க, நினைக்க நெஞ்சு பொருமியது.



பேச மனம் துடித்தது — 'ஆத்திரத்தில் அறிவிழந்து நண்பனை அடித்து விட்டோமே!' என்று அவன் முகத்தில் விழிக்கவே மனம் வெட்கப் பட்டது. என்றாலும், எப்படியாவது பேசியே ஆகணும் என்று மனத்தில் ஒரே போராட்டம், ஒரே தவிப்பு.

அப்போது — அதோ அந்தப் பக்கத்து வீட்டுத் தாத்தா கண்ணில் பிரகாசித்தார்!

முத்து ஓடோடிப் போய் அவரின் காலில் விழுந்து கதறி அழுதான்.

''எழுந்திருப்பா முத்து! ஏன்... என்ன ஆச்சு?'' என்று பதற்றத்துடன் கேட்டார்.


''தாத்தா! நீங்கள் அன்று — 'அதிக நட்பு பகையை உருவாக்கும். அன்பாகப் பேசி, அமைதியாக — அளவோடு விளையாடி மகிழ்வதுதான் நட்பு' என்றெல்லாம் எவ்வளவோ புத்திமதி சொன்னீர்கள். அதை நாங்கள் கேட்கத் தவறி விட்டோம். அதன் விளைவு நாங்கள் இன்று...'' சொல்லும்போதே கண்ணீர் கண்ணை மறைக்க, துக்கம் தொண்டையை அடைக்க, பேச்சை நிறுத்தி விட்டான்.


அதற்குள் அருகில் வந்து விட்ட சுந்தர், 'தவறு என் பேரிலும் இருக்கிறது' என்ற வருத்தத்துடன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு நின்றான்.

இடமும் வலமுமாக நின்ற இருவரின் தோள்களில் கையைப் போட்டவாறு ''சுந்தர், முத்து! நீங்கள் இருவரும் சிறு பிள்ளையில் இருந்து பழகி வருகிறீர்கள். ஒருவர் மீது ஒருவர் உயிரையே வைத்திருக்கிறீர்கள். அப்படி இருந்தும் இன்று பகைவர்களைப் போல் பேசிக் கொள்ளாமல் இருக்கிறீர்கள். இந்த நிலை உங்களுக்குள் வரக் காரணம் என்ன? நீங்கள் அளவுக்கு அதிகமாகப் பழகியதோடு, குறிப்பாக முரட்டுத்தனமாக விளையாடி வந்ததும்தான்.

''இப்போது புரிகிறதா... 'எதற்கும் ஓர் அளவு வேண்டும்' என்று? இனி மேலாவது அன்பாகப் பேசி, பண்போடு பழகுங்கள்'' என்று இருவரது கைகளையும் சேர்த்து வைத்தார் பெரியவர்.

இருவரும் கட்டித் தழுவிக் கொண்டனர். மகிழ்ச்சி தாங்க முடியாமல், கிள்ளுவதற்காக முத்துவின் கன்னத்தில் கையை வைத்த சுந்தர், ஏதோ நெருப்பில் கையை வைத்து விட்டவனைப் போல் 'டக்'கென்று எடுத்துக் கொண்டதைப் பார்த்த அந்தத் தாத்தா, தமது பொக்கை வாயால் பலமாகச் சிரித்து விட்டார்.


ஜீப்ரா மாமா! இந்த அல் ஜீப்ரா கணக்கு வரவே மாட்டேங்குது! கொஞ்சம் சொல்லித் தரீங்களா ?
மாலா


யானை வரும் பின்னே! மணி ஓசை வரும் முன்னே!!
மாலா

ஆஸ்திரியக் கதை

மலைச் சரிவு மந்திரவாதி

தமிழில் : சந்திரநாத்

ஆஸ்திரியா தேசத்தில், முன்னொரு காலத்தில் கணவனும் மனைவியுமாக இரண்டு பேர் இருந்தார்கள்.

பரம ஏழைகள். ஒரு சிறு குடிசை மட்டும்தான் அவர்களுக்கென்று இருந்தது.

யாராவது கூலி வேலை செய்யக் கூப்பிட்டால்போவார்கள். காலையிலிருந்து பொழுது சாயும்வரை இடுப்பொடிய வேலை செய்வார்கள்.

ஏதோ கொஞ்சம் தானியமோ, மாவோ கூலியாகக் கிடைக்கும். அதை ரொட்டி தட்டி உண்பார்கள். அரைவயிறு அடங்கும்.

எவ்வளவு பாடுபட்டாலும் அதற்கு மேல் கிடைக்காது. கிராமம் அத்தனை ஏழைக் கிராமம். பாதிப் பேருக்குக் கூட உழ வயல் இல்லை. வயலிலும் மழை பெய்தால்தான் வேலை.

வயலையும் வான் மழையையும் நம்பியே அந்தக்கிராமத்தில்எல்லோரும் வாழ்ந்து வந்தார்கள்.

போய் விற்று, மாவு வாங்கிப் பசியாறலாம் என்று தீர்மானித்து, காட்டை வெட்டப் போனார்கள்.

அந்தக் கிராமத்திடம் இயற்கை மிகவும் அன்பு வைத்து, அந்த வளமான காட்டை அவர்களுக்குக் கொடுத்திருந்தது. மலைச் சரிவு முழுவதும் வானளாவிய பசிய மரங்கள் கோட்டை போல அடைத்துக் கொண்டிருந்தன.

அந்தக் காடு அங்கே இருந்ததனால், ஆகாயவழியாக வரும்கறுப்பு நிற மேகங்கள் அங்கே தங்கின.

மரங்களிலிருந்து வீசிய காற்று மேகங்களின் மனத்தைக் குளிரச் செய்தது. மேகம் மழையாகப் பொழிந்தது. மழை நீர் வாய்க்கால்களில் ஓடி வந்தது.

அதைவயல்களுக்குப்பாய்ச்சிபயிருக்கு உணவாக ஊட்டினார்கள்.

மலைச் சரிவின் உச்சி வரையில் மரங்கள் சுவர் போல் நின்று ஒவ்வொரு தடவை மேகங்கள் வரும் போதும் தடுத்து மழையாகப் பொழியச் செய்தன.

இதனால்தான் அந்தக் கிராமத்தில் தானியம் விளைந்து எல்லோரும் பசியாற முடிந்தது.

இந்த உண்மையை அந்தக் கிராமத்து மக்கள் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை. காடுகளுக்கும் மழைக்கும் உள்ள உறவை அவர்கள் அறியவில்லை.

வயலில் வருடம் முழுவதும் வேலை இருக்குமா? உழுது, நடவு செய்து விட்டால், அப்புறம் மூன்று மாதங்களுக்கு வேலையே இருக்காது. வேலை இருக்கிற நாட்களில் கிடைப்பதை மிச்சம் பிடித்து வைத்திருந்தால்தான் சாப்பாடு!

வேலை இல்லாத நாட்களில், சேர்த்து வைக்காதவர்கள், பசி தாளாமல், பக்கத்திலுள்ள காட்டு மரங்களை வெட்டி நகரில் கொண்டு

வேலை கிடைக்காத போது அவர்கள் அந்த மரங்களை வெட்டி விற

காக விற்க ஆரம்பித்தார்கள்.

இதனால், சிறுகச் சிறுகக் காடு அழிய ஆரம்பித்தது. காட்டில் மரங்கள் குறைய ஆரம்பித்தன. மளமள வென்று காடு மறைய ஆரம்பித்தது.

கடைசியில் ஒருநாள், மரங்கள் இருந்த இடம் பொட்டல் வெளியாகக் காட்சி அளித்தது.

இதனால் மேகங்கள் அங்கே தங்காமலே, மேலே சென்று விட்டன. மேகங்கள் போய்விட்டதால் மழையும் இல்லாமல் போய்விட்டது!

இரண்டு ஆண்டுகளாக மழை இல்லை. கிராமமே பட்டினியால் வாட ஆரம்பித்துவிட்டது. வயல்கள் எல்லாம் காய்ந்து விட்டன.

''இனி இங்கே இருந்தால் சாவுதான்'' என்றான் ரூபின். இளைஞன் அவன். வேலை செய்ய அவன் தயாராக இருந்தான். வேலைதான் இல்லை.

''இனி அடுத்த ஆண்டும் மழை பெய்யுமா என்பது சந்தேகம்தான்'' என்றான் ரூபின், மீண்டும்.

''சரி, ஆனால், எங்களுக்கு வயதாகி விட்டதே! இனிமேல் வெளியூர் எல்லாம் போக முடியுமா?'' — என்றார் அவன் தந்தை. ''என் கிராமத்தை விட்டு நான் வர முடியாது.''

''கிராமத்தில் உள்ள இளைஞர்கள் எல்லோரும் ஒரொரு திசையில் கிளம்பிக் கொண்டிருக்கிறார்கள்'' என்றான் ரூபின்.

''நீயும் போகிறேன் என்கிறாயா?''

''வேறு வழி! நான் போனால் ஏதாவது சம்பாதிப்பேன். உங்களுக்கு அனுப்புவேன். அல்லது, உங்களையே அங்கே தருவித்துக் கொண்டாலும் கொள்ளலாம்'' என்றான் ரூபின்.

அவன் புறப்படத் தீர்மானித்து விட்டான். கிளம்பிவிட்டான். தன் சிறு பையை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டான்.

''அவன் அம்மாவுக்கு அவனை அனுப்ப மனசே இல்லை. அவனை நிறுத்தவும் முடியாது. ''சரி'' என்றாள் அவள். கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

இரண்டு கம்பு அடைகளைச் செய்து கட்டிக்கொடுத்தாள். வாசல் வரை வந்து நின்று பார்த்துக் கொண்டே இருந்தாள். தந்தையும் பின்னாலேயே வந்தார்.

''ஜாக்கிரதையாக இருங்கள், அப்பா'' என்றான் ரூபின், வாசலில் விடைபெறுகிற போது.

''ரூபின், உனக்குக் கொடுக்க என்னிடம் ஒரு காசு கூட இல்லை'' என்றார் அப்பா. அவர் குரலில் வருத்தம் நிறைந்திருந்தது.

''ஆனாலும், எனக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்திருக்கிறீர்களே, அப்பா. அதை விடப் பெரிய செல்வம் ஏது?'' என்றான் ரூபின்.

''அது எனக்குப் போகுமிடங்களில் சாப்பாடு போடும்; நிறைய நண்பர்களைப் பெற்றுத் தரும். வாழ வழி காட்டும்,'' என்றான்.

''கடவுளின் துணையும் உனக்கு இருக்கட்டும்'' என்றார் தந்தை.

''சீக்கிரம் திரும்பி வந்துவிடு, ரூபின்'' என்றாள் அம்மா. ''உன்னை எதிர்பார்த்துக் கொண்டே இருப்பேன்.''

''போனதும் உங்களுக்கு ஏதாவது பணம் அனுப்ப முயலுகிறேன், அப்பா,'' என்றான் ரூபின்.


''முதலில் நீ பட்டினி கிடக்காமல் பார்த்துக் கொள்; அது போதும்'' என்றாள் அம்மா.

கண்ணன்: இதோ பாருடா. இதுதான் ஊர்க் குருவி.

முரளி: சரிடா. இது எந்த ஊர்க் குருவி?

— லலிதா செல்லப்பா.





ரூபினின் அப்பா, "ஒன்றை மட்டும் நினைவு வைத்துக் கொள். நாலு பொன்மொழிகள் உனக்கு எப்போதும் நினைவு இருக்கட்டும். நல்லவர்களுக்கு நல்லவனாக இரு; துஷ்டர்களிடம் எச்சரிக்கையாக நடந்து கொள். சமயோசிதமாகக் காரியங்களைச் செய். தைரியத்தைக் கைவிடாதே. இவைகளை மறக்காமல் இருந்தால் எத்தகைய சூழ்நிலையிலும் நீ வெற்றி வீரனாக வெளியே வருவாய்" என்றார்.

ரூபின் பெற்றோர்களை வணங்கி விட்டுப் புறப்பட்டான்.

சமவெளியைக் கடந்து போனான் ரூபின். தண்ணீர் இல்லாத ஆறுகளைக் கடந்தான். மலைகளில் ஏறி மறுபக்கம் இறங்கினான்.

அவன் எதிரே ரமணீயமான காட்சி தென்பட்டது. எதிரே தெரிந்த பள்ளத்தாக்கு முழுவதும் பச்சைப் பசேல் என்று இருந்தது. மலைச் சரிவிலே மரங்கள் அடர்ந்திருந்தன.

அங்கே உள்ள மக்கள் மரங்களின் அருமையை உணர்ந்தவர்கள். அவர்கள் காடுகளை அழிக்கவில்லை. மரங்களை வெட்டவில்லை. காய்ந்து விழுந்த சுள்ளிகளையும் கொடிகளையுமே அடுப்பெரிக்கப் பயன்படுத்தினார்கள்.

இதனால் அந்தப் பிரதேசத்தில் மழை கொட்டு கொட்டென்று கொட்டிற்று. ஆறுகளிலும் ஏரிகளிலும் நீர் ததும்பி வழிந்தது.

வயல்கள் எல்லாம் செழித்தன. தோட்டங்கள் எல்லாம் கனிகளை உலுப்பின.

மலைமுகட்டிலே நின்று அந்தப் பச்சை மரகதச் சொர்க்கத்தை ஆச்சரியத்துடன் பார்த்தான் ரூபின்.

தூரத்திலே ஆற்றுக்கு அப்பால், ஒரு பெரிய பட்டணம் தெரிந்தது. சிவப்பு நிறக் கூரை ஓடுகள் வீடுகளின் மீது சூரிய ஒளியில் பளபளத்தன.

அவற்றினிடையே ஒரு பெரிய தோட்டமும், அரண்மனையும், ஒரு கோட்டைக்குள் தென்பட்டன.

அரண்மனையின் தங்கக் கலசங்களில் ஆதவனுடைய கிரணங்கள் பட்டு, கண்ணைக் கூசச் செய்தன.



''அடேயப்பா, எவ்வளவு பெரிய நகரம்? நிச்சயமாக எனக்கு அங்கே ஏதாவது வேலை கிடைக்கும். நான் சம்பாதித்துப் பணம் சேர்ப்பேன். அங்கே ஒரு வீடு வாங்குவேன். அதில் என் தாயையும் தந்தையையும் அழைத்து வந்து வைத்துக் கொள்வேன்'' என்று எண்ணினான் ரூபின்.

நடுவில் இருந்த அந்தப் பெரிய அரண்மனையை அவன் ஆச்சரியத்துடன் பார்த்தான். அந்த அழகான அரண்மனை அவன் மனத்தைக் கொள்ளை கொண்டு விட்டது'' எவ்வளவு பெரிய வீடு! அவ்வளவு பெரிய வீட்டிலே வசிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமா?'' என்று நினைத்தான்.

அந்த நகரத்திற்கும் மலைக்குமிடையில் காடு மண்டிக் கிடந்தது. அதன் நடுவில் ஓர் அழகான நதி ஓடிற்று.

திடீரென்று அவன் பார்வை மலைச் சரிவில் மரங்களுக்கிடையில் தெரிந்த ஓர் ஒற்றை வீட்டின் மீது வந்து நின்றது.

''அது ஏன் இங்கே தனியாக இருக்கிறது? ஏன் ஊரோடு சேர்ந்து இருக்கவில்லை? அதில் யார் வசிக்கிறார்கள்?' என்று பல கேள்விகள் அவன் மனத்தில் ஓடின.

அப்போது அவனுக்கு ரொம்பப் பசியாக இருந்தது. அம்மா கொடுத்த கம்ப அடை நேற்றே தீர்ந்து விட்டது. அந்த ஒற்றை வீட்டுப் புகை போக்கியில் புகை வருவதைக் கவனித்தான் ரூபின்.

'அட, யாரோ சமையல் செய்கிறார்கள். அங்கே போனால், நிச்சயமாக ஏதாவது தின்பதற்குக் கிடைக்கும். நல்லவர்களாக இருந்தால், சாப்பாடு போட்டு விட்டு, 'சிறிது இளைப்பாறி விட்டுப் போயேன்' என்று கூடச் சொல்வார்கள். சுகமாகப் படுக்கையில் படுத்துத் தூங்கி எவ்வளவு நாட்களாகி விட்டன! இன்றாவது அந்தப் பாக்கியம் கிடைக்குமா, பார்ப்போம்,'' என்று எண்ணிக் கொண்டே, அந்த வீட்டை நோக்கி, மலைச் சரிவில் இறங்கினான் ரூபின்.

பாதி மலை இறங்கியதும், மரங்களுக்கிடையில் அந்த ஒற்றை வீடு நன்

றாகத் தெரிந்தது.

அந்த வீடு சிவப்புக் கற்களால் கட்டப்பட்டிருந்தது. அதன் ஜன்னல்கள் சாத்திக் கிடந்தன. கண்ணாடிகளில் தூசியும் அழுக்கும் படிந்திருந்தன.

சில இடங்களில் ஒட்டடைகள் தாரை தாரையாகத் தொங்கின. வாசற்படிக்கு மேலே, ஒரு பெரிய சிலந்தி வலை நடுவில் உட்கார்ந்திருந்தது.

ரூபின் அவ்வளவு பெரிய சிலந்தியை அதற்குமுன் பார்த்ததே இல்லை.

வாசல் கதவு மூடியிருந்தது. உள்ளே யாரும் இருப்பதாகவே தெரியவில்லை. ஆனால், அடுப்பில் குழம்பு கொதிக்கிற வாசனை வந்தது.

ரூபின் வாசலிலேயே நின்று, "ஐயா" என்றுகூப்பிட்டான். கொஞ்ச நேரம் எந்தப் பதிலும் வரவில்லை.

பிறகு, வீட்டைச் சுற்றிக் கொண்டு யாரோ வருவது தெரிந்தது. வந்தவன் தாடியும் தலையும் நரைத்த ஒரு கிழவன்! அவன் முகம் பிசாசின் முகம் போல விகாரமாக இருந்தது. மூக்கு கொக்கு மூக்கு போல, கூர்மையாக வெகுதூரம் நீண்டு வளைந்திருந்தது. கண்களில் தீப்போல ஒளி மின்னியது.

அவன் தலையில்ஒருவிசித்திரமான தொப்பி அணிந்திருந்தான். உலகத்திலே உள்ள எல்லாவிதப் பறவைகளின் இறகுகளையும் அதில் செருகியிருந்தான். அது வண்ணமயமாக இருந்தது. அவன் நீளமான கறுப்புக் கோட்டும், நீல நிறத்தில் சராயும், சிவப்பு நிற பூட்சுகளும் அணிந்திருந்தான்.

அவன் கழுத்தில் ஒரு சிவப்புக் கயிற்றில் ஒரு மந்திரத் தகடு தொங்கிற்று. புரியாத மொழியில் அதில் ஏதோ கிறுக்கப்பட்டிருந்தது.

கிழவன் அவசரமே படாமல் சாவகாசமாக நடந்து வந்து ரூபின் முன் நின்று அவனைக் கூர்ந்து பார்த்தான்.

பிறகு வலது கையை அவன் முகத்திற்கு எதிரே நீட்டினான். அவனுடைய கையிலிருந்த ஐந்து விரல்களிலிருந்தும், நகம், தடையின்றி வளர்ந்து, பாம்புகள் போல நெளிந்து, கூர்மையாகவும் நீண்டிருந்தன.


"பையா, நீ யார்? எங்கே வந்தாய்?" என்று கேட்டான்கிழவன். அவனுடைய பார்வை கூரிய அம்புகள் போல வந்து ரூபினைத் தாக்கிற்று.

"நான் மலைக்கு அப்பாலிருந்து வருகிறேன். என் பெயர் ரூபின்," என்றான், அவன்.

"எங்கே போய்க் கொண்டிருக்கிறாய்?"

"சமவெளியில் உள்ள அந்தப் பெரிய பட்டணத்திற்கு. ஏதாவது வேலை கிடைக்குமா என்று தேடிப் போய்க் கொண்டிருக்கிறேன்," என்றான் ரூபின்.

"ஓ! எனக்குக் கூட வேலை செய்ய ஒரு பையன் வேண்டியிருக்கிறது — என்ன தெரியும் உனக்கு? எழுதப் படிக்கத் தெரியுமா?" என்று கேட்டான் கிழவன்.



ஆசிரியர்: அடுக்குத் தொடருக்கு ஓர் உதாரணம் சொல்.

மாணவன்: தெரியாது! தெரியாது! தெரியாது!

ஆசிரியர்: வெரிகுட்! வெரிகுட்! வெரிகுட்!

மாணவன்: ?...?...?

— இரா. மணி.

"ஓ, நன்றாகத் தெரியும்" என்றான் ரூபின் உற்சாகத்துடன். இவ்வளவு சீக்கிரத்தில் வேலை கிடைத்து விட்டதே என்று அவனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது.

"ஆனால் கிழவன் முகம் இதைக் கேட்டதும் சுருங்கிவிட்டது. "அப்படியானால் நீ வேண்டாம்" என்றான். "படிக்கத் தெரிந்த பையனை வைத்துக் கொண்டால், என்னிடம் உள்ள புத்தகங்களை எல்லாம் படித்துத் தெரிந்து கொண்டு ஓடிவிடுவான். படிக்காத பையனே எனக்கு

வேண்டும்.''

உஷாரானான் ரூபின். 'சமயோசிதமாக நடந்து கொள்' என்ற அப்பாவின் மூன்றாவது பொன்மொழி நினைவுக்கு வந்தது.

''எனக்குப் படிக்கத் தெரியாது'' என்றான்.

''தெரியும் என்று சற்று முன் சொன்னாயே..''

''என் காதில் வேறு மாதிரி விழுந்தது.. 'சமைக்கத் தெரியுமா?' என்று கேட்டது போலிருக்கிறது. அதில் நான் மகா நிபுணன். அதைத்தான் சொன்னேன். சுட்டுப் போட்டால் கூட எனக்கு ஒரு வார்த்தை கூடப் படிக்கத் தெரியாது'' என்றான் ரூபின். எங்கே கைக் கெட்டிய வேலை வாய்க் கெட்டாமலே போய் விடுமோ என்று அவனுக்குப் பயமாகப் போய் விட்டது.

''அப்படியானால் என் பின்னால் வா'' என்று திரும்பி படியேறி முன்னால் சென்றான் கிழவன்.

ரூபின் அந்த ராட்சதச் சிலந்தியைப் பார்த்துப் பயந்து கொண்டே குனிந்து படியைத் தாண்டினான். அப்போதுதான் அது நிஜ சிலந்தி அல்ல; பொம்மைச் சிலந்தி என்பது தெரிய வந்தது.

கிழவன் ரூபினை வீட்டுக்குள் அழைத்துச் சென்றான். உள்ளேயும் எங்கே பார்த்தாலும் தூசியும் தும்பட்டையுமாகக் கிடந்தது. ஒட்டடைகள் தொங்கின. பெஞ்சுகளில் நிறையப் புத்தகங்கள் தாறுமாறாகக் கிடந்தன.

உள்ளே ஒரு சிறு அறைக்குள் ஒரு விளக்கின் முன் ஒரு பெரிய மண்டையோடு இருந்தது. அருகில் அதற்குப் பூஜை செய்ததற்கான அறிகுறிகள் காணப்பட்டன. ''ஓ, இந்தக் கிழவன் மந்திரவாதி போலிருக்கிறது'' என்று நினைத்துக் கொண்டான்.

அப்பா சொன்ன 'துஷ்டர்களிடம் எச்சரிக்கையாக இரு' என்ற பொன்மொழி நினைவுக்கு வந்தது.

உள்ளே ஏதேதோ காய்ந்த செடி, கொடிகள் கட்டுக் கட்டாக இருந்தன. ஸ்புடம் போடும் சட்டியில் கணகணவென்று தீ எரிந்து கொண்டிருந்தது. ஒரு மரக் குடுவையில் பச்சை நிறத்தில் ஏதோ திரவம் இருந்தது.

''இதோ, பார். நீ நல்ல பையனாக இருந்தால், என்னிடம் விசுவாசமாக இருந்தால், உனக்கு இங்கே ஒரு குறையும் இருக்காது. சாப்பிட நிறையக் கிடைக்கும். உன் பெற்றோர்களுக்குப் பணமும் அனுப்ப முடியும்'' என்றான் கிழவன்.

''அப்படியே இருப்பேன்'' என்றான் ரூபின்.

''நான் பெரும்பாலும் மாடியில்தான் இருப்பேன். நீ அங்கே எக்காரணம் கொண்டும் வரக் கூடாது. இங்கே சமையலறையில் நீ சமைக்கலாம்; இங்கேயே படுத்துக் கொள்ளலாம். சனிக் கிழமை அரைப் பொன் உன் கையில் 'டாண்' என்று கொடுத்து விடுவேன். சரிதானே?''

''என் வேலை என்னவென்று சொல்லவில்லையே'' என்றான் ரூபின்.

''உனக்கே தெரியவில்லையா? சுற்றிலும் கண்ணை ஓட்டிப் பார். எவ்வளவு தூசி, தும்பட்டை? இதை எல்லாம் துடைத்து, வீட்டைப் 'பளிச்' சென்று ஆக்க வேண்டும். என் புத்தகங்களைப் பார். எவ்வளவு கஷ்டப்பட்டு இவைகளைச் சேகரித்தேன். தெரியுமா? அவ்வளவும் விலை மதிப்பற்ற செல்வங்கள். அவைகளை தூசி துடைத்து அடுக்கி வை. எலி கடிக்காமல் பார்த்துக் கொள். அது

''அங்கே எல்லோரும் ஓட்டமா ஓடிக்கிட்டு இருக்காங்களே, அப்படி யார் வந்து இருக்காங்க? அவங்களைப் பார்க்க இந்த ஓட்டம் ஓடறாங்க?''

''பி. டி. உஷா!''

— கடலூரர் கன்னியப்பன்.





போதும்'' என்றான் கிழவன்.

''எனக்குப் பிரியமான வேலை'' என்றான் ரூபின். ''ஒரு வாரத்தில் எவ்வளவு பனிச்சென்று மாற்றி விடு கிறேன், பாருங்கள்'' என்றான்.

''அதற்காகச் சமைக்க மறந்து விடாதே! அதற்காகத்தான் உன்னைச் சேர்த்துக் கொண்டது'' என்று கண்ணைச் சிமிட்டி விட்டு, மேலே படிகளில் ஏறிப் போனான் கிழவன்.

அந்தக் கிழவனின் பெயர் டூவி. அவன் ஒரு மந்திரவாதி. அதனால் தான் மக்களுடன் கலந்து ஊருக்குள் வாழாமல் இப்படித் தனிக் காட்டில், யாரும் இலேசில் வந்து விட முடியாத இடத்தில் வீடு கட்டிக் கொண்டு வாழ்ந்து வந்தான்.

மக்களும் அவனை வெறுத்தார்கள். அஞ்சினார்கள். கிழ வயதில் துணைக்கு ஆளின்றி, மந்திரவாதி டூவி ரொம்பக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். ரூபின் வந்தது அவனுக்குப் பாதிக் கவலையை ஒழித்து விட்டது.

அவன் வீட்டை ரூபினிடம் ஒப்படைத்து விட்டுத் தன் வேலைகளைக் கவனிக்கப் போனான்.

பச்சிலைகளைத் தேடி அவன் அடிக்கடி காட்டுக்குச் செல்வது வழக்கம். அப்படி அவன் போன சந்தர்ப்பங்களை எல்லாம் ரூபின் கெட்டிக்காரத்தனமாகப் பயன்படுத்திக் கொண்டான். கிழவனின் புத்தகங்களை எல்லாம் எடுத்து கவனமாகப் படித்து கிரகித்துக் கொண்டான்.

அந்தப் புத்தகங்களில் ஏராளமான மந்திரங்கள் இருந்தன. மனிதன் பலவிதமாக உருவெடுக்கும் ரகசியங்களும் அவைகளில் இருந்தன.

ரூபின் ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாகப் படித்து மனத்தில் பதிய வைத்துக் கொண்டான். இரவுகளில் அவைகளை ஞாபகப்படுத்திக் கொண்டான்.

கிழவனின் தந்திர மந்திரங்கள் அத்தனையையும் ரூபின் வெகு சீக்கிரத்தில் கற்றுக் கொண்டு விட்டான்.

கிழவன் இல்லாத போது அவைகளைப் பரீட்சை செய்து பார்த்தான்.


(அடுத்த இதழில் முடியும்)

உலக நாடுகளில்

இத்தாலியில் "நேபிள்ஸ்" நகருக்கு விஜயம் செய்வோர் 'வெசுவியஸ்' மலையில் ஏறி எரிமலை வாயைக் காணலாம். எரிமலையின் வாய் மஞ்சள் நிறமாக இருக்கும். எரிமலை வாயை இத்தாலிய மொழியில் 'போக்கோ' என்பர்.



நம் நாட்டில் திருப்பதி மலைமேல் இருப்பது போல் ஏழு மலை மீதுள்ள நகரம் "ரோம்". உலகப் புகழ்பெற்ற 'செயிண்ட்-பீட்டர் ஆலயம்' இங்குதான் உள்ளது.



'ஆல்ப்ஸ்' மலையில் கடிகார நேரம் மாறுபடுகிறது. அங்கு கடிகாரத்தில் ஒரு மணி நேரம் அதிகமாக இருக்கும். காரணம் காற்றழுத்தம்தான். அதனால் அங்கு எல்லோரும் தமது கடிகாரத்தில் ஒரு மணி நேரம் அதிகமாகுமாறு முட்களைத் திருப்பி வைத்துக் கொள்ள வேண்டுமாம்.



கொரிய நாட்டின் கிராமப்புறங்களில் இருக்கும் ஒவ்வொரு மைல் கல்லும் ஒரு மனிதத் தலையைப் போல் செய்து வைக்கப்பட்டிருக்கும். அந்த மனிதத் தலைக்கு 'சாங்' என்று பெயர்.



ஆதாரம்: "உலக நாடுகளைப் பற்றிய சுவையான செய்திகள்"

— செந்தமிழ்ச்செல்வன் —

எது பெரிது?

வி.ர.வசந்தன்



மின்சார அடுப்பின் கதகதப்பையும் மீறிக் கொண்டு காலை நேரத்துக் குளிர்க் காற்று, திறந்திருந்த ஜன்னல் வழியாக வந்து பிரபாகரனை நடுங்க வைத்தது. எழுந்து சென்று ஜன்னலை அடைத்து விட்டு வந்து அமர்ந்தான்.

அடுப்பில் வெந்து கொண்டிருந்த கேக்குகளின் மணம் அவன் நாசியில் ஏறிப் பரவசப்படுத்தியது. இன்னும் நான்கைந்து கேக்குகள் செய்ய வேண்டும். செய்து விட்டால் இன்றைய வேலை முடிந்து விடும்.

மாவாக அரைத்த சீனியை வெண்ணெயுடன் பிசைந்து முட்டையை அடித்துக் கலந்து, அதில் மைதா ட வைச் சேர்த்து, கரடில்லாமல் பதப்படுத்துவதற்குள் தோள் பட்டை இற்று விடும். ஆனாலும் என்ன செய்வது? மாதந்தோறும் முதலாளி தரும் நூற்றைம்பது ரூபாய், தன் எளிய குடும்பத்துக்கு எவ்வளவு உதவியாக இருக்கிறது!

ஆவி பறக்க அடுப்பிலிருந்து எடுத்து வைக்கப்பட்ட கேக்குகள் அவன் செய்யப் போகும் பூ வேலைப் பாடுகளுக்காகக் காத்திருந்தன.

வெண்ணையும், சீனியும் கலந்த கலவையில் பல வர்ணங்களைச் சேர்த்து அவன் தன் முன்னால் எடுத்து வைத்துக் கொண்டான். தனித் தனிக் கிண்ணங்களில் இருந்த அந்த வர்ணக் கலவைகளைக் கோண வடிவத்தில் மடக்கப்பட்ட காகிதத்தின் மூலம் எடுத்து 'ஐஸிங்' எனப்படும் பூ வேலைப்பாடுகளால் கேக்குகளை அலங்கரிக்க ஆரம்பித்தான்.

அவனது கை வண்ணத்தில் பச்சை இலைகளும், பல வர்ண மலர்களும் வித்தியாசமான வாழ்த்து வாசகங்களுடன் கேக்குகளின் மேல் வடிவம் பெறலாயின.

அந்த வேலையை முடித்து விட்டு மேலும் செய்ய இருக்கும் கேக்குகளுக்காக மாவாக்கப்பட்ட சீனியை எடுத்துப் பிரித்து பாத்திரத்தில் கொட்டி விட்டு, புதிதாக நேற்று வாங்கிய வெண்ணெய் டப்பாவை எடுத்து வந்தான். கரண்டியை உள்ளே விட்டு

வெண்ணெயை எடுத்த போது, அதில் ஏதோ கறுப்பாகக் கயிறு போல் ஒட்டி இருப்பது தெரிந்தது.

வெளிச்சத்தில் அதைக் கூர்ந்து பார்த்தவன் திடுக்கிட்டான். ஒரு பெரிய பூரான்! எப்படியோ வெண்ணெயில் அழுந்தி, செத்துப் போயிருந்தது. சுட்டு விரல் பருமனில் வெண்ணெயுடன் ஒட்டிக் கொண்டிருந்த அதைப் பார்க்கவே அருவருப்பாக இருந்தது.

இந்தப் பூரானின் விஷம் வெண்ணெயோடு கலந்திருக்கக் கூடுமே? இதை எப்படி உபயோகிப்பது என்று நினைத்தவன், வெளியே கல்லாவில் அமர்ந்திருந்த முதலாளியிடம் விஷயத்தைச் சொல்லி விட முடிவு செய்தான்.

முதலாளியை அணுகிய பிரபாகரன் கரண்டியோடு, பூரான் ஒட்டிக் கொண்டிருந்த அந்த வெண்ணெயை அவரிடம் காட்டி, ''ஐயா, வெண்ணெய்க்குள்ளே பூரான் செத்துக் கிடக்கு'' என்றான்.

கரண்டியை அவன் கையிலிருந்து வாங்கி உற்றுப் பார்த்த முதலாளி, தன் இடது கையால் வெண்ணெய்க்குள்ளிருந்து அந்தச் செத்த பூரானை வெளியே இழுத்தெடுத்தார். தன் கண்களுக்கு எதிராக அதை உயர்த்திப் பிடித்து ஆராய்ந்தவர், சட்டென்று அதை, கடைக்கு வெளியே ஓடிக் கொண்டிருந்த சாக்கடையில் வீசியெறிந்து விட்டு கரண்டியை பிரபாகரனிடம் கொடுத்து, ''சரி, போய் வேலையைப் பார்'' என்றார்.

எதுவுமே நடவாதது போல் வெகு சாதாரணமாக அவர் பேசியதைக் கேட்ட பிரபாகரன் வியப்படைந்தவனாக, ''ஐயா, பூரான் ரொம்ப விஷம்னு சொல்லுவாங்க... அது உள்ளே விழுந்து எத்தனை நாளாச்சுதோ தெரியல்லை... இந்த வெண்ணெயைப் போட வேண்டாம்னு தோணுது'' என்றான் மெதுவாக.

முதலாளியின் முகத்தில் கோபம் படர்ந்தது. ''அதெல்லாம் எனக்குத் தெரியும்... வெண்ணெய் என்ன சாதாரண விலையா விக்குது...? அவ்வளவு வெண்ணெயையும் இப்ப



வெளியிலே கொட்டவா முடியும்? இதை யார்கிட்டேயும் உளறாதே. போய் வேலையைப் பார்'' என்று சீறினார்.

''ஐயா, இதை வாங்கிச் சாப்பிடற வங்களுக்கு ஏதாவது பிரச்சினை வந்தா, நம்ம கடைக்குத்தானே கெட்ட பேர் வரும்...?'' என்று இழுத்தான் பிரபாகரன்.

முதலாளி நெற்றியைச் சுருக்கி அவனைப் பார்த்தார். ''அவனவன் பெருச்சாளியையே அமுக்கிடுவான். நீ பூரானுக்குப் பயப்படறியே, 'அது ஒண்ணும் செய்யாது. போய் வேலையை பார்ப்பியா. அதை விட்டுட்டுக் காலங்கார்த்தாலே உபதேசம் செய்ய வந்திட்டியே! போடா, போ'' என்று விரட்டினார்.

வேறு வழியில்லாமல் திரும்பி வந்த பிரபாகரனின் மனம் குழம்பித் தவித்தது. அரையடி நீளத்திற்கு முதலாளியின் முகத்தின் முன்னால் ஊசலாடிய அந்தப் பூரானே மீண்டும் மீண்டும் அவன் மனத்தில் தோன்றி அலைக்கழித்தது. ஒருகணம் முதலாளிக்குத் தெரியாமல் அவ்வளவு வெண்ணெயையும் எடுத்து வெளியே கொட்டி விட்டால் என்ன என்று நினைத்தான்.

ஆனால், கண் கொத்திப் பாம்பாக ஒவ்வொன்றையும் கண்காணிக்கும் முதலாளி நிச்சயமாக அதைக் கண்டுபிடித்து விடுவார்.

என்ன செய்வது? அவன் தீவிரமாகச் சிந்திக்கலானான். எதுவும் அறியாமல் இதை வாங்கிக் கொண்டு போகும் வாடிக்கையாளர்களுக்குத் துரோகம் செய்ய அவன் மனம் ஒருப்படவில்லை.

மாவைப் பிசைந்து அதை நான்கு பாத்திரங்களில் வார்த்து அடுப்பிலேற்றி விட்டு வந்தவன், முதலாளி தன்னை அழைக்கும் குரல் கேட்டு வெளியே வந்தான்.

முதலாளி எங்கோ அவசரமாகப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அவனைப் பார்த்ததும், ''டேய், நான் ஒரு முக்கிய வேலையா டவுன் வரைக்கும் போயிட்டு வர்றேன்... வரக் கொஞ்சம் நேரமாகும். கடையைக் கவனிச்சுக்க... வாடிக்கைக்காரங்களிடம் மரியாதையா நடந்துக்க... வ ர ட் டுமா'' என்று மூலையிலிருந்த குடையைக் கையிலெடுத்துக் கொண்டார்.

சரியென்று தலையசைத்த பிரபாகரன் அவரைப் பார்த்து ''முதலாளி, வீட்டிலே ரொம்பக் கஷ்டமாயிருக்கு... அதனாலே...'' என்று தயங்கினான்.

''அதனாலே... என்னடா'' என்று கண்களில் கேள்விக்குறியுடன் அவனைப் பார்த்தார் முதலாளி.

''ஒண்ணுமில்லே... இந்த மாசச் சம்பளத்தை இன்னைக்கே கொடுத்திட்டீங்கன்னா, ரொம்ப உதவியாயிருக்கும்'' என்று தலையைக் குனிந்து கொண்டான் அவன்.

''ஏண்டா, ஒண்ணாந் தேதிதானே சம்பளம்? அதுக்கு இன்னும் மூணு



மனிதனால் முடியாது

பாதிரியார் ஒருவர் ஒரு பள்ளியில் ஆசிரியராகவும் இருந்தார். ஒரு நாள் அவர் பள்ளித் தலைமை ஆசிரியரிடம் பேசிக் கொண்டிருந்த போது, ''மனிதன் என்ன என்ன கண்டுபிடிக்க வேண்டுமோ, அத்தனையும் கண்டுபிடித்து விட்டான்,'' என்றார்.

உடனே தலைமை ஆசிரியர், ''இவற்றுடன் மனிதன் நிற்க மாட்டான். பறவைகளைப் போல் வானிலே பறக்கவும் ஆரம்பித்து விடுவான்'' என்றார்.

''என்ன! பறந்து விடுவானா? அது ஒரு நாளும் முடியவே முடியாது. தேவதூதர்களால்தான் பறக்க முடியும். மனிதர்களால் முடியும் என்பது தெய்வத்தின் சக்தியை அவமானப்படுத்துவதாகும்'' என்று மிகுந்த கோபத்துடன் கூறினார்.

அவ்வாறு அன்று (1870 – இல்) கூறிய பாதிரியார் பெயர் மில்டன் ரைட். அவருடைய வாக்கைப் பொய்யாக்கியவர்கள் வேறு யாருமில்லை; அவருடைய இரண்டு பிள்ளைகளேதான்! ஆம், அவர்கள் பெயர்: வில்பர் ரைட், ஆர்வில் ரைட்.



நான் இருக்கே. அதுக்குள்ளே என்ன அவசரம்?'' என்று சிடுசிடுப்புடன் தன்னைப் பார்த்தவரிடம்,

''ஒரு வாரமா அப்பா வேலைக்குப் போகல்லே. தங்கச்சி காய்ச்சலாக் கிடக்கு. மருந்து வாங்கணும் அதுதான்'' என்று கெஞ்சுகிற பாவனையில் வேண்டினான்.

சற்று யோசித்த முதலாளி, ''சரி, ஒழுங்கா வேலை பார்க்கணும் தெரியுதா, சம்பளத்தை மட்டும் முந்திக்கிட்டு வாங்கினாப் போராது'' என்று சொல்லி விட்டுத் தன் பையிலிருந்து பணத்தை எடுத்துக் கொடுத்தார்.

திருப்தியுடன் புன்னகைத்தவனிடம், கடையை ஜாக்கிரதையாக கவனித்துக் கொள்ளும்படி சொல்லி விட்டுச் சென்றார் அவர்.

வீதி முனையில் அவர் மறைவதற்குக் காத்திருந்த பிரபாகரன் அவசரமாக உள்ளே ஓடி வந்து அடுப்பில் வெந்து கொண்டிருந்த அந்த நான்கு கேக்குகளையும் இறக்கி கீழே வைத்தான். அடுப்பை அணைத்து விட்டு மீண்டும் வெளியே வந்து கல்லாவில் அமர்ந்தவன், அந்த நான்கு கேக்குகளுக்கும் உரிய மதிப்பைக் கணக்கிட்டுப் பார்த்தான். நூற்று இருபது ரூபாய் வந்தது.

ஒரு கணம் அவனுக்கே மலைப்பாக இருந்தது. ஆனாலும், சற்றுகூடத் தயங்காமல் நூற்று இருபது ரூபாய்க்கு ஒரு ரசீது போட்டு எடுத்துக் கொண்டு, தன்னிடமிருந்த சம்பளப் பணத்தில் நூற்று இருபது ரூபாயைக் கல்லாவில் வைத்தான்.

ஏறத்தாழ தன்னுடைய ஒரு மாத உழைப்பு, முகந் தெரியாத யாரோ சிலரை ஆபத்திலிருந்து காப்பாற்றப் பட்டதை நினைத்து நிம்மதியடைந்தான் அவன். முதலாளி வந்து பார்க்கும் போது அவன் அந்தக் கேக்குகளை விற்று விட்டதாக நினைத்துக் கொள்ளட்டும்.

அந்த நான்கு கேக்குகளையும் தனியாக எடுத்துக் கட்டி ஒரு மூலையில் வைத்து விட்டு வந்த போது, முதலாளியின் மகன் வேகமாக வருவது தெரிந்தது.

கடைக்கு வந்தவன், ''பிரபாகரா, திடீர்னு வீட்டிலே விருந்தாளிங்க வந்திருக்காங்க, அரை பவுண்ட் கேக்கிலே ரெண்டு எடுத்து பேக் பண்ணு... இப்ப புதுசா போட்டதா எடு.. சீக்கிரம்'' என்று அவசரப்படுத்தினான்.

இரண்டு கேக்குகளை எடுத்துக் கட்டி அவனை அனுப்பி விட்டு, மீண்டும் கல்லாவில் உட்கார்ந்த பிரபாகரனின் மனம், 'என் சம்பளத்தையே நம்பிக் காத்திருக்கும் தாய்க்கு என்ன பதில் சொல்வது?' என்று எண்ணமிட்டது. ஏற்கெனவே அரை வயிற்றுக் கஞ்சி குடிக்கும் ஏழ்மையில், இந்த நஷ்டத்தை எப்படித் தாங்குவது என்று அவன் மனதுக்குள் தவித்தான். ஆனாலும், தன் முதலாளிக்கும், இந்தக் கடைக்கும் வர விருந்த அவப்பெயரை, தான் தடுத்து விட்டதை நினைத்து நிம்மதியடைந்தான். சற்றைக்கெல்லாம் கடைக்கு வரும் வாடிக்கையாளர்களைக் கவனிப்பதில் மனம் ஒன்றிப் போனான்.

தான் சென்ற வேலையை முடித்து விட்டு வியர்க்க விறுவிறுக்க வந்து

சேர்ந்த முதலாளி, கல்லாவில் உட்கார்ந்து கொண்டு, ''என்னடா, வியாபாரமெல்லாம் எப்படி?'' என்று கேட்டார்.

''இருநூறு ரூபாக்கு வித்துச்சுங்க'' என்ற பிரபாகரன், ''ஐயா, வீட்டிலே விருந்தாளிங்க வந்திருக்காங்கன்னு சின்ன முதலாளி வந்து அரை பவுண்டிலே ரெண்டு கேக் வாங்கிட்டு போனாங்க'' என்றான்.

'''ஓகோ'வென்று தலையை ஆட்டியவாறு ரசீதுப் புத்தகத்தைப் பிரித்துக் கணக்குப் பார்க்க ஆரம்பித்தவரின் முகம் சட்டென்று சுருங்கியது. அவசரமாகப் புத்தகத்தை மூடி விட்டு பிரபாகரனைப் பரபரப்புடன் பார்த்தவர், ''வீட்டுக்கு ரெண்டு கேக் அனுப்பினேன்னு சொன்னியே, அது காலையிலே அந்த பூரான் விழுந்த வெண்ணெயிலே செய்ததில்லியே'' என்று கேட்டார்.

அவர் முகத்திலிருந்த பதற்றத்தைப் பார்த்த பிரபாகரனின் மனம் வியப்படைந்தது. காலையில், 'பூரான் விழுந்ததுதானே! அதெல்லாம் ஒன்றுமில்லை' என்று அலட்சியமாகப் பேசியவர், இப்போது இவ்வளவு பதற்றமடைகிறாரே! தன்னுடைய குழந்தைகளுக்கும் உறவினர்களுக்கும் எந்தத் தீமையும் ஏற்படக் கூடாது என்று தவிக்கிறவர், இது போல தன்னை நம்பி வரும் வாடிக்கைக் காரர்களை நினைக்கத் தவறியதென்ன?

அவன் அவரிடம், ''பூரான் விஷம் ஒண்ணும் செய்யாதுன்னு நீங்க சொன்னதாலே அந்தக் கேக்குகளைத் தனியாக நான் வைக்கல்லே... புது சாப் போட்ட கேக் வேணும்னு சின்ன முதலாளி கேட்டாரு... அதனால, உடனே போட்டதா, எடுத்துக் கட்டிக் கொடுத்தேன்.. ஒருவேளை அந்த வெண்ணெயிலே செய்ததுதான் நம்ம வீட்டுக்குப் போயிடுச்சோ என்னவோ தெரியல்லியே'' என்று தானும் பதற்றப்படுபவனைப் போலப் பேசினான்.

அவன் சொல்லி முடிப்பதற்குள் பாய்ந்து தொலைபேசியை எடுத்த முதலாளி அவசரமாகத் தன் வீட்டு எண்ணைச் சுழற்றி, ''இப்ப வாங்கிட்டு வந்த கேக்கை சாப்பிட்டுட்டீங்களா'' என்று அலறினார்.

'சாப்பிட்டது ஜீரணமாகி வெகு நேரம் ஆயிற்று' என்று மறுமுனையிலிருந்து பதில் கிடைத்திருக்க வேண்டும் போலிருக்கிறது. பட்டென்று தொலைபேசியை வைத்தவர், தன் முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டார். என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறினார். அவர் முகம் தாறுமாறாக சுருங்கிப் போயிருந்தது.

அவரது அவதியைப் பார்த்து மனதுக்குள் சிரித்துக் கொண்ட பிரபாகரன் ஒண்ணுமறியாதவனைப் போல, ''என்ன ஐயா ஆச்சு'' என்று கேட்டான்.

எரிச்சலுடன் அவனைப் பார்த்தவர், ''ஆச்சு... எல்லாத்தையும் தின்னாச்சு. போயும் போயும் கடைசியிலே அது என் தலையிலே விடிஞ்சுது பாரு'' என்று பெருமூச்சு விட்டார்.

பிரபாகரன் அவரைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே ''ஐயா, பயப்படாதீங்க. அந்தக் கேக்குகளை நான் யாருக்கும் கொடுக்கல்லே'' என்றான்.

''அப்புறம் எல்லாத்தையும் நீயே தின்னுட்டியா?'' என்று எரிந்து விழுந்தவரிடம், ''ஆமா ஐயா, எல்லாத்தையும் நானே வாங்கிட்டேன். நூற்று இருபது ரூபாய்க்கு ரசீது போட்டிருக்கேன், பாருங்க. அது, நான் அந்த நாலு கேக்குகளுக்காகப் போட்டதுதான். நீங்க கொடுத்த சம்பளப்பணத்திலே அதைவச்சிட்டேன். சரியா இருக்கா பார்த்துக்குங்க'' என்று கல்லாவைக் காட்டினான்.

தன்னையே நம்ப முடியாமல் வாயடைத்துப் போனார் முதலாளி. ''நீ எதுக்காக அவ்வளவு கேக்கையும் வாங்கினாய்?'' என்று முனங்கலாக அவரிடமிருந்து வார்த்தைகள் வெளிப்பட்டன.

பிரபாகரன் அமைதியாக, ''யாரோ முகந் தெரியாதவங்கதானே, வாங்கிட்டு போகட்டும்னு விட என்னோட மனசாட்சி இடம் தரல்லீங்க. நமக்குத் தெரிஞ்ச பிறகும் அந்த வெண்ணெயை உபயோகப்படுத்தக்

கூடாதுன்னு நெனச்சேன். நாணயத்துக்கு முன்னாலே பணம் பெரிசில்லே ஐயா. அதுதான் அதையெல்லாம் நானே வாங்கி அப்புறமா குப்பைத் தொட்டியிலே வீசி எறிஞ்சிடலாம்னு முடிவு செஞ்சேன்'' என்றான்.

முதலாளி வைத்த கண் வாங்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். வறுமையிலும் நாணயத்தைப் பெரிதாக மதிக்கும் அந்தச் சிறுவனின் செய்கை அவரை மிகுந்த வெட்கத்திற்குள்ளாக்கி இருக்க வேண்டும்.

சட்டென்று அவர் எழுந்து வந்து அவனை அணைத்துக் கொண்டார். ''பிரபாகரா, மழுங்கிக் கிடந்த என் மனசாட்சியை இன்னைக்கு நீ புதுப்பிச்சுட்டே. இலாபந்தான் பெருசுன்னு நினைச்ச எனக்கு நாணயத்தோட அவசியத்தை உணர்த்திக் காட்டிட்டே'' என்று கலங்கிய குரலில் சொன்னார்.

பின் கல்லாவைத் திறந்து அந்த நூற்று இருபது ரூபாய்களை எடுத்து அவனிடம் கொடுத்து விட்டு, ''நாணயத்தை விலை கொடுத்து வாங்க முடியாது. அதுவா நம்முடைய மனசிலே வளரணும்னு சொல்லுவாங்க.. நீ உன்னுடைய உழைப்பை விலையாக் கொடுத்து, என்னுடைய நாணயத்தைக் காப்பாற்ற முயற்சி எடுத்திருக்கியே, உனக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே புரியல்லை'' என்று உணர்ச்சிவசப்பட்டார்.

தன்னுடைய நேர்மையால், தன் முதலாளியின் மனம் மாறியதைப் பார்த்து மகிழ்ச்சியால் பூரித்து, பேச வாய் வராமல் நின்றான் பிரபாகரன்.

சார் தபால்! அழகிய பேழை

* 6 வயது முடிந்து 7—வது பிறந்த நாளைக் கொண்டாடும் கோகுலத்திற்கு கோ. சி. ச. உறுப்பினர்கள் சார்பில் என் வாழ்த்துக்கள்.
— பி. கோவிந்தசாமி (5703), போதாதம் பட்டிபுதூர்.

* நாமக்கல்கவிஞர் இராமலிங்கம்பிள்ளை யவர்களின் குழந்தைப் பருவத்தை, அவரே நேரில் கூறுவது போல, மிக நன்றாகத் தொகுத்துத் தந்திருக்கிறார் புலவர் தணிகை உலகநாதன்.
— மா. விஜயகுமார் (21,616), பாப்பி ரெட்டிபட்டி.

* காந்தியக் கவிஞர்—விடுதலைக் கவிஞர்—தேசியக் கவிஞர் என்றெல்லாம் பாராட்டப் பெற்ற நாமக்கல் கவிஞரவர்களைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டோம்.
— அரு. பழனியப்பன், தேவகோட்டை.

* 16 தலைவர்களின் படங்களை ஒரே பக்கத்தில் தந்திருக்கிறீர்கள். அருமையான தொகுப்பு.
— வி. மனோகரி, வேதாரண்யம்.

* தொலைக்காட்சியில் வண்ண வண்ணக் காட்சிகளைத் தெரியச் செய்தவர், வாசனையையும் சேர்த்து வழங்காதது ஏன் என்பதற்குக் கவிஞர் ஃபொன்ராசனின் பாடல் சரியான விடை தருகிறது.
— ம. திலகவதி, திருவண்ணாமலை.

* மார்க்கோபோலோவின் மகத்தான பயணம் படக்கதை இனிமை. நான் அதைப் படிக்கும்போதே அவருடன் நானும் பயணம் செய்வது போல இருந்தது. நன்றி!
— இரா. ச. வெற்றிச்செல்வன், திருப்பராய்த்துறை.

* சௌராஷ்டிராக்காரனாகிய எனக்கு என் பூர்வீகம் தெரியாமல் இருந்த போது, உங்கள் 'கேளுங்கள்,சொல்லுகிறோம்' பகுதியில் அளித்த பதில் மூலம், நானும் என்னைப் போன்ற பலரும் எங்கள் பூர்வீகத்தை அறிந்து கொண்டோம். உங்களுக்கு மனமார்ந்த லட்சத்துச் சொச்சம் நன்றிகள் உரித்தாகுக.
என். கே. முரளி, உறையூர் சௌராஷ்டிரா வாலிபர் சங்கம், உறையூர்.

* பொங்கல் வாழ்த்து அட்டையின் கதை, 'கோகுலம்' தந்த 'பொங்கல் பரிசு'
— பி. பிரசாத், குத்தாலம்.

* ஆர். பி. சாரதி எழுதிய 'புதையலைத் தேடி' என்னும் கதையில், புதையலைத் தேடிச் சென்ற அரவிந்தன் வேறு ஒரு பெரிய புதையலைக் கண்டுபிடிப்பது கதையின் சிறந்த திருப்பமாக இருந்தது.
— மு. ரமேஷ்பாபு, சென்னை — 44.

* 'கேளுங்கள்,சொல்லுகிறோம்' பகுதி நன்றாக உள்ளது. இதன் மூலம் பல அறிய முடியாத கருத்துக்களைத் தெரிந்து கொள்கிறேன்...
— கே. பாலசுப்ரமணியன், செய்துங்க நல்லூர்.

* பிருந்தாவனக்கவியரங்கம்மிகவும்சுவையாக, வருங்காலக் கவிஞர்களைப் படம் பிடித்துக் காட்டுவதாய் இருந்தது.
— கிருஷ்ணப்ரியா, அம்மாபேட்டை.

* 'சின்னஞ்சிறு வயதில் சித்திர மேதை'யைப் படித்துவிட்டு நிமிர்ந்த போது, என் கண்கள் பனித்திருந்தன.
— ஆறு. அண்ணாதுரை (10,403), பஞ்சலிங்கபுரம், மகாதானபுரம்.

* ஓர் அழகிய பேழையில் பொன், முத்து, வைரம் ஆகியவற்றை வைத்துவிட்டு ஏதேனும் ஒன்றை முதலில் எடுக்குமாறு கூறினால் எப்படி எடுக்க முடியாதோ, அதுபோல ஜனவரி மாத 'கோகுலம்' என்னும் அழகிய பேழையில் உள்ள அனைத்துமே மிகவும் நன்றாக இருக்கின்றன.
— எம். கணேஷ்பாபு, குரோம்பேட்டை.

* வி. ர. வசந்தன் அவர்கள் எழுதிய 'ஏன் இந்த மாற்றம்?' சிறுகதை, மறதி மன்னர்களுக்கு ஒரு நல்ல பாடம்.
— என். பாபு (1707), வேலூர் — 632 001.

* 'முன் கோபம்' கதை என்னுடைய முன் கோபத்தைத் தணித்தது. இரா. வசந்தராசன் அவர்களுக்கு என் நன்றி பல, பல, பல பல...
— ஜி. பார்த்தசாரதி, காட்டுமன்னார் கோயில்.

* பிருந்தாவனக் கதையரங்கம், கவியரங்கம் இருப்பது போல் பிருந்தாவன நகைச்சுவையரங்கம், பிருந்தாவனக் கட்டுரைகள் எனப் புதிய பகுதிகளை அளித்து உறுப்பினர்களை இன்னும் அதிகமாக ஊக்குவிக்கலாமே!
— மு. பூபாலன் (18,895), மூஞ்சூர்பட்டு — 57.

கேளுங்கள்; சொல்கிறோம்

* தமிழ் இலக்கியத்தில் ஐம்பெரும் காப்பியங்கள் பற்றித் தெரியும். ஆனால், ஐந்து சிறு காப்பியங்கள் உள்ளன என்கிறார்களே, அவற்றின் பெயர்களைத் தயவு செய்து தெரிவிப்பீர்களா?

— வீ. முருகராஜா, பிரிஞ்சுமூலை.

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்ற ஐந்தும் பெரும் காப்பியம் என்றும், உதயணன் கதை, நீலகேசி, சூளாமணி, யசோதர காவியம், நாக குமார காவியம் என்ற ஐந்தும் சிறு காப்பியம் என்றும் ஒரு காலத்தில் கூறிவந்தார்கள். ஆயினும், சிறு காப்பியங்களுக்குப் பிறகு, பல' சிறு காப்பியங்களை நம் கவிஞர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

* சிலர் குருடர்களாகவும் அதே சமயம் ஊமைகளாகவும் இருக்கிறார்களே, இதற்கு என்ன காரணம்?

— தி. ராமராஜன், விழுப்புரம்.

குழந்தை, தாயின் வயிற்றில் இருக்கும் போது, அம்மை நோய் போன்ற மிகக் கொடிய நோய் வந்தாலும், சத்துள்ள உணவைத் தாய் சாப்பிடாததாலும் குழந்தையின் காது சரியாகக் கேட்பதில்லை. இவர்களில் சிலருக்கு முழுமையாகக் காது கேட்பதில்லை. அவர்கள் வளரும்போது, மற்றவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைக் கேட்க முடியாததால், பேச்சைக் கற்றுக் கொள்ள முடிவதில்லை. எனவே, ஊமைகளாகி விடுகின்றனர்.


* 'திருவள்ளுவ மாலை' என்பது திருவள்ளுவரால் எழுதப்பட்டதா?

— சு. சாமிநாதன், தேவகோட்டை.

இல்லை. வெவ்வேறு காலங்களில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களால் திருக்குறளைப் பாராட்டி எழுதிய பாடல்களின் தொகுப்பே திருவள்ளுவ மாலை!

* திருக்குறள் ஜப்பான் மொழியில் வெளிவந்திருக்கிறதாமே, மொழி பெயர்த்தவர் பெயர் என்ன?

— மு. இராமலிங்கம், திருச்செந்தூர்.



ஷூஜேசா மட்சுனாகா என்பவர்தான் ஜப்பானில் மொழி பெயர்த்தவர். அந்த மொழி பெயர்ப்பு மதுரையில் உலகத் தமிழ் மாநாடு நடந்த போது வெளிவந்தது. அவரும் அந்த மாநாட்டுக்கு வந்திருந்தார்.

* தற்போது கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினராக இருப்பவர்கள் 15 வயதைத் தாண்டி விட்டால், தொடர்ந்து உறுப்பினராக இருக்க முடியுமா? முடியாதா?

— ஹ. பிரசித் கன்னா, பட்டுக்கோட்டை

ஒரு முறை உறுப்பினராகச் சேர்ந்து விட்டால் என்றும் அவர்கள் உறுப்பினர்தான். ஆனாலும், 15 வயதைக் கடந்து விட்டால் கதை, கவிதை, துணுக்கு எழுதி அனுப்பும் போது, வயதையும் பெயருக்குப் பக்கத்திலே குறிப்பிட்டு அனுப்பினால், தகுதி வாய்ந்தவற்றை பிருந்தாவனக் கதையரங்கம், கவியரங்கம், பிருந்தாவனம் ஆகிய பகுதிகளில் வெளியிடாமல் தனியாக வெளியிடலாம்.

* கடிதம் எழுதும் போது வீட்டில் சிறிய வயதில் மகன் இருந்தால் S/o என்றும், மகள் இருந்தால், D/o என்றும் குறிப்பிட்டு, தகப்பனார் பெயரை எழுதுகிறார்கள். திருமணமான பெண்களாக இருந்தால் W/o என்று போட்டு, அதன் பின் கணவர் பெயரை எழுதுகிறார்கள். இவைகளுக்குத் தமிழில் என்ன போட வேண்டும்?

— சோ. மு. செந்தில்குமார், மேலப் பொன்னகரம்.

மகன் அல்லது மகளாக இருந்தால் S/o, D/o என்ற இரண்டிற்குப் பதிலாக

த/பெ (தகப்பனார் பெயர்) எனக் குறிப்பிடலாம். திருமணமான பெண்ணாக இருந்தால் W/o என்பதற்குப் பதிலாக க/பெ (கணவர் பெயர்) என்று குறிப்பிடலாம்.

* பூரானுக்கு எத்தனை கால்கள்? எண்ணிப் பார்த்தது உண்டா?

— சி. குமார், விழுப்புரம்.

எண்ணிப் பார்த்ததில்லை. ஆனாலும், 30 முதல் 300 கால்கள் வரை இருக்கும் என்று படித்திருக்கிறேன்.

* உலகத்திலே மொத்தம் எத்தனை மொழிகள் இருக்கின்றன என்று கூற முடியுமா?

— என். பரமேஸ்வரி, திண்டிவனம்.

குறிப்பிடத்தக்க மொழிகள் சுமார் 1500 என்கிறார்கள்.

* 'அகிம்சை கோழைகளின் ஆயுதமல்ல; வீரர்களின் ஆயுதம்' என்று கூறிய தலைவர் நேரு மாமாவா, காந்தித் தாத்தாவா?

— க. ராமு, வேதாரண்யம்.

காந்தித் தாத்தாதான். 'Ahimsa is not the weapon of the Coward; it is the weapon of the brave' என்றார் அவர்.

* முற்காலத்தில் இப்போது நாம் உபயோகிக்கிறோமே, அது போல நாணயம் இருந்ததா?

— என். பரமன், செவ்லூர்.

இல்லை. 'பண்டமாற்று' என்ற முறைதான் இருந்தது. பண்டைக்காலத்தில், கற்கள், மாடு, உப்பு, விவசாயக் கருவிகள், மணிகள் முதலியவற்றையே நாணயம் போல் உபயோகப்படுத்தினார்கள். பிறகு, அரசர்கள் நாடுகளை ஆண்டு வந்தபோது அவர்கள் தங்களின் உருவங்கள் அல்லது தெய்வங்களின் உருவங்கள் பொறித்த நாணயங்களை வெளியிட்டார்கள்.

* மிலியன், பிலியன் என்கிறார்களே, அப்படி என்றால் எவ்வளவு?

— கே. ராமப்ரியா, கோவை — 2.



மிலியன் என்பது 10 லட்சம். பிலியன் என்பதை பிரிட்டனிலும் அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளிலும் வெவ்வேறு விதமாகக் கணக்கெடுக்கிறார்கள். பிரிட்டனில் பிலியன் என்பதை மிலியனைப் போல், ஒரு மிலியன் மடங்கு என்கிறார்கள். அதாவது 12 பூஜ்யங்கள் உடையது. பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகளில் பிலியன் என்பதை ஓராயிரம் மிலியன் என்கிறார்கள். அதாவது 9 பூஜ்யங்கள் உடையது.

* பனைமரத்தில் ஆண் மரம், பெண் மரம் என்று இருவகை இருக்கிறதாமே, நிஜமாகவா?

— கே. சங்கரி, கும்பகோணம்.



பனைமரத்தில் மட்டுமல்ல; பேரீச்சை மரத்திலும் ஆண், பெண் என்று இருவகை உண்டு. பெண்மரம்தான் காய்க்கும்.

* வரிக்குதிரை, எந்த எந்த நாடுகளில் வாழ்கிறது?

— பி. என். சேஷன், திருப்பூர் கண்டம்.

அது இயற்கையாக வாழும் கண்டம் ஒன்றே ஒன்றுதான். அது ஆப்பிரிக்காக் கண்டம்தான்.

* மாற்று இருதய ஆபரேஷன் செய்வதாகச் சொல்கிறார்களே, அது எப்போது முதல் முதலாக எங்கே நடந்தது?

— கே. வெங்கோபன், சென்னை — 30.

முதல் முதலாக மாற்று இருதய ஆபரேஷன் நடந்தது 1967 — ஆம் ஆண்டு டிசம்பர் 3 — ஆம் தேதி. தென் ஆப்பிரிக்காவிலுள்ள கேப் டவுன் நகரில் டாக்டர் கிறிஸ்டியான் பர்னார்ட் என்பவர் தலைமையில் 20 டாக்டர்கள் சேர்ந்து 55 வயதான லூயி வாஷ்கன்ஸ்கி என்பவருக்கு, சாலை விபத்து ஒன்றிலே இறந்து போன 24 வயது இளைஞன் ஒருவனது இருதயத்தை எடுத்து வைத்து ஆபரேஷன் செய்தார்கள்.

டாக்டர் பக்கம்

தீப்புண்களுக்கு முதல் உதவி



உதயா என்று ஒரு சிறுமி அரிக்கேன் விளக்கைப் பற்ற வைக்கிறாள். அவசரத்தில் விளக்கைச் சுற்றிச் சிதறியிருக்கும் மண்ணெண்ணெயைக் கவனிக்கத் தவறி விடுகிறாள். தீக்குச்சியை உரசி விளக்கின் திரியைப் பற்ற வைக்கும்போது, சிதறியிருக்கும் எண்ணெயும் தீப்பற்றிக் கொள்ள, அதனால் உதயாவின் கைகளையும் தீ சுட்டு விடுகிறது...

இதோ இன்னொரு காட்சி.

கதிர்வேல் என்றொரு சிறுவன். தீபாவளித் திருநாளில் பட்டாசு வெடிக்கிறான். அவன் பட்டாசுகளை சர்வ அலட்சியமாகவும், அஜாக்கிரதையுடனும் வெடித்துக் கொண்டிருக்கிறான். அப்போது அவனே எதிர்பார்க்காத வகையில் ஒரு பட்டாசு அவன் உள்ளங்கையில் வெடித்துவிட, உள்ளங்கையில் ஓர் ஆழமான தீப்புண் உண்டாகி விடுகிறது...

மற்றொரு காட்சி —

நீலா என்றொரு அன்னை. முதல் நாள் இரவில் காஸ் சிலிண்டரைச் சரியாக மூட மறந்து விடுகிறார்கள். மறுநாள் காலையில் — அடுத்து நடக்கப் போகும் விபரீதம் தெரியாமல் — அந்த அன்னை அடுப்பைப் பற்ற வைக்கப் போக, நெருப்பு அவரையும் சேர்த்துப் பற்றிக் கொள்ள... உடம்பெல்லாம் தீக்காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறார்கள்.

ஆக, குழந்தைகளே! நம் அன்றாட வாழ்க்கையில் தீவிபத்துக்கள் நடப்பதும், தீப்புண்கள் உண்டாவதும் சகஜம் என்பதைப் புரிந்து கொண்டிருப்பீர்கள்.

தீப்புண்கள் என்பது தீயினால் மட்டுமே வரக்கூடியது என்று சொல்வதற்கில்லை. தீ தவிர, கொதித்த வெந்நீர், சூடான எண்ணெய், நீராவி, அமிலங்கள், சூடாக்கப்பட்ட உலோகங்கள் மற்றும் திரவங்கள் போன்றவை நம் உடம்பில் பட்டாலும் தீப்புண்கள் உண்டாகலாம்.

பொதுவாக — தீப்புண்களை நம்மால் அலட்சியம் செய்ய இயலாது. காரணம் — தீப்புண்கள் தரும் வேதனையை நம்மால் தாங்க இயலாது. தீப்புண்களினால் நமக்கு எவ்வளவு தூரம் ஆபத்து என்பது,அது நம் உடம்பில் ஆக்கிரமித்துள்ள இடத்தின் பரப்பையும், ஆழத்தையும் பொறுத்தது. உடம்பின் மொத்தப் பரப்பில் பத்தில் ஒரு பாகத்தை விட அதிகமாகத் தீப்புண்கள் உண்டாகியிருந்தால்,ஆபத்து அதிகம் என்பதை மட்டும் தெரிந்து கொள்ளுங்கள்.

டாக்டர் கு. கணேசன்

சாதாரணமாக, நம் உடம்பில் ஏற்படும் வெட்டுக் காயங்களுக்கும், தீயினால் ஏற்படும் காயங்களுக்கும் ஒரு விசேஷ வேறுபாடு உண்டு. அது என்ன தெரியுமா? வெட்டுக் காயங்கள் சீக்கிரம் குணமாகிவிடும். தீக் காயங்கள் சிக்கிரம் குணமடைவதில்லை. அதற்குக் காரணம் — வெட்டுக் காயங்களில் சருமத்தின் செல்கள் அழிவதில்லை; தீப்புண்களில் சருமத்தின் செல்கள் எரிந்து விடுவதால் புதிய உயிர்ச் செல்கள் உண்டாவதற்குநீண்டநாட்களாகிறது. அதனால்தான் தீப்புண்கள் எந்த அளவிற்கு ஆழமாக இருக்கிறதோ, அந்த அளவிற்கு அவை ஆறுவதற்கும் காலதாமதம் ஆகிறது.

சரி, குழந்தைகளே! தீ விபத்து நடக்கும் போது நீங்கள் அருகில் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அப்போது நீங்கள் என்ன செய்வீர்கள்? தீ பட்டவருக்கு ஏதேனும் ஒரு வகையில் உதவ வேண்டும் என்று எண்ணுவீர்கள், அல்லவா? அவர் தம் வேதனையைக் குறைக்க வழி என்ன என்று தேடுவீர்கள், இல்லையா?

உங்கள் உதவும் எண்ணத்திற்கு உறுதுணையாக இருக்கவே இக்கட்டுரை! கட்டுரையைத் தொடர்ந்து படியுங்கள் —

ஒரு சின்னக் கற்பனை. ஒரு வீட்டில் தீப்பிடித்துக் கொள்கிறது. அப்போது அவ்வீட்டிலிருக்கும் நபரையும் தீப்பற்றிக் கொள்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது நீங்கள் என்ன செய்ய வேண்டும்?



பெரியவர்கள் உதவியுடன், தீப்பற்றிக் கொண்டவரை ஒரு மரக்கம்பால் கீழே தள்ளிவிட வேண்டும். கனத்த போர்வை, சாக்கு அல்லது கம்பளி இவற்றில் ஏதேனும் ஒன்றை எடுத்துதீபற்றிக்கொண்டவரின் உடம்பின் மேல் சுற்றித் தரையில் உருட்ட வேண்டும். இச்செயலை மிக விரைவாகவும், மன தைரியத்துடனும், செய்ய வேண்டும். பயந்து பயந்து மெதுவாகச் சுற்றினாலோ, மெதுவாக உருட்டினாலோ, சுற்றப்படும் துணியிலும் தீ பிடித்துக் கொள்ளும். எனவே, இம்மாதிரி சமயங்களில் நீங்கள் செயலிழந்து விடாமல், வேகத்துடனும், விவேகத்துடனும் செயலாற்றினால், நீங்கள் செய்யும் அந்த உதவி நிச்சயம் தீ பிடித்தவரின் உயிரைக் காப்பாற்றும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை!

— இங்கே இன்னொரு செய்தியையும் கூற வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும்தீ பற்றிக்கொண்டவர்கள் இங்கும் அங்கும் ஓடக் கூடாது. அவ்வாறு ஓடினால் அப்போது உண்டாகும் காற்றின் காரணமாக தீ அதிகமாகுமே தவிர குறையாது. இது மட்டுமல்லாமல் சில சமயங்களில் காலில் மட்டுமே பரவியிருக்கும் தீ, ஓடும் போது செங்குத்தாக எழுந்து முகத்திற்கும் பரவிவிடக் கூடும். எனவே, இந்த ஆபத்துக்களையெல்லாம் முன்னெச்சரிக்கையாக இருந்து தடுப்பதற்காகத்தான் தீ பற்றிக் கொண்டவர்கள் ஓடக் கூடாது; தரையில் படுத்து உருள வேண்டும் என்று சொல்கிறேன்.

— உடம்பில் தீ எரிந்து கொண்டிருக்கும் போது அவசரப்பட்டு அவர் மேல் தண்ணீர் ஊற்றி, தீயை அணைக்க முயலாதீர்கள். இம்முயற்சியினால் தீபிடித்தவரின் உயிருக்கு, ஆபத்து வருமே தவிர அவருக்குப் பலன் உண்டாகாது.

— சரி, குழந்தைகளே! ஒரு வழியாக, தீபிடித்தவரின் உடம்பில் தீயை அணைத்து விட்டீர்கள். அதன்பின்

என்ன செய்வீர்கள்? அதையும் சொல்கிறேன்; கேளுங்கள்.

—தீ பிடித்தவர் நினைவுடன் இருக்கிறாரா? அல்லது, மயக்கத்தில் இருக்கிறாரா என்பதைக் கவனிக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர் மயக்கத்தில் இருந்தால், அவர் தலை தாழ்வாகவும், கால்கள் உயரத்தில் இருக்கும்படியும் மல்லாந்து படுக்க வைக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் அவர் மூளைக்கு அதிக இ ர த் த ம் செல்ல உதவியாக இருக்கும். இதனால் மயக்கம் தெளிய வாய்ப்பு கிடைக்கும்.

— பாதிக்கப்பட்ட நபருக்கு சுத்தமான காற்று நிறையக் கிடைக்க வழி செய்ய வேண்டும். பொதுவாக இம்மாதிரி தீவிபத்து ந ட க் கு ம் இடங்களில் பாதிக்கப்பட்ட நபரை மற்றவர்கள் சூழ்ந்து கொண்டு, காற்று கிடைக்காமல் செய்வார்கள். இது அவர்கள் அறியாமலேயே செய்யும் தவறு. இதை அவர்களுக்கு உணர்த்த, அந்நபருக்குக் காற்று கிடைக்கச் செய்ய வேண்டும்.

—மயக்கநிலையில் உள்ளவருக்குச் சுவாசம் சீராக இல்லையென்றால் முகத்தைச் சற்று மேலே தூக்கி, நாக்கை வெளியே இழுத்து, வாயைத் திறந்து செயற்கை சுவாசம் ஊட்ட வேண்டும். அதேசமயம் மருத்துவருக்கு ஆள் அனுப்பி வரச் சொல்ல வேண்டும்.

— தீ பிடித்தவர் நினைவுடன் இருக்கும் பட்சத்தில் அவருக்கு சர்க்கரை அதிகம் போட்ட பாலோ, காப்பியோ கொடுக்கலாம். வெதுவெதுப்பான அரிசிக் கஞ்சியைக் கொடுக்கலாம். மருத்துவரிடம் செல்லும் வரை இதே போன்று அடிக்கடி நீராகாரம் கொடுக்க வேண்டியது மிக மிக அவசியம்.




— அடுத்தபடியாக தீப்புண்களால் ஏற்படும் வலியைக் குறைக்க ஆஸ்பிரின், அனால்ஜின் போன்ற வலி நிவாரணி மாத்திரைகளைக் கொடுக்கலாம்.

— தீப்புண் உள்ள இடத்தில் மோதிரமோ, வேறு ஏதேனும் ஆபரணங்களோ இருந்தால் உடனடியாக அவற்றை அகற்றிவிட வேண்டும். அம்மாதிரியே தீப்புண்களின் மேல் ஆடைகள் சிதைந்திருந்தாலும், அவற்றை மிகவும் கவனத்துடனும், நிதானமாகவும் அகற்றிவிட வேண்டும். இதன் பின்புதான் நீங்கள் தீப்புண்களுக்கு முதல் உதவி அளிக்க வேண்டும்.

— தீப்புண்களில் மூன்று வகை உண்டு. முதல் வகை, தீப்புண்ணில் தீ பட்ட இடம் சிவந்து காணப்படும். தோல் வெடித்திருக்காது. இவ்வகைப் புண்களால் அதிக ஆபத்தில்லை. இரண்டாம் வகை, தீப்புண்ணில் தோலில் வெடிப்பு ஏற்பட்டுச் சிதைந்து போயிருக்கும்; கொப்புளங்கள் உண்டாகியிருக்கும். நீர் கசிவெடுக்கும். இவ்வகைப் புண்கள் ஆறுவதற்குத் தாமதமாகும். மூன்றாம் வகைப் புண்களில் தோலும், அதன் கீழ் உள்ள திசுக்களும் கருகி விடும். இதனால்தான் உயிருக்கே கூட ஆபத்து வரக் கூடும்.

— முதலில் பாதிக்கப்பட்டவரின் தீப்புண் எவ்வகையைச் சேர்ந்தது என்பதை நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள். தீப்புண் லேசானதாக இருந்தால், குளிர்ந்த நீரை புண் மேல் ஊற்றுங்கள். அல்லது, சுத்தமான துணியைக் குளிர்ந்த நீரில் மூழ்கியெடுத்து முதல் வகைப் புண்கள் மேல் தாராளமாகச் சுற்றுங்கள். இதன் மூலம் தோலில் வெப்பம் குறைந்து தோலுக்கு அடியில் உள்ள திசுக்கள் சிதைவது தடுக்கப்படும்.



— நம்மில் பெரும்பாலோர் தீப்புண் பட்டதும் பேனா மையைத் தடவி விடுவார்கள். இம்முறையால் அதிக பலன் இல்லை. எனவே முதலில் சொன்ன குளிர்ந்த நீர் சிகிச்சை முறையைப் பின்பற்றினால், அதிக பலன் கிடைக்கும்.

— தீப்புண்களுடன் கொப்புளங்கள் தோன்றியிருந்தால் அவற்றை நீங்களாகவே உடைத்து விடாதீர்கள். கொப்புளங்களின் மேல் சுத்தமான துணியை விரித்து அதன் மேல் சமையல் சோடா உப்பைத் தாராளமாகப் பரப்புங்கள். இதன் மூலம் கொப்புளங்களில் உள்ள நீர்ச்சத்து வெளியேறி விடாமல் மீண்டும் உடம்புக்குள் உறிஞ்சப்படும்.

— 'ஜீ. வி. பெயிண்ட்' என்றழைக்கப்படும் **'Gention Violet'** மருந்து கைவசமிருந்தால், தீப்புண்களின் மேல் தடவுங்கள். தற்போது தீப்புண்களுக்கென்றே 'சில்வரெக்ஸ்' **(Silverex)** என்ற நவீன மருந்து வந்திருக்கிறது. அதை வாங்கி உபயோகித்தாலும் நல்ல பலன் கிடைக்கும்.

— பாதிக்கப்பட்ட நபருக்கு மூன்றாம் வகை தீப்புண்கள் ஏற்பட்டிருந்தாலோ, அல்லது தீப்புண்கள் உடம்பின் பல பகுதிகளையும் பாதித்திருந்தாலோ உடனே மருத்துவரை அணுக வேண்டும். தாமதம் செய்தால் உயிருக்கு ஆபத்து வரக்கூடும்.

— அறியாமையின் காரணமாக, சிலர் தீப்புண்களின் மேல் சாம்பல், சாணம், விபூதி போன்றவற்றைப் பூசி விடுவார்கள். இதனால் தீப்புண்களில் தொற்று நோய்க் கிருமிகள் பரவி புண்களில் சீழ் படிந்துவிட வாய்ப்புகள் அதிகமாகும். எனவே, எக்காரணத்தைக் கொண்டும் தீப்புண்களின் மேல் மேற்சொன்னவற்றைப் பூசுவதற்கு அனுமதி அளிக்காதீர்கள்.

— சோதனைச் சாலைகளில் பயிலும் போது உடம்பில் அமிலம் பட்டு விடலாம். அம்மாதிரிச் சமயங்களில் அமிலம் பட்ட இடத்தை உடனே குளிர்ந்த நீரில் மூழ்கச் செய்ய வேண்டும். இதை உடனுக்குடன் செய்தால்தான் அமிலத்தின் வீரியம் குறைந்து புண்களை உண்டாக்காது. இதையே காலம் தாழ்த்திச் செய்தால், எந்தவித பலனும் அளிக்காது.

— நீங்கள் தீப்பிடித்த நபருக்கு முதலுதவி செய்து கொண்டிருக்கும் போதே பாதிக்கப்பட்ட நபருக்கு முறையான மருத்துவச் சிகிச்சை கிடைப்பதற்காக, மருத்துவரை அழைத்து வருவதற்கோ, அந்நபரை மருத்துவரிடம் அழைத்துச் செல்வதற்கோ ஏற்பாடுகள் செய்துவிட வேண்டும். ஏனென்றால், மருத்துவரால்தான் தீயினால் பாதிக்கப்பட்டவருக்கு முழுமையாக சிகிச்சை தர இயலும்.

— கடைசியாக ஒரு வார்த்தை — நடந்து போன தீவிபத்து ஏன் நடந்தது? என்பதைக் கண்டறிந்து, இவ்விபத்து மீண்டும் நடந்து விடாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுங்கள்!

எதையும் வரும் முன் காப்பதே சிறப்பு!

சரியா, குழந்தைகளே?



காரணம் என்ன?

க. இராமலிங்கம்

ஆசிரியர் ஒவ்வொரு மாணவனின் பெயரையும், அந்த மாணவன் எடுத்த மதிப்பெண்ணையும் சொல்லிக் கொண்டே விடைத் தாள்களைக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

ஆனந்தன் கணக்கில் 98 மதிப்பெண் பெற்று வகுப்பில் முதல் மாணவனானான். சம்பத் நன்றாகப் படிப்பவன்தான். ஊரில் பெரிய தனவந்தரின் மகன். வகுப்பாசிரியரிடமே தனிப் பாடம் படிக்கிறான். அவன் கணக்கில் 69 மார்க்குகளே எடுத்திருந்தான். காரணம் என்ன?

சம்பத்தின் முகம் வாடியதை ஆசிரியர் தெரிந்து கொண்டார். சம்பத்தை தனியாக அழைத்து அவனுடன் பேசினார்.

"நீ கணக்கில் ஆனந்தனை விடக் குறைவான மதிப்பீடுகள் பெற்றதற்காகத்தானே வருந்துகிறாய்? உன் மீது தவறு இல்லை. கணக்குகளை விரைவில் போட்டு முடிக்க வேண்டும் என்ற அவசரத்தில் சிறு தவறுகள் செய்து விட்டாய். சற்று நிதானமாகச் செய்திருந்தால், நீ ஆனந்தனை விட அதிக மதிப்பெண்கள் பெற்றிருக்கலாம்."

"ஆனந்தன் ஏழைச் சிறுவன். வீட்டில் அவனுக்கு நிறைய வேலைகள் இருக்கும். படிக்கும் நேரம் மிகவும் குறைவு. அவன் மட்டும் எப்படி கணக்குகளைச் சரியாகச் செய்தான்?"

"நல்ல கேள்வி. ஆனந்தன் கணக்குகளைப் பலமுறை போட்டுப் பார்க்கிறான். அத்துடன் வகுப்புத் தோழர்கள் நிறையப் பேர் அவனிடம் கணக்கில் சந்தேகம் கேட்கிறார்கள். அவர்களுக்குப் புரியும்படி பலமுறை கணக்குகள் போட்டு சொல்லித் தருகிறான். அதனால் அவை போன்ற கணக்குகளை அவனால் எளிதில் செய்ய முடிகிறது. அவனுக்குச் சந்தேகம் வரும் பொழுது மாணவர்களுடன் என்னிடம் வருவான். நான் சந்தேகத்தைத் தீர்ப்பேன். அதை அவன் புரிந்து கொண்டு சக மாணவர்களுக்கு நன்றாக விளக்குவான்."

"நீங்கள் கணக்குகளை நன்றாகத்தானே நடத்துகிறீர்கள்? நன்கு படித்த நீங்கள் சொல்லிக் கொடுக்காததை ஆனந்தன் மட்டும் என்ன ஸ்பெஷலாகச் சொல்லிக் கொடுத்து விடுவான்?"

"நீ நினைப்பது ஒருவிதத்தில் சரி என்று ஒப்புக் கொண்டாலும், ஒரு விதத்தில் உன் கருத்து தவறு. நான் வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும்தான் கணக்குச் சொல்லிக் கொடுக்கிறேன். ஆனால், நீயும் ஆனந்தனும் புரிந்து கொள்கிற

மாதிரி மற்ற எல்லா மாணவர்களும் புரிந்து கொள்கிறார்களா? எல்லாருக்குமே உடனே விளங்கி விடாது. சிலருக்கு, கணக்கில் ஆர்வம் இருக்கும். சிலருக்கு ஆங்கிலத்தில் ஆர்வம் அதிகம். கணக்கில் ஆர்வம் இல்லாதவர்கள் சுலபமாகக் கணக்கினைப் புரிந்து கொள்ள மாட்டார்கள். சிலருக்கு மாதிரிக் கணக்குப் போட்டதும் புரியும். சிலருக்கு 4, 5 கணக்குகள் போட்டுப் பார்த்தால்தான் புரியும். சற்று மந்தமாக இருப்பவர்களுக்கு அவ்வளவு சீக்கிரத்தில் புரியாது. வகுப்பில் சரியாகப் புரிந்து கொள்ளாதவர்கள் ஆனந்தனை அணுகி சொல்லித் தரும்படி கேட்கிறார்கள்.''

''அவர்களுக்குப் புரியா விட்டால் உங்களிடமே வந்து சந்தேகத்தைப், போக்கிக் கொள்ளலாமே. ஏன் சார், ஆனந்தனிடம் போகிறார்கள்?''

''சம்பத்! உனக்கு ஒருமுறை சொல்லிக் கொடுத்ததும் விளங்கி விடுகிறது. என் வேலை சுல்பமாகி விடுகிறது. பலமுறை சொல்லிக் கொடுத்தும் புரியாமல் ஒரு மாணவன் விழிக்கலாம். ஆனாலும், என்னைத் திரும்பத் திரும்பக் கேட்க அச்சம். நான் திட்டுவேனோ என்று நினைப்பான். எனவே, என்னிடம் மீண்டும் சந்தேகம் கேட்பதற்குப் பயப்படுகிறார்கள். ஆனந்தன் ஒரு தோழனாக, சக மாணவர்களுக்கு இயற்கையில் என்னென்ன சந்தேகங்கள் எழுமோ அவற்றைப் போக்கும்விதத்தில்சொல்லிக்கொடுக்கிறான். மேலும் சந்தேகம் இருந்தால் கூட தைரியமாக ஆனந்தனிடம் கேட்டுத் தெளிவடைவார்கள்.''

''ஆனந்தனை இதுநாள் வரை தவறாக நினைத்து விட்டேன். இப்போதுதான் எனக்குப் புரிகிறது சார்.''

''அது மட்டுமல்ல சம்பத். 'கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக' என்ற குறள்படி நாம் மட்டும் நிறைய மதிப்பெண்கள் பெற வேண்டும் என்று நினைக்காமல் அடுத்தவர்களுக்கும் சொல்லிக் கொடுத்து அவர்களையும் நிறைய மதிப்பெண்கள் வாங்கச் செய்ய ஆனந்தன் பாடுபடுகிறான். அவனை நாம் பாராட்டத் தானே வேண்டும்.''

''ஐயா, நானும் நாளை முதல் கணக்கு மட்டுமன்றி, எல்லாப் பாடங்களிலும் சக. மாணவர்களின் சந்தேகங்களைத் தீர்த்து வைக்க முடிவு செய்து விட்டேன்.''

''நன்றே செய்க. அதை இன்றே செய்க என்று படித்ததை மறந்து விட்டாயா?''

''சரி ஐயா! இன்றே ஆரம்பித்து விடுகிறேன். நன்றி ஐயா!''



ரோட்டரி-பிலிப்ஸ் போட்டிகள்

ரோட்டரியும் பிலிப்ஸும் இணைந்து சிறுவர்க்கான ஓவியப் போட்டி, பேச்சுப் போட்டிகளை சென்ற டிசம்பர் 11 – ஆம் தேதி நடத்தியது.

தமிழ்ப் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற இந்து மேல்நிலைப் பள்ளி மாணவன் வி. எஸ். முரளீதரனும், ஆங்கிலப் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற சிஷ்யா மாணவி ஷிவானி தயாளும் பரிசு பெறுகிறார்கள்.



சரோஜினி தேவி

நம் தேசத்தின் கவியரசி எனப் புகழ்பெற்றவர் சரோஜினி தேவி. ஐதராபாத்தில் பிறந்த இவருடைய தந்தையாரான அகோரநாத் சட்டோபாத்தியாயா என்பவர் இங்கிலாந்தில் படித்து டாக்டர் பட்டம் பெற்றவர். இவருடைய தாயார் வங்காள மொழியில் பல கவிதைகளை இயற்றியவர்.

பதினோராம் வயதிலே கவிதை பாடியவர் சரோஜினி தேவி! கணக்குப் போட வராமல் திணறிய போது, இவருக்குக் கவிதை பிறந்தது! 13—ஆம் வயதில் 1300 வரிகள் கொண்ட 'ஏரியின் மங்கை,' (Lady of the Lake) என்ற கவிதையை எழுதிப் புகழ் பெற்றார்.

அதே ஆண்டில், இவர் நோய் வாய்ப்பட்டுப் படுக்கையில் இருந்தார். அப்போது 2000 வரிகள் கொண்ட ஒரு நாடகத்தை எழுதி முடித்தார்.

12 — ஆவது வயதில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் மெட்ரிகுலேஷன் தேர்வில் மாகாணத்திலேயே முதல்வராகத் தேறினார். பிறகு 16 — ஆம் வயதில் இங்கிலாந்து சென்று மேற்படிப்புப் படித்தார்.

1915 — ஆம் ஆண்டு மகாத்மா காந்தியை இவர் லண்டனில் சந்தித்தார். அது முதல் அவருடன் சேர்ந்து தேசவிடுதலைக்காகப் பாடுபட்டார். உப்பு சத்தியாக்கிரகத்திலும், லண்டனில் நடந்த வட்டமேஜை மாநாட்டிலும் காந்திஜியுடன் கலந்து கொண்டார். தனி நபர் சத்தியாக்கிரகத்திலும் கலந்து கொண்டு சிறை சென்றார்.

நம் நாடு விடுதலை பெற்றதும், உத்தரப் பிரதேச கவர்னராகப் பொறுப்பேற்றார். அப்பதவியிலிருக்கும் போதே காலமானார்.



கா. நமச்சிவாய முதலியார்

வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள காவேரிப்பாக்கம் என்ற ஊரில் பிறந்த இவர், பெரும்புலவராக விளங்கியதோடு, பல புலவர்களை ஆதரித்த வள்ளலாகவும் விளங்கினார்.

பல பள்ளிகளிலே தமிழாசிரியராகப் பணிபுரிந்த இவர், ராணி மேரி கல்லூரியிலும், அதன் பிறகு சில ஆண்டுகள் சென்னை மாநிலக் கல்லூரியிலும் தமிழ்த் தொண்டு புரிந்தார். 1920 — ஆம் ஆண்டு முதல் 14 ஆண்டுகள் தொடர்ந்து அரசினரின் தமிழ்க் கல்விச் சங்கத் தலைவராகத் திகழ்ந்தார்.

'நல்லாசிரியர்' எனப் புகழ்பெற்ற இவர், 'நல்லாசிரியன்' என்னும் மாதப் பத்திரிகையையும் நடத்தி, பள்ளி ஆசிரியர்களுக்கு நல் வழி காட்டினார். முதல் வகுப்புப் பாடநூலிலிருந்து ஒன்பதாம் வகுப்புப் பாடநூல் வரை மாணவர்கள் விரும்பும் வகையில் அவர்களுக்குத் தேவையான நூல்களைத் தொடர்ந்து எழுதிப் புகழ் பெற்றார். அப்பாட நூல்களுக்காக இவர் எழுதிய பல பாடல்கள் மிகச் சிறப்பாக அமைந்தன.

பிருதிவிராஜன், கீசகன் என்ற நாடகங்களை எழுதி, மாணவர்களைக் கொண்டு நடிக்கச் செய்தார். பல தமிழ் நூல்களுக்கு உரை எழுதினார். பல பண்டைய இலக்கியங்களை நல்ல முறையில் பதிப்பித்து வெளியிட்டார். தமிழாசிரியர்கள் தனித் தேர்வு எழுதி 'வித்துவான்' பட்டம் பெறவும், அவர்களின் ஊதியம் உயரவும் அரும்பாடுபட்டார்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ் கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 4 3154 3, 4 34 157.
ஆறு மாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால்: ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 36/—; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—.



கா. நமச்சிவாய முதலியார்

தோற்றம் - 20.2.1876 மறைவு-13.3.1936.

Registered as a Newspaper in Sri Lanka

